


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆகஸ்டு 1, 2013 | புரட்சி 12 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00


# தீண்டாமை குற்றங்கள்: நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை இடை நீக்கம் செய்க!

## கழகம் வழக்கு; உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பு

***தீண்டாமை வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தாமல் அலட்சியப்படுத்திய காவல்துறை, நிர்வாகத் துறை உயர் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தொடரப்பட்ட இந்த வழக்கை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை அதிகாரி உட்பட அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் 'நோட்டீசு' பிறப்பித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.***

திராவிடர் விடுதலைக் கழக கோவை மாநகர மாவட்ட தலைவர் வழக்கறிஞர் என்.பன்னீர் செல்வம், கழக சார்பில் உயர்நீதின்றத்தில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார். கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் கோவை மாவட்டம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, காரமடை பகுதிகளில் கள ஆய்வு நடத்தி, தீண்டாமை வன்கொடுமைகளை செயல்படுத்தும் தேனீர்க் கடை, முடிதிருத்தும் கடைகள், பேக்கரிகளைக் கண்டறிந்தது. அந்தக் கடைகளின் பெயர்களும் மனுவில் பட்டியலிடப்பட்டுள்ளது. பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் முத்துக் கருப்பண்ணன் வீட்டின் எதிரிலும், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் தினகரன் வீட்டின் எதிரிலும் 'இரட்டைக் குவளை' தேனீர்க் கடைகள் இருப்பதும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வழக்கு மனுவில் மேலும் இடம் பெற்றுள்ள கருத்துகள்:

இந்த வன்கொடுமைகளை சுட்டிக்காட்டி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கழக சார்பில் புகார் அளிக்கப்பட்டது (26.3.2012). அவர் புகார் மனுவை பொள்ளாச்சி வருவாய்க் கோட்ட அலுவலகத்துக்கு அனுப்பிவிட்டார். நடவடிக்கை ஏதும் எடுக்கப் படாத நிலையில் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் மனு தரப்பட்டது (29.4.2013). மாவட்ட ஆட்சித் தலைவர் புகார் மனுவை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி நல அதிகாரிக்கு அனுப்பினார், (20.5.2013) நடவடிக்கை ஏதும் இல்லை. மீண்டும் நடவடிக்கைக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது (17.6.2013). இந்தச் செய்தி, 'இந்து', 'டெக்கான் கிரானிக்கல்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடுகளில் வெளி வந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்குப் பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்காதது அரசியல் சட்டப் பிரிவு 14 மற்றும் 21க்கு எதிரானது. எனவே சட்டம் வழங்கியுள்ள 226 பிரிவைப் பயன்படுத்தி, நீதிமன்றம் வருவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே உச்சநீதிமன்றம் வழங்கிய முக்கிய தீர்ப்பின் அடிப்படையில் இந்த வழக்கு தொடரப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 'ஜல்லிக்கட்டு' நடந்த போது ஜாதி சொல்லி திட்டியதாக ஆறுமுகம் சேர்வைக்கும், தமிழ்நாடு அரசுக்குமிடையே நடந்த வழக்கில் உச்சநீதிமன்றம் முக்கிய தீர்ப்பு ஒன்றை அளித்தது (19.4.2011). அதில் உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட கருத்துகளைப் பதிவு செய்தது.

1. தமிழ்நாட்டில் தீண்டாமை வன்கொடுமைகளான இரட்டை தம்ளர் போன்ற வன்கொடுமைகள் பரவலாக இருந்து வருகிறது.
2. இது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமாகும். வன்கொடுமைகளைப் பின்பற்று வோர் மீது கிரிமினல் வழக்குத் தொடர்ந்து, கடும் தண்டனை வழங்கப்படவேண்டியது சட்டபூர்வ கடமை.

**அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்**

3. இந்த வன்கொடுமைகளைத் தடுக்காமலும் நடப்பது தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமலும் இருப்பதற்கு நிர்வாக அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் பொறுப்பு உண்டு. உரிய தடுப்பு செயல்பாடுகளை மேற்கொள்ளாத அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளில் நடக்கும் தீண்டாமை வன்கொடுமைகளுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.
4. தீண்டாமை வன்கொடுமையை செயல்படுத்து வோர் மீது கிரிமினல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதும், இவைகளைத் தடுக்காத மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை கண்கணிப்பாளர் மீது மாநில அரசு அவர்களை இடை நீக்கம் செய்து, வழக்குப் பதிவு செய்து, பிறகு துறை ரீதியான நடவடிக்கைகளைத் தொடர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் திட்டவட்டமாக கூறி யுள்ளது.

அத்துடன் உச்சநீதிமன்றமே இந்தத் தீர்ப்பின் நகலை தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர், உள்துறை செயலாளருக்கு அனுப்பி, மாவட்ட காவல்துறை, நிர்வாகத் துறை அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பிட பணித்தது. அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் இந்த தீர்ப்பின் நகல் அனுப்பப்பட்டது. கோவை மாநகர மாவட்ட கழகத் தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனுவில் இவை அனைத்தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகளை உடனடியாக பதவி நீக்கம் செய்து, கடமையாற்றத் தவறியவர்கள் மீது உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்ற தீர்ப்பை சுட்டிக்காட்டி வழக்கு மனுவில் கோரப்பட் டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி ராஜேஷ் குமார் அகர்வால் மற்றும் நீதிபதி சத்யநாராயணன் அமர்வு முன் 25.7.2013 அன்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், எதிர்வாதிகளாக குறிப்பிட்டுள்ள தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட தாழ்த்தப்பட் டோர், மற்றும் பழங்குடி நல அதிகாரி ஆகியோ ருக்கு விளக்கம் கேட்டு குறிப்பாணைப் (நோட்டீசு) பிறப்பிக்க உத்தரவிட்டனர். வழக்கு 21.8.2013 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கழக சார்பில் வழக்கறிஞர் சரவணன் உயர்நீதிமன்றத்தில் வாதாடினார்.

**– நமது செய்தியாளர்**

## சமூக நீதி போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி!
## சி.பி.அய். விசாரணை வளையத்தில் அய்.அய்.டி.

சென்னை அய்.அய்.டி. என்ற உயர்கல்வி நிறுவனம் இப்போதுதான் நீண்டகால போராட்டத்துக்குப் பிறகு சி.பி.அய். விசாரணை வரம்புக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. முழுமையான அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பார்ப்பனர்கள் பல்லாயிரம் கோடி பணம் புரளக்கூடிய இந்த நிறுவனத்தில் தங்களுக்கான தனி அரசையே நடத்தி வந்தார்கள். 1997 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, (இணைப்புகளுக்கு முந்தைய) பெரியார் திராவிடர் கழகம் தொடர் போராட்டங்களை நடத்தி, அய்.அய்.டி. சமூக அநீதிகளை அம்பலப்படுத்தி வந்தது. பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைப் போராட்டங்கள், விளக்கக் கூட்டங்கள், சுவரொட்டி இயக்கங்கள் நடத்தப்பட்டன. பலமுறை ஆனூர் ஜெகதீசன், விடுதலை இராசேந்திரன் தலைமையில் தோழர்கள் பல முறை கைது செய்யப்பட்டார்கள்.

சுமார் 160 பேராசிரியர்களிடையே தாழ்த்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க முடியாது. அதிசயமாக இரண்டு பிற்படுத்தப்பட்ட பேராசிரியர்கள் மட்டுமே பணியாற்றி வந்தனர். அதில் ஒருவர், கணிதத் துறையில் இணைப் பேராசிரியரான வசந்தா ஆவார். அய்.அய்.டி. பார்ப்பனர்கள் அத்தனை பேரையும்விட அறிவில் சிறந்த விஞ்ஞானி. சர்வதேச ஆய்வேடுகளில் மற்ற எல்லோரையும்விட அதிக அளவில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர், கணித நூல்களையும் எழுதியவர். பார்ப்பன ஆதிக்கக் கோட்டையில அந்தப் பெண் ஒருவர்தான் 'அரிமா'வாக துணிச்சலோடு போராட முன் வந்தார். தான் ஒரு பார்ப்பன எதிர்ப்பாளர் என்பதை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தினார். நீதி கேட்டு நீதிமன்றங்களின் படிக்கட்டுகளை ஏறினார். பெரியார் திராவிடர் கழகம் அவரது பார்ப்பன எதிர்ப்பு சமூக நீதி போராட்டத்துக்குப் பின்னால் உறுதியுடன் நின்றது.

பெரியார் திராவிடர் கழகப் போராட்டத்துக்குப் பிறகுதான் முதன்முதலாக ஒரு தலித் பேராசிரியர் அண்ணா பல்கலையிலிருந்து பதிவாளராக நியமனமானார். ஆந்திர மாநிலத்திலேயே பிளஸ் டூ தேர்வில் முதலிடம் பெற்று, அய்.அய்.டி.யில் படிக்க வந்த சுஜி என்ற பழங்குடிப் பெண், 'தயாரிப்புத் தேர்விலேயே' (Preparatory Course) அய்.அய்.டி. பார்ப்பனர்களால் அநியாயமாக திட்டமிட்டு தோல்வியடையச் செய்யப்பட்டார். பெரியார் திராவிடர் கழகம் அதில் தலையிட்டு நடத்திய போராட்டமே அந்தப் பெண்ணை மீண்டும் அய்.அய்.டி.யில் சேர்க்க வைத்தது. அய்.அய்.டி. வரலாற்றிலேயே அவர்களால் துரத்தப்பட்டவர்கள் மீண்டும் சேர்க்கப்பட்டது அதுவே முதல்முறை. 'அய்.அய்.டி.'க்குள் விடுதலைப் புலிகள் நுழைந்து விட்டார்கள் என்று, கழகத்தை எதிர்த்து பார்ப்பன சுப்ரமணியசாமி வழியாக அய்.அய்.டி. பார்ப்பனர்கள் அறிக்கை வெளியிட வைத்தனர்.

இப்படி எவ்வளவோ செய்திகளை சுட்டிக்காட்ட முடியும். ஆனாலும் வசந்தா அவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வை வழங்குவதில் மட்டும் அந்த நிர்வாகம் பணிய மறுத்தது. இப்போது அந்தக்

(4 ஆம் பக்கம்)

# எழுச்சி நடை போடுகிறது - 'சுயமரியாதை-சமத்துவப்' பரப்புரை




*மயிலாடுதுறையில் தொடங்கிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரைப் பயணம் – மக்களை சந்தித்து, சாதி எதிர்ப்பு மற்றும் பார்ப்பனியத்தின் சமுதாய பொருளாதார சுரண்டல் கொள்கைகளை விளக்கி வருகிறது. மக்கள் திரண்டு கருத்துகளைக் கேட்கிறார்கள். கழகத் தலைவர், பொதுச் செயலாளர் தோழர்களோடு பயணத்தில் பங்கேற்று வருகிறார்கள்.*

*பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:*

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக சுயமரியாதை சமதர்ம பரப்புரைப் பயணம் 24.07.2013 அன்று மயிலாடுதுறையில் தொடங்கி தொடர்ச்சியாக 20 நாட்கள் 20 மாவட்டங்கள் வழியாகச் சென்று, தினசரி 2 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் இரவு பொதுக்கூட்டம் என்ற அடிப்படையில் நடைபெற்று வருகிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் இரண்டா மாண்டு தொடக்க நாளான 12.08.2013 அன்று புதுச்சேரி அரியாங் குப்பத்தில் நிறைவடைய உள்ளது..

24.07.2013 மாலை 6 மணிக்கு மயிலாடுதுறை சின்னக் கடைத் தெருவில் பறைமுழக்கத்துடன் பரப்புரையின் தொடக்க நிகழ்வுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பார்ப்பனியத்தின் வடிவங்களான பெண்ணடிமை, சாதிய ஒடுக்குமுறை, கருவறைத் தீண்டாமை போன்ற பல்வேறு நிகழ்வுகளை விளக்கும் வீதி நாடகம் நடைபெற்றது. சாலையின் இருமருங்கிலும் ஏராளமான மக்கள் வீதி நாடகத்தைக் கண்டு களித்தனர். பிறகு தொடங்கிய பொதுக் கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் தெ.மகேசு தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் மகாலிங்கம் வரவேற்புரையாற்றினார். கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொருளாளர் ஈரோடு ப.இரத்தின சாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். தமிழர் உரிமை இயக்கத்தைச் சார்ந்த சுப்பு. மகேசு, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்த தனவேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக பரப்புரையின் நோக்கங்கள் குறித்து கழகத்தின் பொதுச் செயலாளார் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரை யாற்றினர். மாவட்டப் பொருளாளர் ந. விஜய ராகவன் நன்றி கூறினார்.

25.07.2013 - நண்பகல் 12 மணிக்கு பேரளம் பேருந்து நிறுத்தத்தில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் பறைமுழக்கத்துடன் தொடங்கியது. கழகத்தின் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் பரப்புரையின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார். தோழர்கள் உண்டியல் ஏந்தி துண்டறிக்கைகளை விநியோகித்து நிதிவசூல் செய்தனர்.

மதியம் 2 மணிக்கு திருவாரூர் பேருந்து நிலையத்தில் பறைமுழக்கம் மற்றும் வீதிநாடகம் நடைபெற்றது. கழக ஆதரவாளர் ஜாகீர் ரூ.100 அன்பளிப்பாக வழங்கினார். திருவாரூர் பேருந்து நிலைய ஆட்டோ ஓட்டுநர்கள் சார்பாக ரூ. 60 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் தோழர் சிவக்குமார் உரையாற்றினார். மதியம் 3 மணிக்கு திருவாரூர் நகராட்சி பூங்காவில் தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு உண்டனர்.

மாலை 6 மணிக்கு மன்னார்குடி பந்தலடியில் சட்ட எரிப்புப் போராளி புதுக்குடி P. ரெங்கசாமி நினைவு மேடையில் பொதுக்கூட்டம் நடை பெற்றது. திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் தோழர் காளிதாசு தலைமை தாங்கினார். நகர செயலாளர் மா. மணிகண்டன் வரவேற்புரையாற்றினார். தாளாண்மை உழவர் இயக்கத்தின் தோழர் பொறியாளர் திருநாவுக்கரசு, அகில இந்திய தலித் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜே.ஆர்.எஸ். பாவண்ணன், திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தை எவ்வாறெல்லாம் சுரண்டி நம் வளத்தைக் கொள்ளையடிக்கின்றன என்பது குறித்து விளக்கிப் பேசினார். சிறப்புரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பரப்புரையின் நோக்கங்கள் குறித்தும், பிற்படுத்தப்பட்ட மக்கள் பார்ப்பனியத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்பது குறித்தும் விளக்கிப் பேசினார். ஆதிக்கசாதி என்று கருதப்படுகிற சாதியில் இருக்கக்கூடிய சாதிய எதிர்ப்பாளர்கள், சாதிவெறியர்களுக்கு எதிராக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, சாதித் தலைவர்களின் முகமூடியைக் கிழிக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். தோழர்கள் துண்டறிக்கை விநியோகித்து ஒவ்வொரு கடையாகச் சென்று நன்கொடை வசூல் செய்ததில் ரூ.4500/- வசூலானது.

26.07.2013 - காலை 11 மணிக்கு வடசேரி பேருந்து நிலையத்தில் கொளுத்தும் வெயிலில் பறைமுழக்கம் வீதி நாடகத்துடன் தெருமுனைக் கூட்டம் தொடங்கியது. தன் ஆதிக்க வெறியால், தாழ்த்தப்பட்ட மக்களை கோவிலுக்கு வெளியே நிறுத்தி விட்டு, கருவறைக்குள் நுழைய முற்பட்டு பார்ப்பானிடம் கேவலப்படும் உயர்சாதிக்காரனின் ஆதிக்க வெறியை உடைத்தெறியும் வகையில் நடத்தப்பட்ட வீதி நாடகத்தை பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். பிறகு திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர். கொளத்தூர் மணி பயணத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.. ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் தோழர் சிவ சுப்பிரமணியன் நன்றியுரை கூறினார்.

நண்பகல் 12 மணிக்கு மதுக்கூர் பேருந்து நிலையத்தில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் ஆங்காங்கே கடைகளில் நின்று கொண்டு உரையைக் கேட்டனர்.. பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் உரையாற்றினார். தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயண நோக்கங்கள் குறித்து உரையாற்றினார்.

மதியம் 2 மணிக்கு தஞ்சை மாவட்ட அமைப்பாளர் தோழர் பாரியின் இல்லத்தில் தோழர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது.. உணவுக்குப் பின் தோழர்கள் அனைவரும் தோழர் பாரியின் தோட்டத்தில் ஓய்வு எடுத்தனர். ஓய்வு வேளையிலும் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தினர் தங்களது சிலம்புப் பயிற்சியைத் தொடர்ந்தனர். பயிற்சியாளர் தோழர் ஆனந்த் மிகச் சிறந்த முறையில் தோழர்களை அரவணைத்து பயிற்சி கொடுத்தார்.

மாலை 4 மணிக்கு பட்டுக் கோட்டை நகரத்தில் தெருமுனைப் பரப்புரை நடைபெற்றது. பட்டுக் கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரி சிலை அருகில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அறிவியல் மன்ற அமைப்பாளர் தோழர் சிவக்குமார், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

மாலை 6 மணிக்கு பேராவூரணி அண்ணா சிலை அருகில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் பெருந்தொண்டர் ரெ.சா. இளவரசன் பெயரில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. மாவட்ட அமைப்பாளர் கு. பாரி தலைமை வகித்தார். ஒன்றிய அமைப்பாளர் சித. திருவேங்கடம் வரவேற்புரை யாற்றினார். முன்னதாக பள்ளத்தூர் நாவரசன் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பெரம்பலூர் தாமோதரன் "மந்திரமல்ல தந்திரமே" என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடத்தினார். முனைவர் மு.ஜீவானந்தம், புதுக்கோட்டை பாவண்ணன் ஆகியோர் உரை யாற்றினர். தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளார் அரங்க. குணசேகரன், திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரை யாற்றினர். இறுதியாக கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளர் சிவசுப்பிரமணி நன்றி கூறினார்.

27.07.2013 - காலை 11 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பேருந்து நிலையத்தில் பறை முழக்கம், வீதி நாடகத்துடன் பரப்புரை தொடங்கியது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் பூபதி. கார்த்திகேயன் வரவேற்புரை யாற்றினார். கழக சொற்பொழிவாளர் முனைவர் ஆ.ஜீவானந்தம் அய்யப்பன் தோன்றிய வரலாறு குறித்தும், ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்ததாகச் சொல்லப்படும் அய்யப்பனை கடவுள் என்று கும்பிடும் இந்த சமூகம், தர்மபுரியில் ஒரு ஆணும் பெண்ணும் காதலித்து மணம் புரிந்து கொண்டதை ஏற்க மறுத்த சாதி வெறியர்களால் நிகழ்த்தப்பட்ட வெறியாட்டங்கள் குறித்து இடித்துரைத்தார். தொடர்ந்து பேசிய தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் முகமது சாதிக் முஸ்லிம்கள் என்பவர்கள் ஏதோ அரேபியாவிலிருந்து வந்தவர்களல்லர். இந்து மதத்தில் இருக்கிற சாதிய ஒடுக்குமுறை தாங்காமல் மதம் மாறிய தலித்துகளும் பிற்பட்டோரும் தான் இன்றைக்கு இருக்கக் கூடிய முஸ்லிம்கள் என்று கூறினார். சிபிஅய் (எம்.எல்.) இயக்கத்தின் ஒன்றிய செயலாளர் வைசி. கலைச்செல்வன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்புரையாற்றிய கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி பரப்புரையின் நோக்கங்கள் குறித்தும், சமூக இழிவுகள் குறித்தும் விளக்கி, அதனை எதிர்த்துப் போராட திராவிடர் விடுதலைக் கழகம் முன்னெடுக்கிற போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத் தோழர்கள் சார்பில் தோழர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டது.

பரப்புரை வாகனத்தில் ஒட்டப்பட்டிருந்த செய்திகளை மக்கள் ஆர்வத்துடன் படித்தனர். சிலர் இட ஒதுக்கீடு பற்றிய புள்ளி விவரங்களை

(4 ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

வினா: ஹன்சிகாவை காதலிக்கிறேன், எங்கள் திருமணம் நிச்சயம். – **நடிகர் சிம்பு அறிவிப்பு**

விடை : ஒன்றும் பிரச்சினை இல்லை. இது சினிமா திருமணம்தான் – நாடகத் திருமணம் என்றால் தான் எதிர்ப்பு வரும்!

வினா : சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகளாகியும் கொத்தடிமைகள் ஒழிப்புக்கு சட்டம் வந்து, 30 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கொத்தடிமை ஒழியவில்லையே. – **உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அகர்வால் வேதனை**

விடை : கொத்தடிமைகள், கொத்தடிமைகளாகவே வாழ்வதற்கு சுதந்திரம் வழங்கியிருக்கிறோமே! இது சாதனையல்லவா!

வினா : கிராமப்புறங்களில் ஒரு நாளைக்கு 27 ரூபாயும், நகரங்களில் 33 ரூபாயும், சம்பாதிப்பவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வரமாட்டார்கள் என்று திட்டக்குழு கூறியுள்ளது. இவர்கள் என்ன அளவுகோலைப் பயன்படுத்துகிறார்கள் என்பது எனக்கு எப்போதுமே விளங்கு தில்லை. – **காங்கிரஸ் செயலாளர் திக் விஜய்சிங்**

விடை : உங்களுக்கு மட்டுமா? வறுமைக் கோட்டுக்கே விளங்கவில்லை, சார்!

வினா : ஆர்.எஸ்.எஸ். ஜாதி பாகுபாடு பார்ப்பது இல்லை. – **பா.ஜ.க. தாழ்த்தப்பட்டோர் முன்னணி கூட்டத்தில் அத்வானி**

விடை : அத்வானி ஜி, நீங்கள் இப்படிப் பேசியதே பா.ஜ.க.வின் ஜாதிப் பிரிவான தாழ்த்தப்பட்டோர் முன்னணிக் கூட்டத்தில் தான்; மறந்து விட்டீர்களா?

வினா : ஜூலை 27ஆம் தேதி அதிகாலை 3 மணியிலிருந்து 6 மணி வரை 180 நிமிடங்களில் 46,120 பக்தர்கள் ஏழுமலையானை வழிபட்டார்கள். – **தினமணி செய்தி**

விடை : தரிசனம் எப்படி நடந்திருக்கும்? மாமா வந்திருக்காக... மச்சான் வந்திருக்காக... சித்தப்பா வந்திருக்காக... மின்னலு... வாம்மா... என்ற வடிவேலு காமெடி பாணியில்தான்!

வினா : பாலவாக்கத்தில் செல்வ வினாயகன் கோயிலில் வினாயகன் முன் இருந்த உண்டியலை பட்டப் பகலில் திருடிச் சென்றுவிட்டனர். நீலாங்கரை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர். – **செய்தி**

விடை : மறக்காமல் திருட்டைப் பார்த்துக் கொண் டிருந்த விநாயகனை சாட்சியாகப் போடுங்கள்! திருடனைப் பிடித்து விடலாம்.

வினா : இந்து கோயில்களுக்கும் இந்து தலைவர்களுக்கும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. – **செய்தி**

விடை : ஓ... ‘இந்து பாதுகாப்பு இயக்கம்’ என்பதற்கான அர்த்தமே இப்போதுதான் புரியுது!

வினா : மோடி பிரதமராவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென்னின் ‘பாரத ரத்னா’ விருதை திரும்பப் பெறவேண்டும். – **பா.ஜ.க. எம்.பி. சந்தன் மித்ரா**

விடை : திருப்பித் தரலாம். அதேபோல் மோடி ஆட்சி யில் கொல்லப்பட்ட முஸ்லீம்களின் உயிர்களை மோடி திருப்பித் தருவாரா?

வினா : கச்சா எண்ணெய் 108 அமெரிக்க டாலராக இருப்பதால்தான், பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது. இது 100 டாலராக குறையும் போது, உள்நாட்டில் எரிபொருள் விலை குறைந்து விடும். – **மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்**

விடை : இப்படித் தெளிவாகக் கூறினால்தானே புரியும். கச்சா எண்ணெய் 90 டாலரானால், நமது நாட்டில் பெட்ரோல், டீசல் விலை மேலும் குறையும். அதுவே 80 டாலரானால், மேலும் குறையும்.70 டாலரானால் இன்னும் அதிகமாகக் குறையும். சரிதான், பொருளாதாரம் இப்பத்தான் நல்லாவே புரியுது!

# பரப்புரை பயணக் காட்சிகள்




மன்னார்குடியில்



பேராவூரணியில்
























DATE OF PUBLICATION 31.07.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# 20 நாட்கள் ஊர் ஊராக மக்களை நோக்கி கழகத்தின் பயணம்

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

குறிப்பெடுத்தனர். மதிய உணவுக்குப் பின் தோழர்கள் அனைவரும் பூபதி. கார்த்திகேயன் இல்லத்தில் ஓய்வெடுத்தனர்.

மாலை 4 மணிக்கு கந்தர்வக்கோட்டை காந்தி சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. சி.பி.அய் (எம்.எல்) இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் பழ. ஆசைத் தம்பி வாழ்த்துரை வழங்கினார். பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் பயண நோக்கங்கள் குறித்து விளக்கினார். தோழர்கள் நன்கொடை வசூல் செய்து கொண்டிருந்த போது பரப்புரை வாகனத்தின் அருகில் செருப்பு தைக்கும் கடை வைத்திருந்த 80 வயது முதியவர் மிகுந்த ஆர்வமுடன் வந்து ரூ.10/- வழங்கியதோடு, தான் தந்தை பெரியாரின் தொண்டன் என்றும், பெரியார் அவர்கள் 1956-57 ஆம் ஆண்டு வாக்கில் திருவையாறில் பொதுக்கூட்டட்தில் பேசிய போது அவர் அருகில் தான் பெட்ரோமாக்ஸ் விளக்கேந்தி நின்று கொண்டிருந்ததை பெருமிதத்துடன் குறிப்பிட்டு, கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

மாலை 5 மணிக்கு திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்ற தெருமுனைப் பரப்புரையில் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் பயண நோக்கங்கள் குறித்து விளக்கினார். கழக பரப்புரை செய்ய முனைந்த அதே நேரத்தில் அங்கு தமிழ் வழிக் கல்வி கூட்டியக்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கழக பரப்புரைக்கு வழி விட்டு தங்களது ஆர்ப்பாட்டத்தை சற்று நேரம் ஒதுக்கி வைத்து ஆர்ப்பாட்டம் நடத்திய தோழர்கள் ஒத்துழைப்பு கொடுத்தனர்

27.07.2013 மாலை 6 மணிக்கு திருச்சி காட்டூரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சட்ட எரிப்பு வீரர் வீ.அ பழனி நினைவாக மேடை அமைக்கப்பட்டிருந்தது. மாவட்டத் தலைவர் தோழர் மீ.இ ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் குணராஜ் வரவேற்புரையாற்றினார். திருச்சி புதியவன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக பயிற்சியாளர் தோழர் ஆனந்த், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில், விதைக்காமல் விளையக்கூடிய கழனி போன்றது பார்ப்பனியம் என்று அண்ணா கூறியதை நினைவு கூர்ந்தார். கல்வியில், மருத்துவத்தில், பொருளாதாரத்தில், கோவிலில், காதல் திருமணத்தில் பார்ப்பனியத்தின் நிலை குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்களிடம் மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடமும் உள்ளதை எடுத்துக்காட்டுகளுடன் கூறினார். வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் மேலும் திருத்தம் கொண்டு வந்து அதனை இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று கூறினார். ஆறுமுகம் சேர்வை என்பவர் பன்னீர் செல்வம் என்ற பள்ளர் இனத்தைச் சார்ந்தவரை சாதிப் பெயரை சொல்லி திட்டிய வழக்கில், உச்ச நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், தண்டனையை உறுதி செய்த நீதிபதிகள், வன்கொடுமை வழக்குகளில் நடவடிக்கை எடுக்காத காவல் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்களை பணியிடைநீக்கம் செய்ய வேண்டும், அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளதை சுட்டிக் காட்டினார். இது தொடர்பாக கோவை மாவட்ட ஆட்சியர் மீது கழகம் தொடர்ந்த வழக்கில், நீதிமன்றம் தமிழக அரசுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

27.07.2013 இரவு திருச்சி கண்டோன்மென்ட் TMSSS எம்பவர்மென்ட் மையத்தில் தங்கியிருந்த தோழர்களுக்கு, 28.07.2013 காலையில் சிற்றுண்டியுடன் கூடிய அசைவ உணவை திருச்சி மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார் வழங்கினார்.

காலை 11 மணிக்கு சமயபுரம் டோல்கேட் பகுதியில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. மீ.இ ஆரோக்கியசாமி, திருச்சி புதியவன், பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.



திருச்சி மாவட்ட கழகம் சார்பில், ரூ 28,000/- மதிப்புள்ள ஒலிப்பெருக்கி உபகரணங்கள் பரப்புரைக்கும் அதன் பிறகு இயக்க உபயோகத்திற்கும் என அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மதியம் திருச்சியிலிருந்து பெரம்பலூர் செல்லும் சாலையில் பெரியார் தொண்டர் முகுந்தன் அமைத்துள்ள "எழில் நகர் பெரியார் பூங்காவில்" தோழர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டது. பிறகு அம்மாபாளையம் பகுதியில் தோழர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு பெரம்பலூர் பேருந்து நிலையத்தில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.. காவல்துறையினர் போக்குவரத்தில் மாற்றம் செய்து தோழர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர். பறை இசையோடு தொடங்கிய கலை நிகழ்ச்சிகள் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக வீதி நாடகம் ஆகியவை மக்களை நமது பக்கம் ஈர்த்தது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார். கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட தேவராஜ் ரெட்டியார் என்பவர் ரூ 50/- நன்கொடை வழங்கியதோடு, அவர் தான் ரெட்டியார் வகுப்பைச் சார்ந்தவன் என்றாலும், உங்கள் கருத்துகள் என்னை ஈர்த்ததாலும், பேசப்பட்ட செய்தி சரியானது என்பதாலும் ,இது போன்ற பரப்புரை தொடர வேண்டும் என்றும் கூறி இந்த நன்கொடையை அளிப்பதாகக் கூறினார். கூட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களை காவல்துறையினரும் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். இது வரை நடந்த தெருமுனைக் கூட்டங்களில் கூடிய மக்கள் கூட்டத்தை விட, பெரம்பலூர் கூட்டத்தில் மக்கள் அதிகமாகக் கூடி இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மாலை 6 மணிக்கு அம்மாபாளையம் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன் மந்திரமல்ல தந்திரமே என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். ஏராளமான ஊர்ப் பொதுமக்கள் கூடி நின்று நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். முன்னதாக நமது பறைமுழக்கத் தோழர்கள் ஒவ்வொரு தெருவாகச் சென்று பறை அடித்து துண்டறிக்கைகளை விநியோகம் செய்து நிகழ்ச்சி பற்றி ஊர்மக்களுக்கு அறிவித்தனர். வீதிநாடகத்துடன் பொதுக்கூட்டம் தொடங்கியது. சிவக்குமார், துரை. தாமோதரன், பால்.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக கழகத் தலைவர் தலைவர் கொளத்தூர்மணி உரையாற்றினார். அவர் தனது உரையில் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டின் அவசியம் குறித்து மிகத் தெளிவாகக் கூறினார். இறுதியாக தோழர் கண்ணையன், 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற எழுச்சிமிகு பாடலுடன் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சியில் பெரம்பலூர் பகுதி தோழர்கள் மேலப்புலியூர் செந்தில், ராஜேஸ்குமார், பழனிமுருகன், சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர். இரவில் துரை.தாமோதரன் இல்லத்தில் தோழர்களுக்கு பிரியாணி மற்றும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. உணவுக்குப் பின் பயணத் தோழர்களுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துரையாடினார். தோழர்களுக்கு நன்கொடை வசூலிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்கள், வீதிநாடகம் நடத்தியதன் மூலம் மக்களிடம் எழுந்த வினாக்கள், பயணத்தை இன்னும் சிறப்பானதாக்க தோழர்களின் கருத்துக்கள் பற்றி கலந்துரையாடப் பட்டது. பயணம் தொடருகிறது.

**செய்தி : ஈரோடு சிவக்குமார்**

---

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*


கோரிக்கை வெற்றி பெற்றிருக்கிற செய்தியறிந்து மகிழ்கிறோம். 1997-லிருந்து 2001 வரை 4 ஆண்டுகாலம் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய போராட்டங்கள் வீண் போகவில்லை என்று மனநிறைவு அடைகிறோம்.

வசந்தா அவர்களை 27.7.1995 முதல் இணை பேராசிரியராகவும் 18.12.1996 முதல் பேராசிரியராகவும் பணியாற்றி வருவதாக கருதப்பட வேண்டும் என்று, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நாகமுத்து கடந்த 26 ஆம் தேதி உத்தரவிட்டுள்ளார். அதுமட்டுமல்ல, 1995 முதல் 2000 வரை அய்.அய்.டி. பணி நியமனங்கள் குறித்து சி.பி.அய். விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவ இந்த நிறுவனத்தின் இயக்குனராக ஆனந்த் என்ற பார்ப்பனரை முறையான விதிமுறைகள் ஏதும் பின்பற்றாமல் கொல்லைப்புற வழியில் நியமிக்கப்பட்டபோது, உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு அந்த நியமனத்தை ரத்து செய்தார். ஆனால், மேல்முறையீட்டில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். இப்போதும் அவர்கள் மேல் முறையீடு செய்யக்கூடும். பார்ப்பன வெறி அவ்வளவு எளிதில் அடங்கிவிடாது. ஆனாலும் சி.பி.அய். விசாரணை வரம்புக்குள் இந்த பார்ப்பன நிறுவனம் வந்திருப்பதை வரவேற்று மகிழ்கிறோம். பார்ப்பனியம் எவ்வளவு அதிகார வெறியாட்டம் போட்டாலும், இறுதி வெற்றி சமூக நீதிக்குத்தான்.

தற்போது நடைபெற்று வரும் சுயமரியாதை சமத்துவப் பரப்புரைப் பயணத்தில் அய்.அய்.டி. பார்ப்பன ஆதிக்கத்தைத் தோழர்கள் கலை வடிவங்கள் வழியாக அம்பலப்படுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அய்.அய்.டி., சி.பி.அய். விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ள செய்தி வெளி வந்திருப்பது வெற்றிச் செய்தியேயாகும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP
Posted on: 1st August 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆகஸ்டு 8, 2013 | புரட்சி 12 | முழக்கம் 30 | விலை: ரூ.3.00

### 20 நாள் "சுயமரியாதை–சமதர்ம"ப் பரப்புரைப் பயணம் தொடருகிறது

# ஜாதி சங்கங்களை புறக்கணிக்க வேண்டுகோள்!

ஒரு காலத்தில் ஜாதி சங்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்தன. இப்போது ஜாதி சங்கங்கள் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு, பார்ப்பனியத்தை நிலை நிறுத்தவும் தங்களைத் தலைவர்களாக நிலைநிறுத்திக் கொள்ளவும் வாக்கு வங்கியை உறுதிப்படுத்திக் கொள்ளவுமே பயன்படுகின்றன. அதே வேளையில் ஜாதிக் குழுவைச் சார்ந்த அனைவருமே ஜாதி சங்கங்களை ஏற்கவில்லை. அதை எதிர்க்கும் ஜாதி எதிர்ப்பாளர்கள் ஏராளமாக உள்ளனர். ஒவ்வொரு ஜாதியிலும் முற்போக்கு சிந்தனை கொண்ட ஜாதி எதிர்ப்பாளர்கள் துணிவுடன் வெளியே வந்து ஜாதி வெறிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று பரப்புரைக் கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வலியுறுத்தினர்.

ஜூலை 24ஆம் தேதியிலிருந்து 28ஆம் தேதி வரை சுயமரியாதை–சமதர்மப் பரப்புரைப் பயணத்தின் நிகழ்வுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தன. ஜூலை 29ஆம் தேதியிலிருந்து ஆகஸ்டு 1ஆம் தேதி வரை நடந்த பயணத்தின் செய்தித் தொகுப்பு:



ஈரோடு வடுகபாளையத்தில்

**ஜூலை 29**

காலை 11 மணிக்கு துறையூர் பேருந்து நிலையத்தில் பறைமுழக்கம், வீதி நாடகத்துடன் பிரச்சாரம் தொடங்கியது, பெரம்பலூர் தோழர் கண்ணையன், திருப்பூர் மணிகண்டன் ஆகியோர் பாடல் பாடினர். சிவக்குமார், பால்.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

துண்டறிக்கை அச்சடித்த அச்சகத்திற்கு தர வேண்டிய தொகையை அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்துவதற்காக தோழர் சிவக்குமாரும், தோழர் துரை.தாமோதரனும் பெரம்பலூரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளைக்குச் சென்றனர். தோழர்கள் இருவரும் கருப்புச் சட்டையில் இருந்ததைப் பார்த்த, அந்த வங்கியின் பார்ப்பன காசாளர், அவர்கள் கொண்டு சென்ற பணம் பத்து ரூபாய் தாள்களாக உள்ளது (கடைவீதி வசூல் செய்தது) என்று சாக்குக் காரணம் சொல்லி வாங்க மறுத்தார். தோழர்கள் இருவரும் வங்கியின் மேலாளரிடம் முறையிடவே, மேலாளர் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு கூறினார். வேண்டாவெறுப்பாக பணத்தை வாங்கிய காசாளர், ரூபாய் நோட்டுகள் அழுக்காக உள்ளது என்ற ஒரு காரணத்தைக் கூறி, மீண்டும் வாங்க மறுத்து மேலாளரிடம் சென்றார். அவர் வாங்கிக் கொள்ளுமாறு மீண்டும் அறிவுறுத்தியதற்குப் பிறகு தான் பார்ப்பனக் காசாளர் அந்தப் பணத்தை வாங்கினார். அப்போதும் கூட நீங்கள் போய் இருக்கையில் அமருங்கள் நான் பிறகு கூப்பிடுகிறேன் என்றார். சற்று நேரம் பொறுத்த தோழர் சிவக்குமார், எனக்குப் பின்னால் வந்தவரைக் கூப்பிடுகிறீர்கள், என்னை ஏன் காத்திருக்கச் சொல்கிறீர்கள் என்று சத்தம் போட்ட பிறகு தான் நமக்குரிய ரசீதைத் தந்தார். பெரியார் மீதும் கருப்புச் சட்டை மீதும் பார்ப்பனர்கள் எவ்வளவு வெறுப்பை இன்னமும் காட்டுகிறார்கள் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும். மதியம் அசைவ உணவு ரயில் நிலையம் அருகில் உள்ள சுப்பிரமணி மஹாலில் வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு குளித்தலை பேருந்து நிலையம் அருகில் இயக்கக் கொடியேற்று விழா நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூடியிருந்த ஏராளமான பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார். தோழர்கள் துண்டறிக்கைகளை விநியோகித்து கடைவீதியில் வசூல் செய்த வகையில் ரூ.2570/- வசூலானது.

மாலை 6 மணிக்கு குளித்தலை சுங்கச்சாவடி அருகில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் தோழர் சத்திய சீலன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் பாபு (எ) முகமது அலி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் தோழர் காமராஜ் வரவேற்புரையாற்றினார். இயக்க ஆதரவாளர் தோழர் தமிழ் நெஞ்சன், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், ஈரோடு மண்டலச் செயலாளர் தோழர். இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் தனது சிறப்புரையில், "இந்துக்களே ஒன்றாகச் சேர்வீர் என்று கூக்குரலிடும் இந்து முண்ணனி, ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகள், அனைத்து சாதி இந்துக்களும் அர்ச்சகராக வேண்டும் என்று போராட முன் வருமா? அவ்வாறு வந்தால் திராவிடர் விடுதலைக் கழகமும் அவர்களுடன் சேர்ந்து போராடத் தயார்" என்று அறிவித்தார்.

புரட்சியாளர் ஜோதிபாவ் புலே பற்றிக் குறிப்பிடும் போது, பெண்களுக்கென அக்காலத்திலேயே பள்ளிகளை நிறுவியவர், தனக்குச் சொந்தமான கிணற்றில் தாழ்த்தப்பட்ட மக்களை நீர் எடுக்க அனுமதித்தவர் என்று கூறினார். ராஜாஜியின் மோசடித் தனமான குலக்கல்வித் திட்டம் பற்றி விளக்கிக் கூறிய கழகத் தலைவர், பச்சைத் தமிழன் காமராசரின் சிறப்புகளையும் அவர் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்த நன்மைகளையும் பட்டியலிட்டார். அறநிலையத் துறை அமைச்சராக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பரமேஸ்வரனை நியமித்ததையும், உள்துறை அமைச்சராக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த கக்கனை நியமித்ததையும் நினைவு கூர்ந்தார். அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த ராமசாமி செட்டியாருக்கு திருச்செந்தூர் கோவில் அர்ச்சகர் கையில்

(2 ஆம் பக்கம்)

## ஆதரவாக... மவுனமாக... பரப்புரையின் தாக்கம்

ஜூலை 24 ஆம் தேதி மயிலாடுதுறையில் தொடங்கிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் 'சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயணம்' தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களை சந்தித்து, ஜாதி எதிர்ப்பு வாழ்வியல் உரிமை பறிப்பு, நாட்டின் பொருளாதாரச் சுரண்டல்களை பறை இசை, வீதி நாடகங்கள், பாடல்கள், உரை வழியாக மக்களிடம் விளக்கி வருகிறது. வீதி ஓரங்களில் மக்கள் கூடும் பகுதிகளில் கழகத் தோழர்கள் வாகனங்களை நிறுத்தி, பறை இசை எழுப்பியவுடன் மக்கள் கூடுகிறார்கள். பரப்புரை வாகனத்தில் பார்ப்பனியம், ஜாதி-தீண்டாமை வாழ்வியலில் ஊடுருவி, மக்களை பிளவுபடுத்துவதை சித்தரிக்கும் கருத்துப் படங்களையும், உயர்கல்வித் துறையில் மத்திய அரசுத் துறையில் பார்ப்பன மேலாதிக்கத்தை விளக்கும் புள்ளி விவரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை பார்க்கிறார்கள். ஜாதியத்தில் ஊறிப் போய் நிற்போர் கருத்துகளை மவுனமாக கேட்கிறார்கள். ஜாதி எதிர்ப்பாளர்கள் தங்கள் ஆதரவை வெளிப்படுத்துகிறார்கள்.

பயணத்தின் நோக்கங்களை விளக்கிடும் துண்டறிக்கைகளை அப்பகுதியிலுள்ள கடைகளில் தோழர்கள் வழங்கி உண்டியல் வழியாக நிதி திரட்டுகிறார்கள். முதலில் பறை இசை ஒலிக்கும். தொடர்ந்து மக்களை வரவேற்கும் ஜாதி ஒழிப்பு, பெண்ணமை ஒழிப்பு கருத்துகள் கொண்ட பாடல்களை தோழர்கள் பாட வீதி நாடகம் தொடங்கும். அதைத் தொடர்ந்து, பயணத்தின் நோக்கங்களை விளக்கி கழகப் பேச்சாளர்கள் ஒருவரோ இருவரோ பேசிட நிகழ்ச்சி முடிவடையும். அருகிலேயே கழகத்தின் வெளியீடுகளும் விற்பனை செய்யப்படும்.

மக்களை ஊர் ஊராக தேடிப் போய், அவர்களிடம் ஜாதி எதிர்ப்பு, பொருளாதார சுரண்டல் கருத்துகளை கழகம் பரப்பி வருகிறது. மாலை நேரங்களில் மட்டும் மேடைகள் அமைக்கப்பட்டு பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சென்னிமலையில் பொதுக் கூட்டம் அனுமதி மறுக்கப்பட்டதால் வீதிக் கூட்டமாக நடத்தப்பட்டது. பொள்ளாச்சியில் கடும் மழை காரணமாக பொதுக் கூட்டம் நடத்த முடியாததால் வீதிக் கூட்டமாக நடத்தப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோருடன் 30க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்கும் இந்த பரப்புரை குழுவின் நோக்கம் செயல்பாடுகளை பல்வேறு இயக்கத்தினரும் பாராட்டி வரவேற்று தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

**– நமது செய்தியாளர்**

தலையங்கம்

## அமர்த்தியாசென் கூறுகிறார்!

"இந்தியாவிலுள்ள மாநிலங்களை ஒப்பிட்டு நோக்கத்திற்காகத் தனித்தனி நாடுகளாக கருதிப் பார்ப்போமேயானால் கேரளாவும், தமிழ்நாடும், மற்றெல்லா மாநிலங்களைவிடவும் மேலாக முதல் நிலையில் இருக்கும் உத்தரபிரதேசமும், மத்திய பிரதேசமும் மிகவும் கடைசி நிலையில் இருக்கும்."

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் மற்றும் ஜீன் டி ரெஸ் ஆகியோர் இணைந்து எழுதிய நூலில் (நிலையில்லா புகழ் - இந்தியாவும் அதன் முரண்பாடுகளும்) இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். அதுமட்டுமல்ல, இந்த மாநிலங்களிலிருந்து கிடைக்கும் அனுபவங்களையே படிப் பினையாகக் கொண்டு வேறு மாநிலங்கள் தங்கள் முன்னேற்றத்துக்குத் திட்டமிட வேண்டும் என்றும் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியா என்ற நுகத்தடியில் சிக்கிக் கொண்டதன் காரணமாக பார்ப்பனிய மேலாதிக்கத்துக்கு உட்பட்டு தமிழகம் அதன் முன்னேற்றங்களை விரைவு படுத்த முடியாது தடைபட்டு நிற்கிறது.

பார்ப்பனியமும், இந்துமத வெறியும், ஜாதிக் கட்டமைப்பும் இறுகிப் போய்க் கிடக்கும் உ.பி., ம.பி.போன்ற மாநிலங்கள் அவைகள் தனி நாடுகளாக இருந்திருக்கு மானால், கடைசி இடங்களில் தேங்கிப் போய் கிடந்திருக்கும் என்றும், நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பெரியார் வித்திட்ட சமுதாய மாற்றமும், சமூக நீதி தத்துவமும் தொடர்ந்து ஆட்சிகளால் வளர்த்தெடுக்கப்பட்டதுமே தமிழகத்தை முதல் வரிசையில் நிறுத்தியிருக்கிறது. கேரளாவில் பொதுவுடைமை இயக்கங்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்தது, அம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அடித் தளமாக அமைந்திருக்கிறது.

முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டிய தமிழ்நாட்டை ஜாதிய - பார்ப்பனிய பழமைவாதம் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஆபத்துகள் தலை தூக்கி நிற்கும் காலத்தில்தான் இதை எதிர்த்து பெரியார் இயக்கங்களும் பொதுவுடைமை இயக்கங்களும் களப் பணியாற்ற வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது.

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி வரும் சுயமரியாதை, சமதர்ம பரப்புரை இயக்கத்தின் தேவையையும் அவசியத்தையும் இப்போது புரிந்து கொள்ள முடியும்.

திராவிட அரசியல் கட்சிகள், ஜாதி ஒழிப்பு பார்ப்பனிய எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு பகுத்தறிவு கருத்துகளில் சமரசம் செய்து கொண்டுவிட்டன என்பதை மறுப்பதற்கில்லை. அவைகளையும் தாண்டி பார்ப்பனியத்தை வேர் பிடிக்க விட முடியாத மண்ணாக தமிழகம் பக்குவப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

ஏதோ பெரியாரும், திராவிடர் இயக்கமும் தமிழகத்தைப் பின்னோக்கி இழுத்துச் சென்றுவிட்டதாக பேசக் கிளம்பியிருக்கும் 'திடீர்' தலைவர்களும் குருதிக்குள் புகுந்துகொண்டு தமிழர் அடையாளத்தைத் தேடும் 'ஆராய்ச்சியாளர்களும்' அமர்த்தியாசென் போன்ற ஆய்வாளர்களின் கருத்துகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெரியார் இயக்கங்களும், ஜாதி எதிர்ப்பு, பொதுவுடைமை இயக்கங்களும் கொள்கைத் தளங்களில் இணைந்து பயணிக்கும்போது, இந்தத் தடைகளை எதிர்கொண்டு முன்னேறிச் செல்ல முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்!

# பார்ப்பனியம் அழியட்டும்; சமத்துவம் மலரட்டும்!


(முதல் பக்கத் தொடர்ச்சி)

விபூதி கொடுக்க மறுத்து அங்கிருந்த கல்தூண் மேல் கொட்டியதையும், பிறகு திமுக அமைச்சரான நெடுஞ்செழியன் அதே திருச்செந்தூர் கோவில் அர்ச்சகர் கொடுத்த விபூதியை பூச மறுத்து, அங்கிருந்த கல்தூண் மேல் கொட்டியதையும் குறிப்பிட்டார்.

இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோருக்கென்று சாதிக் கட்சிகள் நடத்தும் தலைவர்கள் தங்கள் மக்கள் மத்திய அரசுப் பணிகளில் மிகக் குறைந்த அளவில் உள்ளதை எதிர்த்து, தங்கள் சமூக மக்களுக்கும் மத்திய அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடாமல், சாதி ரீதியாக மக்களைப் பிளவுபடுத்த முயற்சிப்பதை எடுத்துக் கூறி, மக்கள் அவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறினார். இறுதியில் மாவட்டப் பொருளாளர் தோழர் மோகன் தாஸ் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் ஸ்ரீகாந்த், வினோத், ரஞ்சித், சக்திவேல், கௌதம், பூமணி, மலைக்கொழுந்தன், விஜி ஆகியோர் கலந்து கொண்டனர். இரவு சுப்பிரமணி மஹால் மண்டபத்தில் தோழர்களுக்கு முட்டையுடன் கூடிய சைவ பிரியாணி வழங்கப்பட்டது.

**ஜூலை 30**

காலையில் தோழர்கள் குளித்தலை காவிரி ஆற்றில் குளித்து அதன் பிறகு புறப் பட்டனர். கரூர் செல்லும் வழியில் உள்ள புலியூரில் தோழர்களுக்கு மாவட்டத் தலைவர் தோழர் பாபு (எ) முகமது அலி இல்லத்தில் காலை உணவு வழங்கப் பட்டது. அங்கிருந்து தோழர்கள் கொடுமுடி நோக்கிப் புறப்பட்டனர். ஈரோடு எல்லையில் கழக வாகனத்தை வழிமறித்த காவல்துறையினர் உங்களுக்கு கொடு முடியில் பிரச்சாரம் செய்ய அனுமதி மறுக்கப்பட் டுள்ளது. எனவே நீங்கள் அங்கு பிரச்சாரம் செய்யக் கூடாது என்று கூறியதோடு, வாகனத்தின் பின்னேயே கொடுமுடி வரை வந்தனர். தோழர்கள் கொடுமுடியில் துண்டறிக்கை களை விநியோகித்து, கடை வீதி வசூல் செய்ததோடு, ஒவ்வொரு கடையிலும் பிரச்சாரமும் செய்தனர். வாகனம் கிளம்பும் வரை கூடவே இருந்த காவல்துறையினர் பின்னர் அங்கிருந்து திருச்செங்கோடு புறப்பட்ட வாகனத்தை, நாங்கள் சொல்லும் பாதையில் தான் செல்லவேண்டும் என்று கெடுபிடி செய்ததோடு ஈரோடு மாவட்ட எல்லை வரை கூடவே வந்தனர்.



துண்டறிக்கையை படிக்கிறார் முதியவர்

மதியம் 2.30 மணிக்கு தோழர்கள் திருச்செங் கோடு வந்தடைந்தனர். தோழர் நித்தியானந்தன் இல்லத்தில் நடைபெற்ற பெரியார் அம்பேத்கர் படத்திறப்பிற்குப் பின், மதியம் அசைவ உணவு வழங்கப்பட்டது. சிறிது நேர ஓய்வுக்குப் பின், தேநீர் அருந்திவிட்டு தோழர்கள், திருச்செங்கோடு அண்ணா சிலை அருகில் தெருமுனைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். பிறகு பள்ளிபாளையம் செல்லும் வழியில் அண்ணா நகர் பகுதியில் தோழர் ரமேஷின் தந்தையாருக்கு செய்யப்பட்டிருந்த அறுவை சிகிச்சை குறித்து கழகத் தலைவர் அவரது இல்லத்திற்குச் சென்று நலம் விசாரித்தார்.

மாலை 5.30 மணிக்கு பள்ளிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் தெருமுனைப் பிரச்சாரம் நடை பெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரை யாற்றினார். அங்கிருந்து தோழர்கள் குமாரபாளையம் கிளம்பினர். வழியில் திருப்பூர் துரைசாமி, பால். பிரபாகரன் ஆகியோர் வந்த வாகனத்தை நிறுத்திய பள்ளிபாளையம் செந்தில்குமார் என்பவர், "நான் உங்கள் இயக்கத்தின் மேல் மிகப் பெரும் மதிப்பு உள்ளவன், எந்த வித சுயநலமும் எதிர்பார்ப்பும் இல்லாமல், பெரியாரின் கொள்கையில் எந்த வித சமரசமும் செய்து கொள்ளாமல் செயல்படும் உங்கள் பணி மென்மேலும் தொடர வேண்டும்" என்று கூறி, நீங்கள் கட்டாயம் என்னுடன் தேநீர் அருந்திவிட்டுச் செல்ல வேண்டும் என்று கூறி தேநீர் வழங்கினார்.

மாலை 7 மணிக்கு குமாரபாளையத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சாமி நாதன் தலைமை வகித்தார். தமிழ்நாடு மாணவர் கழக ஈரோடு மண்டல அமைப்பாளர் வெங்கட் வரவேற் புரையாற்றினார். கேப்டன் அண்ணாதுரை, மாவட்ட செயலாளர் வைரவேல், தண்டபாணி, கலைமதி, மணியம்மை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முனைவர் ஜீவானந்தம், ஈரோடு மண்டலச் செய லாளர் இராம.இளங்கோவன் ஆகியோர் உரை யாற்றினர். கூட்டத்தில் ஆங்காங்கே அமர்ந்திருக்கும் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்கள், ஒவ்வொரு தோழர்களும் சிறப்புரையாற்றுவதற்கு முன்பாக, இடையிடையே எழுந்து பறையடித்து, "இணைவோம் ஒன்றாய் இணைவோம், அழிப்போம் பார்ப்பனியத்தை அழிப்போம், படைப்போம் சமத்துவ சமுதாயம் படைப்போம்" என்று கூறி மக்களை திரும்பிப் பார்க்க வைத்தது ஒரு வித்தியாசமான பிரச்சார உத்தியாக இருந்தது.

இறுதியாக பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் உரையாற்றினார். பார்ப்பனர்கள் அன்றைக்கு உருவாக்கிய மனுசாஸ்திர கோட்பாடுகளை வைத்து இன்றைக்கும் பார்ப்பனர்களையும் பார்ப்பனியத்தையும் விமர்சனம் செய்வது சரியாக இருக்குமா? என்ற ஒரு கேள்வியை எழுப்பி, இன்றைக்கும் பார்ப்பனர்கள் கடைநிலை வேலையைச் செய்கிறார்களா? செய்ய முன் வருவார்களா? என்று கேட்டு பார்ப்பனியம் நம்மை எப்படி யெல்லாம் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்று விளக்கிக் கூறினார். கழகத் தலைவர் தனது உரையில், தனியார் நிறுவனங்கள் பெயருக்குத் தானே தனியார் நிறு வனங்களே தவிர, உண்மையில் அவை பொது மக்களின் பணத்தைக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள் தான் என்பதை விளக்கிக் கூறினார். மேலும் அவர் பேசும் போது சாதியத்திற்கு எதிராக மக்கள் எவ்வாறு அணி திரள்வது என்பது பற்றியும், சாதி தலைவர்களை மக்கள் புறக் கணிக்க வேண்டியதன் அவசி யத்தையும் விளக்கினார். நகரத் தலைவர் தோழர் தண்டபாணி நன்றியுரை கூறினார். இரவு உணவு பெருந்தொண்டர் தோழர் திராவிடமணி இல்லத்தில் நகரக் கழகம் சார்பாக அசைவ உணவு வழங்கப்பட்டது. தோழர்கள் பவானி கூடுதுறையில் உள்ள விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கப்பட்டனர்.

**ஜூலை 31**

காலை 9 மணிக்கு இயக்க ஆதரவாளர் ஆசிரியர் முருகேசன் காலை உணவு வழங்கினார். பிறகு பவானி அந்தியூர் பிரிவில் தெருமுனைப் பிரச்சாரம் நடை பெற்றது. பரப்புரைச் செயலாளர் தோழர் பால். பிரபாகரன் உரையாற்றினார். பவானியில் இருந்து ஈரோடு செல்லும் வழியில் பி.பெ அக்ரஹாரத்தில் மறைந்த பெரியார் பெருந்தொண்டர் பெருமாள் அவர்களின் இல்லத்தில் தோழர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டது.

நண்பகல் 12 மணிக்கு மரப்பாலம் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரமும், கொடியேற்று விழாவும் நடைபெற்றது. ஈரோடு மாநகரச் செயலாளர் தோழர் சிவானந்தம் வரவேற்புரையாற்றினார். மரப்பாலம் பகுதித் தோழர் சத்தியமூர்த்தி பயணத்தை வாழ்த்திப் பேசினார். கழகக் கொடியை பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஏற்றி வைத்து பயணத்தின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார். தோழர் ரமேஷ் நன்றியுரை கூறினார். தோழர்கள் அங்கிருந்து கிளம்பி பெரியார் நினைவிடத்திற்குச் சென்றனர். பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கக்கூடிய தோழர்கள் என்பதால் ஆவலுடன் பெரியார்-அண்ணா நினைவிடத்தை சுற்றிப் பார்த்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

மதியம் 2.30 மணிக்கு கழகத்தின் தீவிர ஆதரவாளரும் அதிமுக பிரமுகருமான தங்கராசு இல்லத்தில் தோழர்களுக்கு சிக்கன் பிரியாணியும் தயிர் சாதமும் வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு சென்னிமலை செல்லும் வழியில் உள்ள வடுகபாளையம் பகுதியில் கழகக் கொடியேற்று விழாவும் கிளை திறப்பு விழாவும் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார். அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் பெரியார் இயக்கத்தின் அவசியம் குறித்தும், திராவிடர் விடுதலைக் கழகத்தின்

(4 ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

**வினா :** 21 வயதுக்குட்பட்டவர்கள் திருமணத்துக்கு பெற்றோர்கள் சம்மதம் வேண்டும் என்று இந்து திருமணச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

**– பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு**

**விடை :** நல்லது. அப்படியே 21 வயதுக்கு உட்பட்டவர்கள் தேர்தலில் எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போடுவது என்பதற்கும் பெற்றோர்கள் சம்மதம் வேண்டும் என்று தேர்தல் சட்டத்திலும் திருத்தம் கொண்டு வந்து விடலாம்.

**வினா :** நகரங்களில் நாளொன்றுக்கு ரூ.33.33 காசுக்கு மேல் செலவிடுவோரும், கிராமங்களில் ரூ.27.20 காசுக்கு மேல் செலவிடுவோரும் ஏழைகள் அல்ல.

**– திட்டக் குழு அறிவிப்பு**

**விடை :** ஒரே ஒரு சந்தேகம்! எல்லாவற்றுக்கும் ‘டாலர்’ அடிப்படையில் கணக்குப் போடும்போது ஏழைகளை மட்டும் ஏன் ‘ரூபாய்’ அடிப்படையில் கணக்கிடுகிறீர்கள்? இந்த மக்கள் என்ன “பாவம்” செய்தார்கள்?

**வினா :** தேசியக் கொடி, தேசிய கீதம் பற்றிய சட்டங்களைக் கண்டிப்புடன் அமுல்படுத்த வேண்டும்.

**– சென்னை உயர்நீதிமன்றம்**

**விடை :** ஏற்றுக் கொள்ள வேண்டிய தீர்ப்பு. ஆனால், தேசிய கீதத்தில் இடம் பெற்றுள்ள ‘சிந்து’ இந்தியாவில் இல்லையே! பஞ்சாபில் ஒரு பகுதி பாகிஸ்தானுக்கு போய் விட்டதே!

**வினா :** தகவல் அறியும் உரிமை சட்டம் அரசியல் கட்சிகளுக்குப் பொருந்தாது. இதற்காக சட்டத்தைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**– அமைச்சர் கபில்சிபல்**

**விடை :** ஒரு தாழ்மையான விண்ணப்பம்! கட்சிகளின் கொள்கைகளை அறியும் உரிமையையாவது மக்களுக்குத் தருவீர்களா?

**வினா :** அய்தராபாத்தில் தொடங்கும் பா.ஜ.க. தேர்தல் பிரச்சார கூட்டத்துக்கு 18 வயது முதல் 40 வயதினரை மட்டுமே அனுமதிப்போம். இந்தக் கூட்டத்துக்கு புதிய இந்தியாவின் இளைஞர் படை என்று பெயரிட்டுள்ளோம்.

**– பெங்களூரில் வெங்கையா நாயுடு பேட்டி**

**விடை :** அப்படியா? பழைய இந்தியாவின் முதியோர் படையினர் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா, நாயுடுஜி!

**வினா :** தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்பதால் ராமேசுவரம் கோயிலில் 17 இடங்களில் கண்காணிப்புக் காமிராக்கள் பொறுத்தப்பட்டு, காவல்துறை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

**– செய்தி**

**விடை :** “உலகம் கடவுளுக்கு கட்டுப்பட்டது. கடவுள் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டவை. மந்திரம் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டது. கடவுள்-மந்திரம்-பிராமணர் அனைவருமே காவல்துறையின் காமிராக்களுக்கு கட்டுப்பட்டவர்கள் அப்படித் தானே?”


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535


# பயணத்தின் வெற்றிக்கு நடந்த முன்னேற்பாடுகள்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக சுயமரியாதை(சமதர்ம) சமத்துவ பரப்புரை 24.07.2013 அன்று மயிலாடுதுறையில் தொடங்கி திராவிடர் விடுதலைக் கழகத்தின் இரண்டாமாண்டு தொடக்க நாளான 12.08.2013 அன்று புதுச்சேரியில் முடிகிறது. இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காகவும், பரப்புரை பயணம் செல்லும் வழியில் உள்ள மண்டல, மாவட்ட பொறுப்பாளர்களைச் சந்தித்து பயண ஏற்பாடுகளைப் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் கழகத்தின் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மதுரை மண்டல பொறுப்பாளர் இராவணன், வாகன ஓட்டுநராக பல்லடம் ஒன்றியச் செயலாளர் மணி கண்டன் ஆகியோர் தமிழகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்து முன்னேற்பாடுகளை செய்தனர்.

11.07.2013 காலை கோபி சென்ற தலைமைக் கழக நிர்வாகிகள் ஈரோடு மண்டலச் செயலாளர் தோழர் இராம. இளங்கோவனைச் சந்தித்து செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள், காவல்துறை அனுமதி விவரம், பயணக் குழுவினர் தங்குவதற்கான வசதிகள் பற்றிக் கலந்துரையாடினர். பின்னர் அங்கிருந்து குருவ ரெட்டியூர் சென்ற தலைமைக் கழக நிர்வாகிகள் ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திக சோதியைச் சந்தித்து பயணம் பற்றி விவாதித்தனர்.

அங்கிருந்து மேட்டூர் சென்ற நிர்வாகிகள், மேட்டூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள பெரியார் படிப்பகத்தில் அங்குள்ள நிர்வாகிகளைச் சந்தித்தனர். இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், மாவட்டச் செயலாளர் சூரியகுமார், அண்ணாதுரை, கொளத்தூர் விஜி, மார்டின், ஈஸ்வரன், சித்துசாமி, டேவிட், கருப்பூர் சக்தி மற்றும் ஜி.பி ஆகியோர் கலந்து கொண்டனர். பிறகு மேட்டூரிலிருந்து கிளம்பிய தலைமைக் கழக நிர்வாகிகள் அன்று இரவே மன்னார்குடி புறப்பட்டனர்.

12.07.2013 காலை மன்னார்குடியில் திருவாரூர் மாவட்டச் செயலாளர் காளிதாஸ், நீடாமங்கலம் முருகன், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பாரி, புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் கார்த்திக் ஆகியோரைச் சந்தித்து பயணத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், தோழர்கள் மற்றும் தலைவர்கள் தங்குவதற்காக அறைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்கள் பற்றி கலந்துரையாடினர். பின்னர் மயிலாடுதுறை சென்ற முன்னேற்பாட்டுக் குழுவினர் அங்கு தஞ்சை மாவட்ட அமைப்பாளர் இளைய ராஜா, நாகை மாவட்டச் செயலாளர் மகேஷ், மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பாளர் விஜய ராகவன், சங்கர் மற்றும் செந்தில் ஆகியோரைச் சந்தித்து கூட்டம் நடக்குமிடம், மேடை அமைப்பு பற்றி கேட்டறிந்தனர்.

இரவு புதுவையில், புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பனைச் சந்தித்து, பயணத்தின் இறுதிக் கூட்டமாகவும், திராவிடர் விடுதலைக் கழகத்தின் இரண்டாமாண்டு தொடக்க விழாவாகவும் பொதுக் கூட்ட நிகழ்வு நடைபெறும் இடமான அரியாங்குப்பம் பகுதியில் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள், பொதுக் கூட்ட அமைவிடம் குறித்து ஆலோசித்தனர்.

13.07.2013 காலை சேலம் வந்த தலைமைக் கழக நிர்வாகிகள், ஆத்தூரில் தோழர் மகேந்திரனைச் சந்தித்து முன்னேற்பாடுகள் பற்றி ஆலோசித்து, பிறகு ஈரோடு வந்தடைந்தனர். அங்கு கரூர் மாவட்டச் செயலாளர் காமராஜுயுடன் கலந்தாலோசனையில் ஈடுபட்டனர்.



இரத்தினசாமி



துரைசாமி



இராவணன்

17.7.2013- இரண்டாம் சுற்றுப் பணம் தொடங்கியது.

கோவை மாவட்டம் மடத்துக்குளம் மோகனைச் சந்தித்து, கூட்டத்திற்கு காவல்துறை அனுமதி பெற்றுள்ள விபரம், தோழர்கள் தங்குமிடம், உணவு ஏற்பாடுகள் பற்றி ஆலோசித்து, பிறகு உடுமலையில் நகர பொறுப்பாளர் மலர் இனியனைச் சந்தித்து முன்னேற்பாடுகள்பற்றி ஆலோசித்து, அங்கிருந்து பழனி புறப்பட்டனர். அங்கு மாவட்டச் செயலாளர் நல்லதம்பி உள்ளிட்ட தோழர்களைச் சந்தித்து இயக்க வளர்ச்சி குறித்து விவாதித்தனர். அடுத்ததாக தாரா புரம் வந்த குழுவினர் அங்குள்ள நிர்வாகிகளைச் சந்தித்து பயண முன்னேற்பாடுகளைப் பற்றி விவாதித்தனர்.

பொள்ளாச்சியில் மண்டலப் பொறுப்பாளர் விஜயராகவன், கிணத்துக்கடவு நிர்மல்குமார் ஆகியோரைச் சந்தித்தனர். கோவையில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் பன்னீர்செல்வத்தைச் சந்தித்து பயணம் பற்றி ஆலோசித்த நிர்வாகிகள், பின் மேட்டுப் பாளையத்தில் கோவை மாவட்டக் காப்பாளர் இராமச்சந்திரனைச் சந்தித்து பொதுக் கூட்டம் நடத்த செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் பற்றி விவாதித்தனர்.

தொடர்ச்சியாக 20 நாட்கள் 20 மாவட்டங்கள் வழியாக ஏறக்குறைய தமிழ்நாடு முழுதும் நடைபெறும் பயணம் என்பதால், இயக்கத்தின் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மதுரை மண்டல பொறுப்பாளர் இராவணன் ஆகியோர் செய்த இந்த முன்னேற்பாட்டுச் செயல்பாடுகளாலும், அந்தந்தப் பகுதியில் உள்ள நிர்வாகிகள் இயக்கத்தின் மேல் கொண்ட அர்ப்பணிப்பான ஈடுபாட்டாலும், பரப்புரையில் கலந்து கொள்ளும் தோழர்கள் எவ்வித சிரமமும் இன்றி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடங்களில் எவ்வித இடைஞ்சல்களும் இன்றி பரப்புரையில் ஈடுபட்டு வந்து கொண்டுள்ளனர். இதுவரை இல்லாத ஒரு எழுச்சியாக நடத்தப்படும் வீதி நாடகம் மற்றும் பறைமுழக்கம் ஆகியவை மக்களை திரும்ப வைத்துள்ளன. இயக்கம் தொடங்கப் பட்டு ஒரு ஆண்டு நிறைவடைய உள்ள நிலையில் கழகத்தின் இந்தப் பயணம், தமிழ்நாடு முழுவதும் மக்கள் மத்தியில் சாதியத்திற்கெதிரான மனப்பான்மையையும், பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டல்களை பற்றிய ஒரு விழிப்புணர்வையும், இடஒதுக்கீடு பற்றிய தாக்கத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. பரப்புரை குழுவினருடனேயே தொடர்ச்சியாக, கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், செயலவைத் தலைவர், பரப்புரைச் செயலாளர் உள்ளிட்டோர் வருவதும், அவர்களுடனேயே தங்குவதும், பரப்புரையில் ஈடுபடும் தோழர்களுக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புதிய தோழர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வகுப்பு

கழகத்தின் சார்பாக ஏப்ரல் 14-இல் நடைபெற்ற மனுசாஸ்திர போராட்டத்தை விளக்கி ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக அனைத்து ஒன்றிய பகுதிகளிலும் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. கோபி ஒன்றிய பகுதியில் நடைபெற்ற பரப்புரைப் பயணத்தின்போது கோட்டுபுள்ளாம்பாளையம் பகுதியிலிருந்து புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். அவ்வாறு இணைந்த தோழர்களுக்கு கழகத்தின் சார்பாக 30.6.2013 அன்று அளுக்குளி சமுதாயக் கூடத்தில் இயக்க அறிமுக வகுப்பு நடத்தப்பட்டது.

ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், ‘இயக்கம்-ஓர் அறிமுகம்’ என்ற தலைப்பிலும், இராவணன் ‘பெரியார்-ஓர் அறிமுகம்’ என்கிற தலைப்பிலும் வகுப்பெடுத்தனர். உணவு இடைவேளைக்குப் பின், காவை இளவரசன், தோழர்களுக்கு ‘மூட நம்பிக்கை ஒழிப்பு’ என்கிற தலைப்பில் வகுப்பு எடுத்தார். பயிற்சி வகுப்புக்கான ஏற்பாடுகளை அலங்கியம் ரவி முன்னின்று செய்தார். தோழர்கள் அர்ச்சுனன், துரை, விசய சங்கர் (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), ஆனந்த ராசு ஆகியோர் வகுப்புகளை ஒருங்கிணைத்தனர். நிறைவில் கழகத்தின் செயலவை தலைவர் துரைசாமி, கழகத்தின் செயல்பாடுகளை விளக்கியும், பெரியார் கொள்கைகளை விளக்கியும் உரையாற்றினர்.



DATE OF PUBLICATION 07.08.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஜாதியற்றோருக்கு தனி இடஒதுக்கீடு வழங்குக!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*பணிகள் குறித்தும் பேசினார். ஏராளமான ஊர் மக்கள் திரண்டிருந்தனர். (அண்மையில் அப்பகுதியில் நடந்த சுடுகாட்டுப் பிரச்சினையில் அப்பகுதியைச் சார்ந்த 26 பேர் கைது செய்யப்பட்டனர். இயக்கத்தின் முயற்சியால் அவர்கள் பிணையில் வெளிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.) பிறகு அருகில் உள்ள கே.ஜி வலசு பகுதியில் தெருமுனைப் பரப்புரை நடைபெற்றது. அடுத்ததாக கருங்கவுண்டன்வலசு பகுதியில் கொடியேற்று விழாவும் கிளை திறப்பு விழாவும் நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். பொதுச் செயலாளார் விடுதலை இராசேந்திரன் கொடியேற்றினார். சென்னிமலை ஒன்றியத் தலைவர் ரமேஷ் நன்றி கூறினார். தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.*

*மாலை 7 மணிக்கு சென்னிமலை பேருந்து நிலையத்தில் பொதுக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் தெருமுனைக் கூட்டமாக நடைபெற்றது. பறைமுழக்கம் வீதி நாடகத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. மாவட்ட இளைஞரணித் தலைவர் தோழர் சுப்பு கொள்கைப் பாடல்கள் பாடினார். பள்ளி மாணவர்கள் கார்மேகம், மதுமிதா ஆகியோர் பெரியார் கொள்கை விளக்கப் பாடல்களை பாடினர். 8 ஆம் வகுப்பு மாணவி கீர்த்தனா "பெரியாரின் காலக் கணக்கீடு" என்ற தலைப்பில் உரையாற்றினார். முனைவர் ஜீவானந்தம் மூடநம்பிக்கைகளை ஏன் ஒழிக்க வேண்டும் என்பது குறித்து விளக்கிப் பேசினார்.*

*கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். ஜாதியத்தை ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், ஜாதியற்றோர் இட ஒதுக்கீடு ஏன் தேவை என்பது குறித்தும் உரையாற்றினார். சாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதியர் தங்கள் குழந்தைகளுக்கு தங்களில் யாராவது ஒருவரின் சாதியைக் குறிப்பிட்டுக் கொள்வதால் ஜாதி ஒழியாது. எனவே, ஜாதி மறுப்புத் திருமண இணையரின் குழந்தைகளுக்கு ஜாதியற்றோர் என்ற பிரிவில் தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்று கூறினார். உச்சநீதிமன்றம் விந்திய மலைக்குத் தெற்கே பிராமணர், சூத்திரர் என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளது என்று தீர்ப்பு கூறிய பிறகும் கூட நம்மவர்கள் இங்கு, "நான் சத்ரியன், நான் வைசியன்" என்று கூறிக் கொள்வதை குறிப்பிட்டார். அக்காலத்தில் நகரவை தலைவராக இருந்த பெரியாரின் தந்தையை பார்ப்பன பில் கலெக்டர் பெயர் சொல்லி அழைத்ததைக் குறிப்பிட்டு, அக்கால நிலைக்கும், இன்றைக்கு கால மாற்றத்தாலும் பெரியார் இயக்கங்களின் பணியாலும் இந்த நிலை மாறியுள்ளதை சுட்டிக் காட்டினார். இறுதியாக மாவட்டத் தலைவர் தோழர் செல்லப்பன் நன்றியுரை கூறினார். பிறகு தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது. மரவபாளையம் பகுதி தோழர் ரவிக்குமார் உணவு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.*

**ஆகஸ்டு 1**

*காலை 9 மணிக்கு சென்னிமலை புதுப்பாளையம் பகுதியில் இயக்க ஆதரவாளர் குளத்து ராமு இல்லத்தில் தோழர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. 10.45 மணிக்கு ஊத்துக்குளியில் தெருமுனைப் பிரச்சாரம் தொடங்கியது. ஆதித்தமிழர் பேரவை நிதிச் செயலாளர் நீலவேந்தன் பயணத்தை வாழ்த்திப் பேசினார். முனைவர் ஜீவானந்தம் பயணத்தின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார். செயலவைத் தலைவர் துரைசாமி, மாவட்டச் செயலாளர் அகிலன், ஈரோடு மாவட்டத் தலைவர் செல்லப்பன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், கோவை மாவட்ட அமைப்பாளர் அ.ப சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*நண்பகல் 12 மணிக்கு கருமாரம்பாளையம் பகுதியில் பிரச்சாரம் நடைபெற்றது. பயணத்தின் சிறப்பான நோக்கங்களைப் பாராட்டி கழக ஆதரவாளர்கள் கருமாரம்பாளையம் வேலுச்சாமி, எழில் மற்றும் மாரிமுத்து ஆகியோர் கழகத் தலைவரிடம் ரூ.5000/- வழங்கினர். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார். மதியம் திருப்பூர் வீரபாண்டி பிரிவில் அமைந்துள்ள செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி இல்லத்தில் தோழர்களுக்கு சிறப்பான அசைவ உணவு வழங்கப்பட்டது.*

*மாலை 5 மணிக்கு அருள்புரம் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. தோழர் சுப்ரமணி, அர்ஜுனன் ஆகியோர் பாடல் பாடினர். தோழர் மதுரை மாப்பிள்ளைச்சாமி (எ) லெனின் பாடலுக்குத் தகுந்தவாறு நடனம் ஆடி பொதுமக்கள் அனைவரையும் கூட்டத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார். முனைவர் ஜீவானந்தம் கொள்கை முழக்கமிட்டார். தோழர் முகில்ராசு நன்றி கூறினார்.*

*மாலை 6 மணிக்கு பல்லடம் சூழுசு சாலையில் வீதிநாடகம் பறை முழக்கத்துடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மணிகண்டன் கொள்கைப் பாடல்கள் பாடினார். அவரின் பாடலைப் பாராட்டி அதே பகுதியைச் சார்ந்த சாந்தி என்ற பெண் ரூ 100/- அன்பளிப்பாக வழங்கினார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்பாடுகளை பெண்களும் உற்று கவனித்து வருகின்றனர் என்பதை இது உணர்த்துவதாக இருந்தது.*

*பொதுக்கூட்டத்திற்கு செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி தலைமை தாங்கினார். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். ஆதித் தமிழர் பேரவையின் நிதிச் செயலாளர் நீலவேந்தன் உரையாற்றினார். அவர் தனது உரையில், "மும்பையில் அம்பானியின் 27 மாடி கட்டிடத்திற்கு மாதம் ஒன்றிற்கு மின்கட்டணம் ரூபாய் 6 லட்சமாகவும், தண்ணீர் செலவு மாதம் 2 லட்சம் லிட்டராகவும் உள்ள நிலையில், தினம் ஒன்றுக்கு ரூ 27 க்கு மேல் சம்பாதிப்பவன் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவன் என்ற நிலை ஏற்றுக் கொள்ளக் கூடியதா? இதுதான் சமதர்மமா? என்று கேள்வி எழுப்பினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில், "நீ தமிழனா சாதிக்காரனா? என்று கேட்டால், இன்றைய நிலையில் நான் சாதிக்காரன் என்ற உணர்வே பெரும்பாலானோரிடம் மேலோங்கி உள்ளதை சுட்டிக் காட்டினார். இன்றைக்கு இருக்கிற சாதிய அமைப்பு ஒரு கூம்பு வடிவில் உள்ளதைக் கூறி, அந்தக் கூம்பின் அடிப்பகுதியில் கீழே உள்ளவன் தாழ்த்தப்பட்டவனாகவும், உயர்நிலையில் மேலே உள்ளவன்*



**முனைவர் ஜீவானந்தம் பேசுகிறார்**

*பார்ப்பனனாகவும் உள்ளான் என்றும், ஒவ்வொரு மனிதனும் தன் தோள் மேல் நின்று தன்னை அடிமைப்படுத்துபவனை நினைத்து கோபப்படாமல், தனக்கு கீழ் ஒருவன் உள்ளான் என்று நினைத்து, அவனை அடிமைப்படுத்துவதில் சந்தோசப்படுவதாகக் கூறினார். நாம் எல்லோரையும் கூம்பு வடிவ பிரமிடு வேண்டாம், எல்லோரும் வரிசையாக கைகோர்த்து நில்லுங்கள் என்று சொன்னால் அதில் பாதிக்கப்படுபவன் மேலே உள்ள பார்ப்பானாகத் தான் இருப்பான். எனவே தான் அவன் இந்த சாதிய அமைப்பை விடாமல் கட்டிக் காத்து வருகிறான் என்றும், என் தோள் மேல் இருப்பவன் மட்டுமே எனக்கு எதிரி, அதற்கு மேலே இருக்கும் பார்ப்பானைப் பற்றிக் கவலையில்லை என்று தான் ஒவ்வொருவனும் நினைக்கிறான். இந்த நிலை மாற வேண்டும். நம்மை, இந்த சாதிக் கட்டமைப்பை வலுப்படுத்தி விடாமல் காத்துக் கொண்டிருக்கும் பார்ப்பானின் சூழ்ச்சியை நாம் உணராத வரை நம் தமிழ்ச் சமூகம் உயர முடியாது" என்று கூறினார்.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும் போது, "காசியிலும் பண்டரிபுரத்திலும் சாமியைத் தொட்டு பூசை செய்கிறார்கள். அங்கெல்லாம் தீட்டாகாத சாமி, தென்னிந்தியாவில் மட்டும் சூத்திரன் தொட்டால் தீட்டாகி விடுவது ஏன்? என்ற கேள்வியை எழுப்பி, இந்திய தேசியத்தைக் கொண்டு வரத் துடிக்கும் இந்து இயக்கங்கள், வட இந்தியாவில் உள்ளது போன்ற மாற்றத்தை தென்பகுதியிலும் கொண்டுவரப் போராடுமா?" என்று கேள்வி எழுப்பினார். பெரியார் காலத்திலும் சாதிச் சங்கங்கள் இருந்ததையும், பெரியார் அது போன்ற சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசி இருப்பதையும் சுட்டிக் காட்டினார். அக்காலத்தில் இருந்த சாதிச் சங்கங்கள் தங்கள் சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டதைக் கூறி, அன்றைக்கு நாடார்கள் சாதிச் சங்கம் அமைத்துக் கொண்டு கல்வி நிலையங்கள் அமைத்து தங்கள் சமூகத்தை கல்வியில் உயர்த்தப் பாடுபட்டதையும், வங்கி அமைத்து தங்கள் சமூக மக்கள் பொருளாதாரத்தில் உயர பாடுபட்டதையும் குறிப்பிட்டார். மேலும் கொங்கு வேளாளர் சமூகம் தங்களது தீர்மானத்தில், "விதவைகள் வெள்ளை சேலை அணியும் பழக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும், மறுமணம் வேண்டும்" என்றும் தீர்மானம் நிறைவேற்றியதைக் கூறினார். "ஆனால் இன்றைக்கு இருக்கிற சாதிச் சங்கத் தலைவர்கள் தங்களது தவறுகளை மறைக்கவும், தவறான வழியில் சம்பாதித்த தங்கள் சொத்துக்களை அரசிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ளவும், சமுதாயத்தை வைத்து தங்களை வளப்படுத்திக் கொள்ளவுமே சாதிச் சங்கங்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். சாதிக் கலவரத்தில் ஈடுபட்டு அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும், இடஒதுக்கீட்டால் கிடைத்த பலன்களை அரசு ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறினார். இறுதியாக உடுமலை நகர அமைப்பாளர் தோழர் குணசேகரன் நன்றி கூறினார்.*

**(பயணம் தொடர்கிறது)**

## பயணத்தின் செயல் வீரர்கள்

**சு**யமரியாதை சமத்துவ பரப்புரைப் பயணத்தில் கலந்து கொண்டிருக்கும் தோழர்கள் – சொற் பொழிவாளர்கள்: பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், முனைவர் ஆ.ஜீவானந்தம்

வசூல் குழுத் தோழர்கள் – நங்கவள்ளி கிருஷ்ணன், திருப்பூர்சம்பூகன், திருப்பூர் மூர்த்தி, பல்லடம் மணிகண்டன், பல்லடம் செல்வகுமார், ஆண்டிமடம் சிவக்குமார் (தமிழ்நாடு மாணவர் கழகம்)

கலைக் குழுத் தோழர்கள் – திருச்சி ஆனந்த் (பயிற்சியாளர்), திருப்பூர் குமார், திருப்பூர் நகுலன், திருப்பூர் பிரசாந்த், திருப்பூர் மணிகண்டன், கோபி அர்ச்சுணன், மதுரை மாப்பிள்ளைச்சாமி (எ) லெனின், மேட்டூர் முத்து ரத்தினம், மேட்டூர் ரங்கநாதன், மேட்டூர் மூர்த்தி, மேட்டூர் குருநாத்.

புத்தக விற்பனையாளர் மேட்டூர் முத்து ராஜ்; புகைப்படக் கலைஞர் இளம்பிள்ளை கோகுல கண்ணன்; செய்தியாளர் ஈரோடு சிவக்குமார்; பயண ஒருங்கிணைப்பாளர்கள்: திண்டுக்கல் இராவணன், கிளாகுளம் செந்தில்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 8th August 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆகஸ்டு 15, 2013 | புரட்சி 12 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00

## 20 நாள் பரப்புரைப் பயணம் புதுவையில் நிறைவடைந்தது

# செப்.11 இல் கிராமம் கிராமமாக பரப்புரை தொடங்குகிறது



திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி - தீண்டாமை - பார்ப்பனியம் - பன்னாட்டு பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராக 20 மாவட்டங்களில் நகர்ப் பகுதிகளில் 20 நாட்கள் தொடர்ந்து நடத்திய முதல் கட்டப் பரப்புரை இயக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் இரண்டாமாண்டு தொடக்க நாளான ஆகஸ்டு 12 இல் புதுவையில் நிறைவு செய்தது.

இரண்டாம் கட்டமாக மாவட்டங்களை மய்யமாக்கி கிராமம் கிராமமாக மக்களை சந்திக்கும் அடுத்தக்கட்ட பரப்புரை இயக்கத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி புதுவை நிறைவு விழாவில் அறிவித்தார். புதுவை ஜீவா சதுக்கத்தில் பரப்புரைப் பயண நிறைவு விழா நிகழ்வுகள் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் வழங்கிய கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கின.

தோழர்கள் உரைகளைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பரப்புரைப் பயண நிறைவையொட்டி கழக சார்பில் முடிவெடுக்கப்பட்ட தீர்மானங்களை முன்மொழிந்தார். தீர்மானங்கள் விவரம்:

ஜாதி அமைப்பு முறை ஒழிவதற்கு ஒரே ஜாதிக்குள் நடக்கும் அகமண திருமணங்கள் குறைந்து ஜாதி மறுப்புத் திருமணங்கள் அதிகரிக்க வேண்டும். இடஒதுக்கீடு எனும் சமூகநீதிக் கொள்கையால் கல்வி, அரசுப் பதவிகளைப் பெற்று முன்னேறிவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண், ஆண் இருபிரிவினரும் மதம் ஜாதிகளைக் கடந்து காதல் மணம்புரிய முன் வருகிறார்கள். இந்த சமுதாய மாற்றத்தைச் சகித்துக் கொள்ள முடியாத ஜாதியவாதிகளும்- ஜாதிச் சங்கங்களும்- ஜாதிப் பஞ்சாயத்துகள் வழியாக அவர்களை மிரட்டி, கட்டாயப்படுத்திப் பிரிக்கிறார்கள், “கௌரவக் கொலை” என்ற பெயரில் கொலை செய்யப்படுகிறார்கள். சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை ஜாதியம் தனது கரங்களில் எடுத்துக்கொண்டு ஜாதி வெறிப் பார்ப்பனியத்தை சமூகத்தின் சட்டமாகத் திணிப்பதை எதிர்த்து முறியடிக்க, ஜாதி எதிர்ப்பில் கவலையும் அக்கறையும் கொண்ட அனைத்து முற்போக்கு சக்திகளையும் திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவி அழைக்கிறது.

ஒவ்வொரு ஜாதிப் பிரிவிலும் அனைவருமே ஜாதி அமைப்பின் ஆதரவாளர்கள் அல்ல. ஜாதியை எதிர்க்கக்கூடிய முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு இயக்கங்களில் செயல்படுபவர்களாகவும், ஆதரவாளர்களாகவும், அமைப்புகளைச் சாராமல் ஜாதி எதிர்ப்பைக் கொள்கைகளாக ஏற்றுக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகைய முற்போக்கு சக்திகள் தங்களது ஜாதியத் தலைவர்களின் அணி திரட்டலுக்கும், ஜாதி மறுப்புத் திருமணங்களைத் தடுக்கும் அச்சுறுத்தலுக்கும் தங்கள் எதிர்ப்புகளைப் பதிவுசெய்து கண்டனக் குரலை எழுப்பிட முன்வரவேண்டும். ஜாதி வெறிப் பார்ப்பனியம் தலைதூக்கிட முயலும் சமூகச் சூழலில் சுயஜாதி மறுப்புக் கலகக்குரலின் அவசியத்தை திராவிடர் விடுதலைக் கழகம் சுட்டிக்காட்டுகிறது.

சமூகக் கல்வி ரீதியாக தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு உரிமைகளின் நோக்கம்- ஜாதிகளற்ற சமத்துவ சமுதாயம் படைப்பதற்கே தவிர, ஜாதியத்துக்கு உயிரூட்ட அல்ல என்ற புரிதல் மிகவும் அவசியம் ஆகும். மக்கள் மன்றத்தில் ஜாதி தீண்டாமைக்கு எதிராக இயக்கங்கள் தீவிரப்படுத்தப்படவேண்டிய அதேவேளையில் தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி அரசுகளுக்குக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை திராவிடர் விடுதலைக் கழகம் முன்வைக்கிறது.

அ) ஜாதி மதங்களைக் கடந்து திருமணம் செய்ய விரும்பும் இணையர்களின் உரிமையில் தலையிட்டு, மிரட்டி பிரிக்க முயற்சிக்கும் ஜாதிப் பஞ்சா யத்துகளை நடத்துவோரையும், அந்தப் பஞ்சாயத்துகளில் பங்கேற்போரையும் கடுமையாகத் தண்டிக்க - மத்திய சட்ட வாரியம் ஏற்கெனவே பரிந்துரைத்து அதற்கான சட்ட முன்வரைவையும் தயாரித்துள்ளது. தமிழக அரசு அந்த சட்ட முன்வரைவின் அடிப்படையில் உடனடியாகத் தனிச்சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

ஆ) திருமணப்பதிவு அலுவலகங்களில் வெவ்வேறு மதத்தினருக்கிடையே நடக்கும் திருமணங்களைப் பதிவு செய்யும் சிறப்பு திருமணப் பதிவுச் சட்டத்தில் ஒருமாத முன்அறிவிப்பு வேண்டுமென்ற பிரிவு உள்ளது. இந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி காதல் இணையர்களை அச்சுறுத்திப் பிரித்துவைக்கும் வாய்ப்புகள் இருப்பதால் இந்தக் கால அவகாசத்தை நீக்கி ஏனைய திருமணங்களைப் போலவே உடனடியாகப் பதிவதற்கு சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி அரசுகளை வற்புறுத்துகிறோம்.

இ) ஜாதி மறுப்புத் திருமணம் செய்தோரின் வாரிசுகளுக்கு ஜாதியற்றோர் பட்டியல் ஒன்றை உருவாக்கிக் கல்வி வேலைவாய்ப்புகளில் தனி இடஒதுக்கீடுகளை வழங்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்து அதற்கு இணையாக ஜாதிமறுப்பு மணம் புரிந்த ஜாதியற்றோருக்கான ஒதுக்கீடுகள் அதிகரிப்பது இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்திற்குக் கிடைத்த வெற்றியாக அமையும்.

ஈ) காவல்துறையில் உதவி ஆய்வாளர்கள் நிலைக்கு மேலான நியமனங்களில் அந்தந்தப் பகுதிகளில் அதிக எண்ணிக்கை கொண்ட ஆதிக்க ஜாதிப் பிரிவைச் சார்ந்தவர்களை நியமிக்கக்கூடாது என்பதோடு தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் உள்ள பகுதிகளில் அதே சமூகத்தைச் சார்ந்தோரை நியமிப்பது வழியாக ஜாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் மக்களுக்குப் பாதுகாப்பான உணர்வை உருவாக்க வேண்டுமென்று தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி அரசுகளை வலியுறுத்துகிறோம்.

உ) தீண்டாமைக் குற்றங்கள் மீது உரிய

(8 ஆம் பக்கம்)

### பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு நினைவுப் பரிசு

பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா கழகத்தின் இரண்டாமாண்டு தொடக்க நாளான ஆக.12 ஆம் தேதி புதுச்சேரி ஜீவா சதுக்கத்தில் எழுச்சியுடன் நடைபெற்றன. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்களின் பறை - வீதி நாடகம் - மக்களின் பேராதரவைப் பெற்றன. தொடர்ந்து நகர கழகத் தலைவர் சார்லஸ் தலைமையில் நகர செயலாளர் விஜயன் வரவேற்புரையாற்ற தோழர்கள் தீனதயாளன் (பெரியார் சிந்தனையாளர்), கோகுல் காந்திநாத் (பெரியார் திராவிடர் விடுதலைக் கழகம்), மூர்த்தி (அம்பேத்கர் மக்கள் படை), லோகு அய்யப்பன் (புதுச்சேரி மாநில கழகத் தலைவர்), பால். பிரபாகரன் (கழக பரப்புரை செயலாளர்), விடுதலை இராசேந்திரன் (பொதுச்செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர். தோழர் கொளத்தூர் மணி (தலைவர்) நிறைவுரையாற்றினார். பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. அன்பு எழிலன் நன்றி கூறினார்.

# பா.ஜ.க.வினரையும் சிந்திக்க வைத்த பரப்புரை

***ஆகஸ்டு 2ஆம் தேதியிலிருந்து 12ஆம் தேதி வரை நடந்த சுயமரியாதை சமதர்ம பயணத்தின் செய்தித் தொகுப்பு:***

**ஆகஸ்டு 2**

அலங்கியம் சாலையில் உள்ள அம்மன் மண்டபத்தில் தங்கியிருந்த தோழர்களுக்கு முந்தைய நாள் இரவு உணவு, 2.8.2013 காலை அசைவ உணவு ஆகியவற்றை தாராபுரம் பகுதி பொறுப்பாளர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

காலை 10.30 மணிக்கு தாராபுரம் பேருந்து நிலையம் எதிரே பரப்புரை தொடங்கியது. முனைவர் ஜீவானந்தம் சர்வதேச அளவில் பார்ப்பனியத்தின் நிலை பற்றி விளக்கினார். வழக்கறிஞர் கலையரசன் தேநீர் வழங்கினார். பயணத்தின் நோக்கங்கள் குறித்து, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டியளித்தார். தாராபுரம் பகுதித் தோழர்கள் பரப்புரை நிதியாக ரூ.500/- வழங்கினர்.

நண்பகல் 12 மணிக்கு கணியூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை பறைமுழக்கத்துடன் தொடங்கியது. கழகக் கொடியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி வைத்தார். முனைவர் ஜீவானந்தம் இந்தியாவிற்குள் பார்ப்பனர்கள் வருகை குறித்தும், நம் மன்னர்கள் அவர்களுக்கு அடிபணிந்து, மனுசாஸ்திரத்தை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருவது குறித்தும் விளக்கிப் பேசினார். மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் காந்தி நன்றி கூறினார். கூட்டத்தில் கணியூர் பகுதித் தோழர்கள் கடத்தூர் அய்யப்பன், சரவணன், ராசுக்குட்டி, மாதவன், விஜயன், வெற்றிச்செல்வன், காளிமுத்து, சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதியம் 2 மணிக்கு மடத்துக்குளம் நால்ரோடு பகுதியில் பறைமுழக்கத்துடன் தெருமுனைப் பிரச்சாரம் தொடங்கியது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.

பிறகு உடுமலை மீனாட்சி மண்டபத்தில் தோழர் களுக்கு மதியம் அசைவ உணவு வழங்கப்பட்டது. உடுமலை மலர் இனியனுடைய தந்தையும் தாயாரும் சுவை மிகுந்த இந்த அசைவ உணவைத் தயாரித்து தோழர்களுக்கு வழங்கினர். ஓய்வு நேரத்தில் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்கள் வழக்கம் போல் தங்கள் பயிற்சியைத் தொடர்ந்தனர்.

மாலை 5 மணிக்கு உடுமலைப் பேட்டை பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார், ஆதித் தமிழர் பேரவை பொறுப்பாளர் பெரியார் தாசன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அங்கு கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் சிறப்புரையாற்றி, பயணத்தின் நோக்கங்கள் பற்றி விளக்கினார்.

மாலை 6 மணிக்கு பொள்ளாச்சியில் பரப்புரை தொடங்கியது. ஆனால் இடையில் மழை குறுக் கிட்டதால் பிரச்சாரம் சற்று நேரம் தடைபட்டது. மழை விட்டு விட்டு பெய்து கொண்டு இருந்ததால், மழையிலேயே பிரச்சாரம் நடைபெற்றது. மழையைப் பொருட்படுத்தாமல் மக்கள் கூடி நின்று பரப்புரையைக் கேட்டனர். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.பின்னர் தோழர்கள் பொள்ளாச்சி ராஜ் மஹால் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். தோழர்கள் தங்குவதற்கான மண்டப ஏற்பாட்டை மதிமுக கோவை புற நகர் மாவட்டச் செயலாளர் குகன், மில் செந்தில் செய்திருந்தனர். மற்றும் உணவு ஏற்பாடுகளை திராவிடர் விடுதலைக் கழக கோவை புறநகர் மாவட்ட துணைத் தலைவர் நிர்மல்குமார், பொள்ளாச்சி விஜயராகவன் சிறப்பாகச் செய்திருந்தனர்.

**03.08.2013**

காலை 11 மணிக்கு கிணத்துக்கடவு பகுதியில் பரப்புரை தொடங்கியது.பொள்ளாச்சி விஜய ராகவன் வரவேற்புரையாற்றினார். கழக சொற் பொழிவாளர் முனைவர் ஜீவானந்தம் உரை யாற்றினார். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி பயணத்தின் நோக்கங்கள் குறித்து உரை யாற்றினார். கிணத்துக்கடவு பகுதி திமுக பிரமுகர் களான கதிர்வேல், சே.நடராஜ், மற்றும் தமிழ்ப் பித்தன் ஆகியோர் தேநீர் வழங்கினர். கோவை புறநகர் மாவட்ட துணைத் தலைவர் நிர்மல்குமார் நன்றி கூறினார்.




**பயணத்தில் பங்கேற்றத் தோழர்கள் : நிறைவு விழாவில் எடுத்தப் படம்**

நண்பகல் 12 மணிக்கு உக்கடம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். மாவட்டக் கழகம் சார்பாக சித்தாபுதூர் ஹரிபுரத்தில் அசைவ உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை 5 மணிக்கு காந்திபுரம் பேருந்து நிலையத் தில் பரப்புரை நடைபெற்றது. கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பன்னீர் செல்வம் தலைமை உரையாற்றினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயணத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார். கழகம் இதுவரை செய்த பணிகள், பெரியார் இயக்கத்தின் நோக்கங்கள் குறித்து கூடியிருந்த மக்களிடம் விளக்கினார். கோவை மாநகர அமைப்பாளர் நேருதாஸ் நன்றியுரை கூறினார்.

மாலை 6 மணிக்கு பெரியநாயக்கன் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை நடைபெற்றது. பெரியநாயக்கன் பாளையம் ஒன்றியச் செயலாளர் மோகன்ராஜ் தலைமை வகித்தார். முனைவர் ஜீவானந்தம், கழகத் தலைவர் கொளத்தூர்மணி ஆகியோர் பயணத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கினார். பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத் தலைவர் பிரசன்னா நன்றிரை கூறினார்.

மாலை 7 மணிக்கு வீரபாண்டி பிரிவில் கொடி யேற்று விழா நடைபெற்றது.நாகராஜ் தலைமை வகித்தார். கழகத் தலைவர் கொளத்தூர்மணி கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தோழர்கள் அனைவருக்கும் கூடியிருந்த பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. வீரபாண்டி பாபு நன்றி கூறினார்.

இரவு 8 மணிக்கு மேட்டுப்பாளையம் எல்லம்மா லாட்ஜ் சாலையில் பரப்புரை நடைபெற்றது. கோவை மாவட்டக் காப்பாளர் இராமச்சந்திரன் தலைமை வகித்தார். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும் போது, "அமெரிக்கா, ஜப்பான், இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் இடஒதுக்கீடு உள்ளது. ஆனால் அங்கெல்லாம் சிறுபான்மையாக உள்ள மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. ஆனால் இந்தியாவில் மட்டும் தான் சிறுபான்மையினரான பார்ப்பனர்கள் அனைத்து வேலைவாய்ப்புகளையும் அதிகமாக அனுபவித்துக் கொண்டிருக்க, பெரும்பான்மை மக்கள் இட ஒதுக்கீட்டுக்காக அலைந்து உரிமைகளை பெற வேண்டிய நிலை உள்ளது என்று குறிப்பிட்டார். வட இந்தியாவில் பொதுவுடைமை பேசும் தலைவர்கள் கூட சாதிய அடையாளத்துடன் இருக்கையில், தமிழ்நாட்டில் சாதிக்கென்று கட்சி நடத்தும் தலைவர்கள் கூட தங்கள் சாதியை பெயருக்குப் பின் போடாமல், தயங்குவதற்குக் காரணம் பெரியாரின் புரட்சிதான் என்று குறிப்பிட்டார்.மேலும் அவர் பேசும் போது, இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிற ஷிண்டே, தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் பொதுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றவர். அவர் மராட்டிய முதலமைச்சராக இருந்த போது தான் தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்கினார் என்பதையும் நினைவு கூர்ந்தார்.

தோழர்கள் அனைவரும் இரவு மேட்டுப் பாளையம் வெல்கம் லாட்ஜ் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். இதற்கான ஏற்பாடுகளை மாவட்டக் காப்பாளர் இராமச்சந்திரன் செய்திருந்தார்.

**04.08.2013**

காலை உணவு மாவட்டக் காப்பாளர் இராமச் சந்திரன் இல்லத்தில் வழங்கப்பட்டது. உணவு ஏற்பாடுகளை தோழர் இராமச்சந்திரனுடைய மகன் இங்கர்சால் செய்திருந்தார்.

காலை 10.30 மணிக்கு அன்னூர் பேருந்து நிலை யத்தில் பரப்புரை தொடங்கியது. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்களால், " மது போதை கூட தெளிந்து விடும் ஆனால் சாதி போதை தெளியாது என்பதை விளக்கும் வகையில் வீதி நாடகம் நடைபெற்றது. கழக வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, மற்றும் மணிகண்டன் ஆகியோர் பாடல் பாடினர்.

பரப்புரை நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் அப்பகுதியில் பா.ஜ.க.வினரின் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண் டிருந்ததால், பதற்றமடைந்த காவல் துறையினர் கழகத் தலைவரிடம் வந்து கூட்டத்தை விரைந்து முடிக்கும்படி கோரினர். இருப்பினும் நமது தோழர்கள் திட்டமிட்டபடி நிகழ்ச்சியை நடத்தி முடித்தனர். கழக சொற்பொழிவாளர் முனைவர் ஜீவானந்தம் அவர்களுடைய உரையைப் பாராட்டி அங்கு கூடியிருந்த பார்ப்பனரல்லாத பா.ஜ.க.வினர் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை மாநகரத் தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் பேசும் போது, அன்னூர் பகுதியில் நிலவி வந்த தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றியும் அதற்கு எதிராக கழகம் முன்னெடுத்த போராட்டங்கள் பற்றியும் குறிப்பிட்டார். கோவை புறநகர் மாவட்டச் செயலாளர் வெள்ளமடை நாகராசு நன்றியுரை கூறினார். அந்நேரத்தில் அங்கு பா.ஜ.க.வினர் கூடியிருந்ததால் காவல்துறையினர் நமது வாகனங்களுக்குப் பாதுகாப்பாக அன்னூர் எல்லை வரை கூடவே வந்தனர்.

காலை 11.30 மணிக்கு சேவூரில் பரப்புரை நடைபெற்றது. ஈரோடு சுப்ரமணி பாடல் பாடினார். முனைவர் ஜீவானந்தம் பயணத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார். சேவூர் கிளைச் செயலாளர் தோழர் ரமேஷ் நன்றி கூறினார். அப்பகுதியைச் சார்ந்த கழக ஆதரவாளர் குமார் தோழர்களுக்கு தேநீர் வழங்கினார். நிகழ்வில் சேவூர்

(3 ஆம் பக்கம்)

# ஊர்வலத்துடன் பயணத்துக்கு உற்சாக வரவேற்பு

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதித் தோழர்கள் ஆனந்த், தனசேகர், செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நண்பகல் 12.30 மணிக்கு ரங்கநாதபுரம் கிளைத் தோழர் ரமேஷின் தந்தையார் படத் திறப்பு நடைபெற்றது. அதன் பிறகு அங்கு அமைக்கப்பட்டிருந்த கிளைக்கழகக் கொடியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி வைத்தார். மதியம் நம்பியூர் ஒன்றியம் சார்பாக எலத்தூர் அம்பேட்கர் நகர் சமுதாயக் கூடத்தில் அசைவ உணவு வழங்கப் பட்டது. சிறிது நேர ஓய்வுக்குப் பின் எலத்தூர் பேருந்து நிலையத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது.

மாலை 4.30 மணிக்கு நம்பியூரில் அமைந் துள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணி வித்தார். பிறகு நம்பியூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. பள்ளிக் குழந்தைகள் கனல்மதி, இளமதி, வான்மதி ஆகியோர் கொள்கைப் பாடல்கள் பாடினர். வீதிநாடகம் நடைபெற்றது.கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினார். நம்பியூர் பகுதியில் அன்று சந்தை என்பதால் ஏராளமான பொதுமக்கள் திரண்டு நின்று பேச்சைக் கேட்டனர். நம்பியூர் ஒன்றியச் செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

மாலை 5.30 மணிக்கு குருமந்தூர் மேடு பகுதியில் கொடியேற்று விழா நடைபெற்றது. அலிங்கிய கிளைக் கழகம் சார்பில் முத்து லிங்கம் மற்றும் ரவி ஆகியோர் பயண நிதி யாக கழகத் தலைவரிடம் ரூ.2000/- வழங்கினர்.


மாலை 6 மணிக்கு கோட்டுப் புள்ளாம் பாளையம் புதிய கிளை திறப்புவிழா நடை பெற்றது. பெயர்ப்பலகை மற்றும் கழகக் கொடியினை கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி வைத்தார். புதிய கிளை சார்பில் தேநீர் வழங்கப்பட்டது.கோட்டுப் புள்ளாம் பாளையம் கிளை சார்பில் பயண நிதியாக ரூ.1000/- கழக தலைவரிடம் வழங்கப்பட்டது. நிகழ்வில் சூரியப் பிரகாஷ், தேவராஜ், கார்த்திக், பூபதி, சேகர், அழகு பூபதி, ரமேஷ், ரவி, குமரவேல், மூர்த்தி, சரவணன், சூர்யா, நவீன், சுரேஷ், சந்திரசேகர், தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலை 7 மணிக்கு கோபி பேருந்து நிலையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. வீதி நாடகம் மற்றும் பறைமுழக்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. மாவட்ட துணைத் தலைவர் கா.சு வேலுச்சாமி, பெரியார் தொழிலாளர் கழகக் தலைவர் இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் , “இன்றைக்கு இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ மதத்திலும் கூட சாதி புகுந்து விட்டது. கிறிஸ்தவ நாடார், கிறிஸ்தவ வேளாளர், கிறிஸ்தவ ஆதிதிராவிடர் என்று போட்டுக் கொள்கின்றனர். ஆனால் அவற்றின் தத்துவத்தில் அடிப்படையில் சாதி இல்லை. ஆனால் இந்து மதத்தின் அடிப்படையே சாதியாக, மக்களை பிளவுபடுபடுத்துவதாக உள்ளது என்று கூறிய கழகத் தலைவர் மேலும், அண்மையில் மாமல்லபுரத்தில் நடந்த வன்னியர் சங்க கூட்டத்தில் மேடையில் கவுண்டர் சமூகப் பிரதிநிதிகள், தேவர் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை வைத்துக் கொண்டு, வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குரு பேசும் போது, “நாங்கெல்லாம் நாலாஞ்சாதிப் பசங்க இல்லை” என்று நாலாம் வர்ணமான சூத்திர இனத்தைச் சார்ந்த பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு, அவ்வாறு பேசியதைக் குறிப்பிட்ட கழகத் தலைவர், இதைத் தான் எங்கள் பகுதியில் “கருப்பட்டியைக் கொடுத்து செருப்பால் அடிப்பது என்பார்கள்” என்று வேடிக்கையாகக் கூறினார்.

இந்திராகாந்தி மக்களுக்கு பயன் தர வேண்டும் என்று வங்கிகளை தேசிய மயமாக்கினார். ஆனால் அதே காங்கிரஸ் அரசு தனியார் வங்கிகளை இன்றும் மீண்டும் அனுமதிப்பதை நினைவு கூர்ந்தார்.அண்ணல் அம்பேட்கர், நேரு அமைச்சரவையில் இருந்து பதவி விலகிய போது, தான் பதவி விலகுவதற்கான நான்கு காரணங்களில் ஒன்றாக பிற்படுத்தப்பட்டோருக் கென்று இட ஒதுக்கீட்டுக்கென தனியாக ஒரு ஆணையம் அமைக்க தான் கூறியிருந்ததையும், ஆனால் நேரு அரசு அதில் கவனம் செலுத்தாததால், தான் சட்ட அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாகக் கூறினார். ஆனால் பிற்படுத்தப்பட்டோருக்கென்றும் பாடுபட்ட அவரைத் தான் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டுமான தலைவராக சித்தரிப்பதையும் வேதனையுடன் கூறினார்.

இறுதியாக ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் நிவாசு நன்றி கூறினார். தந்தை பெரியார் திராவிடர் கழக நகரத் தலைவரும் தோழர் நிவாசு அவர்களின் மாமனாருமான தோழர் நாகப்பன் இல்லத்தில் மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான அசைவ உணவு வழங்கப்பட்டது. தோழர்கள் கோபி வெற்றிவேல் மன்றம் லாட்ஜில் தங்க வைக்கப்பட்டனர்.



## 05.08.2013

காலை 10 மணிக்கு பிரம்ம தேசம் பகுதியில் கழகத்தின் தீவிர ஆதரவாளரும், பெரியார் பற்றாளரு மான தங்கதுரை இல்லத்தில் காலை உணவு வழங்கப் பட்டது. காவலாண்டியூர் பகுதியைச் சார்ந்த கழகத் தோழர்கள், 20 க்கும் மேற்பட்ட வாகனங்களில் பரப்புரை பயணக் குழுவினரை பிரம்மதேசத்திலிருந்து வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

பிறகு 11 மணிக்கு அந்தியூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது.தோழர் மணிகண்டன், சூலூர் தமிழ்ச்செல்வி ஆகியோர் பாடல் பாடினர். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி நன்றி கூறினார்.

காலை 12.30 மணிக்கு குருவரெட்டியூர் பெரியார் படிப்பகத்தில் தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. குருவரெட்டியூர் பேருந்து நிறுத்தத் தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் மாலை அணிவித்தார்.அங்கிருந்து தோழர்கள் ஊர்வலமாக பரப்புரை நடக்கும் பெரியார் திடலுக்குச் சென்றனர். கூட்டத்திற்கு ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக சோதி தலைமை வகித்தார்.கழக வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி உரையாற்றினார்.

பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் தனது உரையில், தென்காசி கோவிலுக்கு ராஜகோபுரம் அமைத்துத் தந்த தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தன், குடமுழுக்கன்று கோவிலில் நுழைய முற்பட்டு, கோவில் அர்ச்சகர்களால் அவமதிக்கப்பட்டதைக் கூறினார். சீரங்கம் கோவில் மூலஸ்தானத்தில் தங்கக் கூரை அமைப்பதற்கு லட்சக்கணக்கில் பணம் தந்த இளையராஜா தாழ்த்தப்பட்டவர் என்று காரணம் காட்டி அவமதிக்கப்பட்டதைக் கூறி, பார்ப்பானைப் பொருத்தவரை தாழ்த்தப்பட்டவனும் ஒன்று தான், பிற்படுத்தப்பட்டவனும் ஒன்று தான் என்று கூறினார். அரசியல் கட்சிகள் தேர்தலைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கையில், திராவிடர் விடுதலைக் கழகமோ, அடுத்த தலை முறையைப் பற்றி சிந்தித்து இந்தப் பரப்புரைப் பயணத்தை மேற்கொள்கிறது என்று பேசினார்.

அப்பகுதியில் சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்ட விஜய்-உமா தம்பதியர் கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இறுதியாக தோழர் நிவாசு நன்றி கூறினார். தோழர் நாத்திக சோதி இல்லத்தில் தோழர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது.

அங்கிருந்து தோழர்கள் காவலாண்டியூர் புறப் பட்டனர். கண்ணாமூச்சி எல்லையில் தோழர்களுக்கு தாரைதப்பட்டை பட்டாசு முழங்க சிறப்பான வரவேற்பு வழங்கப் பட்டது.கண்ணாமூச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் செல்வராஜ், செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் பயணக் குழுவினரை வரவேற்றனர். (கண்ணாமூச்சி மற்றும் காவலாண்டியூர் பகுதித் தோழர்கள் சார்பாக பயணநிதி வழங்கப்பட்டது. அது பற்றிய செய்தி தனியே) காவலாண்டியூரில் அமைக்கப்பட்டுள்ள படிப்பகத்தை தோழர்கள் பார்வையிட்டனர். அனை வருக்கும் தேநீர் மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. வீதி நாடகம், பறைமுழக்கத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். கொளத்தூர் நகரச் செயலாளர் ராமமூர்த்தி நன்றி கூறினார்.

மாலை 6 மணிக்கு மேட்டூர் பெரியார் படிப்பகத்தி லிருந்து பறை ஆட்டத்துடன் தோழர்கள் ஊர்வலமாக பொதுக்கூட்டம் நடைபெறும் சதுரங்காடிக்குச் சென்றனர். திருப்பூர் தோழர் பிரசாத் சிலம்பாட்டம் ஆடியபடி ஊர்வலத்தின் முன் சென்றார். பிறகு நடத்தப்பட்ட வீதி நாடகத்தில் சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழக பயிற்சியாளர் ஆனந்த், நங்கவள்ளி கிருஷ்ணன், மற்றும் ஓட்டுநர் அவிநாசி ஆகியோர், பார்ப்பன மந்திரங்களின் பொருள் குறித்தும், அந்த மந்திரங்களில் மக்கள் எவ்வாறு இழிவுபடுத்தப்படு கின்றனர் என்பது குறித்தும் நகைச்சுவையுடன் நடித்துக் காட்டி மக்களின் பாராட்டைப் பெற்றனர். மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவினரின் பாடல்கள் கூட்டத்தினரைக் கவர்ந்தது.

பிறகு தொடங்கிய பொதுக்கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கோவிந்தராசு தலைமை தாங்கினார். சேலம் மண்டலச் செயலாளர் சக்திவேல், ஜஸ்டின், முனைவர் ஜீவானந்தம், வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, பரப்புரைச் செய லாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். அவர் தனது உரையில் கூறும் போது, “நீயும் மனிதன் நானும் மனிதன், உனக்குள்ள அத்தனை உரிமைகளும் எனக்கும் உண்டு என்று எண்ணி நம்மை நாமே மதிப்பதுதான் சுயமரியாதை என்று கூறினார். காந்தி சுயமரியாதை என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பெரியார் அந்த சொல்லிற்கு அழுத்தமாக அர்த்தம் கொடுத்தார். ஒரு கூட்டத்தில் தந்தை பெரியார் காந்தியைப் பற்றி பேசும் போது “தோழர் காந்தி” என்று குறிப்பிட்டதற்கு கூட்டத்தில் இருந்து எதிர்ப்பு கிளம்பியது, அதற்கு பதில் கூறிய பெரியார், நான் சாதாரண ஆத்மாவையே நம்புவதில்லை, அதனால் மகாத்மா எல்லாம் எனக்கு பொருட்டல்ல” என்று கூறியதை நினைவு கூர்ந்தார். சுயமரியாதை இயக்கம் தமிழ்நாட்டில் வலுப்பெறும் முன் தமிழ்நாட்டிற்கு வந்த காந்தி, சீனிவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணையில் தங்க வைக்கப் பட்டதையும், சுயமரியாதை இயக்கம் முழுவீச்சாக தமிழ்நாட்டில் செயல்பட்டு, பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகளை வெளியிட்டு வந்த 1926 ல் மீண்டும் தமிழ்நாட்டிற்கு காந்தி வந்தபோது, சீனிவாச அய்யங்கார் வீட்டு அடுக்களை வரை காந்தியின் மனைவி அனுமதிக்கப்பட்டதையும் காந்தியே குறிப்பிட்டு உள்ளதை நினைவு கூர்ந்தார்.

(4 ஆம் பக்கம்)

# பள்ளிகளில் ஜாதி கேட்பதால்தான் ஜாதியம் நீடிக்கிறதா?

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)



சென்னையில்...

RSS இயக்கத்தை உருவாக்கிய கோல்வால்க்கர் இந்துப் பண்பாடு என்றால் எது என்பதற்கு விளக்கம் கூறும் போது, " ஒரு ஆங்கில அதிகாரியும் அவரது பியூனும் வந்து கொண்டிருக்கையில் எதிரே வந்த நாயுடு ஒருவர் அதிகாரியுடன் கைகுலுக்கினார், ஆனால் அதே நாயுடு சமூகத்தவர் பியூனின் காலில் விழுந்து கும்பிட்டார். ஏன் இவ்வாறு நடக்கிறீர்கள் என்று கேட்ட அதிகாரியிடம் அந்த நாயுடு சமூகத்தவர் " அய்யா நீங்கள் எனக்கு அதிகாரி ஆனால் உங்கள் பியூன் பிராமண சமூகத்தைச் சார்ந்தவர், ஆனாலும் அவர்தான் எங்களுக்கு கடவுள் போன்றவர்" என்றார். இதுதான் இந்துப் பண்பாடு என்று கோல்வால்க்கர் கூறியதை நினைவு கூர்ந்த கழகத் தலைவர் மீண்டும் பேசும் போது கும்பகோணம் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த 2 தண்ணீர் பானைகளில் ஒன்று பார்ப்பன மாணவர்களுக்கும் இன்னொன்று மற்றவர்களுக்கும் என்ற பிரிவினை தான் தி.க மாணவர் கழகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது என்று குறிப்பிட்டார். அன்று ஆதிக்க சாதியான பார்ப்பானுக்கு அடிமையாக இருந்து இந்த பிரிவினையை எதிர்த்துப் போராடிய அந்த பிற்படுத்தப்பட்ட சமூகம், இன்று தனக்கு கீழ் உள்ளதாக தான் கருதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக, தேநீர் கடைகளில் 2 குவளைகளை வைக்கிறார்கள். அன்று பார்ப்பனர்களை எதிர்த்து பிற்பட்டோருக்கு ஆதரவாகப் போராடிய அதே பெரியார் இயக்கங்கள் தான், இன்று தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக பிற்படுத்தப்பட்டோர் செய்யும் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடுகிறது என்று குறிப்பிட்டார்.

திருமங்கலம் கோவிலில் நாடார்கள் தேங்காய் உடைத்ததாக ஒரு வழக்கு வந்தபோது, தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், "நாடார்கள் இழிஜாதி என்பதால் அவர்கள் கோவிலுக்குள் தேங்காய் உடைக்கக் கூடாது, கோவிலில் உள்ள அய்யரிடம் கொடுத்துதான் உடைக்க வேண்டும் என்று தீர்ப்பு கொடுத்ததைக் குறிப்பிட்டார்.

இறுதியாக மேட்டூர் நகரத் துணைத் தலைவர் தோழர் அம்ஜத்கான் நன்றி கூறினார். தோழர்கள் மேட்டூர் தாய்த் தமிழ் பள்ளியில் தங்க வைக்கப் பட்டனர்.

**06.08.2013**

காலை 8 மணிக்கு மேட்டூர் அணையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டனர். சேலம் மாவட்டப் பொருளாளர் தோழர் ஆசை அவர்களின் உதவியால் சிறப்பு அனுமதி பெற்று, மேட்டூர் அணையின் மேல் பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்த்தனர்.

காலை 10 மணிக்கு நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. மாவட்ட அமைப்பாளர் தோழர் அன்பு மற்றும் அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். நங்கவள்ளி நகர துணைச் செயலாளர் கண்ணன் நன்றி கூறினார்.

காலை 11 மணிக்கு மேச்சேரி பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு பாடல் பாடினார். முனைவர் ஜீவானந்தம், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். மல்லிகுந்தம் பகுதி அமைப்பாளர் அன்பழகன் நன்றி கூறினார்.

சிந்தாமணியூர் பகுதித் தோழர் ஜெயப்பிரகாஷ் இல்லத்தில் தோழர்கள் அனைவருக்கும் மதியம் உணவு வழங்கப்பட்டது. சிறிது நேர ஓய்வுக்குப் பின் சிந்தாமணியூர் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். தோழர் ஜெயப்பிரகாஷ் நன்றி கூறினார்.

மாலை 4.30 மணிக்கு ஓமலூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. வீதி நாடகம், பறை முழக்கம் நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.

மாலை 7 மணிக்கு இளம்பிள்ளை பேருந்து நிலையத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இடங்கனசாலை எல்லையிலிருந்து பயணக்குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வீதிநாடகம் பறைமுழக்கத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. சேலம் தோழர் ரெக்ஸ் பாடல் பாடினார். பொதுக் கூட்டத்திற்கு தங்கதுரை தலைமை வகித்தார். கோகுலக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். முனைவர் ஜீவானந்தம், வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, பரப்புரைச் செயலாளர் பால்பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். அவர் பேசும் போது, "இன்றைக்கு பள்ளியில் சாதி கேட்பதால் தான் சாதி வளர்கிறது என்று சிலர் பேசிக்கொண்டு இருக்கிறார்கள், பள்ளியில் சாதி கேட்பது அவனை முன்னேற்றத் தானே தவிர இழிவுபடுத்தவோ, சாதியை மேலும் ஆதரிக்கவோ அல்ல. உதாரணத்திற்கு "பேருந்து நிலையத்தில் ஒருவன் முகம் வாட்டத்துடன் நின்று கொண்டிருந்தால் அவனிடம் சென்று உன்னிடம் பணம் உள்ளதா என்று கேட்பதற்கும், கையில் ஒரு பைசா கூட இல்லாமல் நீ எல்லாம் ஏன் இங்கே நிற்கிறாய் என்று கேட்பதற்கும் வேறுபாடு உள்ளது. இந்தக் கேள்வி அவனை இழிவுபடுத்துவதற்காகக் கேட்பது, ஆனால் முன்னால் கேட்ட கேள்வி உதவுவதற்காகக் கேட்டது, இதைப் போல் தான் பள்ளிகளில் சாதி கேட்பதும்" என்று குறிப்பிட்டார். சாதியை ஒழிக்க வேண்டும் என்று சொல்கின்ற நமது இயக்கம் தான் இடஒதுக்கீடு வேண்டும் என்று போராடுகிறது. தனியார் துறை கூடாது என்று சொல்கின்ற நமது இயக்கம் தான் தனியார் துறையில் இடஒதுக்கீடு கேட்கிறது. சாதி ஒழிய வேண்டும் தனியார் துறை கூடாது என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் சாதி இருக்கும் வரை இடஒதுக்கீடு வேண்டும் என்று தான் நாம் போராடுகிறோம். எந்தச் சாதியால் ஒருவன் அடிமைப்படுத்தப்பட்டானோ அதே சாதியைக் கேட்டு, அதற்கு இட ஒதுக்கீடு கொடுத்துதான் அவனை முன்னேற்ற முடியும் " என்று கூறினார்.

இறுதியாக இளைஞரணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் நன்றி கூறினார். இளம்பிள்ளை படிப்பகத்தில் தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

**07.08.2013**

காலை 10 மணிக்கு வாழப்பாடி பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். சேலம் மாவட்ட துணைச் செயலாளர் மகேந்திரன் நன்றி கூறினார்.

ஆத்தூர் நகராட்சி மண்டபத்தில் ஆத்தூர் சிவசுப்ரமணி மதிய உணவு வழங்கினார்.

மாலை 7 மணிக்கு ஆத்தூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். போடப்பட்டிருந்த இருக்கைகள் போதாததால் ஏராளமான பொதுமக்கள் தரையில் அமர்ந்து நிகழ்ச்சியைக் கேட்டனர். இலுப்பநத்தம் தோழர் காளிதாஸ் நன்றி கூறினார். கூட்டம் முடிந்தும் கூட புத்தக விற்பனை தொடர்ந்து நடைபெற்றது. பொதுமக்கள் மிகுந்த ஆர்வமுடன் புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

(5 ஆம் பக்கம்)



நம்பியூரில்...

# காலத்தைக்கடந்துநிற்கும்பெரியாரியம்

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துண்டறிக்கை விநியோகித்து கடைவீதி வசூலில் ஈடுபட்ட தோழர்களிடம் ஒருவர், நான் ஒரு பார்ப்பனர் என்றாலும் கூட நான் பெரியார் பற்றாளன் என்று கூறி நன்கொடை அளித்தார்.

இரவு விழுப்புரம் கருங்குழி தோழர் வெற்றி இரவு உணவு வழங்கினார். தோழர்கள் அனைவரும் கள்ளக்குறிச்சி அரிசி ஆலை உரிமையாளர்கள் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

**08.08.2013**

நண்பகல் 12 மணிக்கு வாழவச்சனூர் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை நடைபெற்றது. தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த ராமர் தலைமை வகித்து உரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் பயணத்தின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் நாவப்பிள்ளை நன்றி கூறினார். மதிய உணவு ஏற்பாடுகளை கடுவனூர் நாகராஜ் செய்திருந்தார்.

மாலை 5 மணிக்கு குங்கிலிநத்தம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் இளையராஜா நன்றி கூறினார்.

மாலை 7 மணிக்கு திருவண்ணாமலை சுதந்திர பொன்விழா நினைவுத் தூண் அருகில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி பயணத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கிப் பேசினார். மாவட்ட அமைப்பாளர் தோழர் சாக்ரடீஸ் நன்றி கூறினார். தோழர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர் தோழர்கள் அனைவருக்கும் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

**09.08.2013**

காலை 10 மணிக்கு செங்கம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒன்றியச் செயலாளர் ஆனந்த், கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்து பயணத்தை வாழ்த்திப் பேசினார். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் சாக்ரடீஸ் நன்றி கூறினார். விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் காமராஜ், டாஸ்மாக் தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாவட்டச் செயலாளர் தோழர் ரத்தினம் மற்றும் அரசு ஊழியர் அய்க்கியப் பேரவையின் மாவட்ட துணைச் செயலாளர் ராமச்சந்திரன் ஆகியோர் கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்தனர். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

மதியம் 2 மணிக்கு ஊத்தங்கரை நகராட்சி மண்டபத்தில் தோழர்களுக்கு மதிய உணவு வழங்கப் பட்டது. உணவு ஏற்பாடுகளை தோழர் மூங்கிலேரி மாதேஸ்வரனும் மண்டப ஏற்பாட்டைத் தோழர் வெங்கடாச்சலமும் செய்திருந்தனர்.

மாலை 3 மணிக்கு ஊத்தங்கரை பெரியார் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம், கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட துணைத் தலைவர் தோழர் மாதேஸ்வரன் நன்றி கூறினார். நிகழ்வில் ஊத்தங்கரை தோழர் ஆசிரியர் சி.வீரமணி குடும்பத்தாருடன் கலந்து கொண்டார்.

மாலை 7 மணிக்கு காவேரிப்பட்டினம் பேருந்து நிலையத்தில் "மக்கள் போராளி தோழர் பழனி" நினைவு மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தி.குமார் தலைமை வகித்தார். ஒன்றிய அமைப்பாளர் பழனிபிரபு வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பிரேம்குமார், மாவட்டத் துணைத் தலைவர் கிருட்டிணன், மாவட்ட அமைப்பாளர் பழனி, மாவட்டத் துணைச் செயலாளர் வாஞ்சிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல அமைப்புச் செயலாளர் சக்திவேல், முனைவர் ஜீவானந்தம், தமிழ்த் தேச குடியரசு இயக்கத்தின் தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசும்போது," சாதிச் சங்கம் அமைத்துக் கொண்டு சிலர் மாமல்லபுரத்தில் இளைஞர்களைத் தூண்டி விடும் வகையில் பேசிய ஜாதிவெறி பேச்சுகள் காரணமாக மரக்காணத்தில் கலவரம், தருமபுரியில் கலவரம் என்று தமிழகத்தில் நடந்த நிகழ்வுகளை நாம் அறிவோம். வடமாநிலங்களில் காதலுக்கு எதிராக சாதிவெறியுடன் நடப்பதைப் போன்ற இந்த நிகழ்வுகளைக் கேட்க , எதிர்க்க யார் முன்வருவது என்ற நிலையில் தான் பெரியார் இயக்கங்கள் இது போன்ற வன்முறைக்கு எதிராக எதிர்ப்பு நிலையை எடுத்தோம். இதற்காகத்தான் திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ச்சியாக மக்களைச் சந்தித்து இது போன்ற பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகி றோம் என்று கூறிய பொதுச்செயலாளர், இட



**இளம்பிள்ளையில்...**

ஒதுக்கீடு என்பதன் நோக்கமே சாதியற்ற சமூகம் அமைக்க வேண்டும் என்பதுதான், எதன் காரணமாக மனிதன் அடிமைப் படுத்தப்பட்டா னோ, அதை வைத்து அவனை மேலே தூக்கி விடு வதற்காகத்தான் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இன்றைக்கு தந்தை பெரியாரின் கருத்துகள் பொதுத் தளத்தில் விவாதிக்கப்படுவது போல வேறு எவருடைய கருத்துக்களும் விவாதம் ஆக்கப்படுவது இல்லை. 1973இல் தந்தை பெரியார் இறந்த பிறகும் இன்றைக்கும் அவரது கருத்துக்கள் தேவையாக இருக்கிறது. காந்தி அன்றைக்கு சுயசார்பு வேண்டும் என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு அவர் பெயரால் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் கட்சி சுயசார்பு வேண்டாம் என்கிறது.

அன்றைக்கு நம் மக்களிடம் பரவலாக பரவி இருந்த குடிசைத் தொழில்கள் இன்றைக்கு பெரு நிறுவனங்களின் வரவால் இருக்கும் இடம் தெரியாமல் அழிந்து விட்டன. இன்றைக்கு பால் விலையை விட ஒரு லிட்டர் தண்ணீரின் விலை அதிகமாக உள்ளது. என்று கூறிய பொதுச் செயலாளர், மேலும் பேசும்போது,

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் கூறும் போது, இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்கள் இந்தியாவோடு இல்லாமல் தனியாக இருந்தால், அவை தான் முன்னோடி மாநிலமாக இருக்கும், ஆனால் அவை இந்தியத்திற்குள் இருப் பதால் தான் வஞ்சிக்கப்பட்டு, பின் தள்ளப்படும் போக்கு அதிகமாக உள்ளது. இன்றைக்கு ரயில் பயணங்களில் டிக்கெட் எடுப்பது கூட தமிழக மக்களிடம் தான் ஒரு பழக்கமாக உள்ளது. ஆனால் வட மாநிலங்களில் ரயில் பயணிகள் பெரும்பாலும் டிக்கெட் எடுக்காமல் தான் பயணம் செய்கின்றனர். இவ்வாறு ஏற்படும் இழப்பைச் சரிகட்ட ரயில்வே பட்ஜெட்டில் போடப்படும் வரி என்பது அனைத்து மக்களுக்குமாக உள்ளது. நமக்கு கடன் கொடுக்கிற உலக வங்கி சேவைத் திட்டங்களுக்கு அதிகம் செலவு செய்ய வேண்டாம் என்கிறது.

வோடாபோன் நிறுவனம் அரசுக்கு தர வேண்டிய 11 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்கிறது. இதை உச்சநீதிமன்றமும் ஆதரிக்கிறது. ஆனால், கல்விக் கடன் பெற்று அதை திருப்பிக் கட்டாத மாணவர்களின் பெயர்ப் பட்டியலை வங்கியின் முன் வைக்கிறது ஸ்டேட் பேங்க் , இதை யாரும் எதிர்த்து கேள்வி கேட்பதில்லை என்றார்.

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி பேசும் போது, "அன்றைக்கு சென்னைக்கு படிக்கச் செல்லும் மாணவர்கள் அங்கு தங்கிப் படிக்க வசதி இல்லை, உணவகம் இல்லை. இந்த நிலையில் தான் டாக்டர் நடேசனார் 1912 ஆம் ஆண்டில் "திராவிடர் தங்கும் இல்லம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி சென்னைக்கு வந்து இங்கு கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச உணவு வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

பெரியார் நீதிக்கட்சியினரைப் பார்த்து " யாரை எதிர்த்து பார்ப்பனர் அல்லாதோர் இயக்கம் என்று ஆரம்பித்தீர்களோ, சடங்கு சம்பிரதாயம் என்ற பெயரில், அந்த பார்ப்பனர் காலிலேயே போய் விழுகிறீர்களே" என்று கண்டித்தார். பார்ப்பன புரோகிதர்களை திருமணத்திற்கு பார்ப்பனர்களை அழைக்கக் கூடாது என்றார்.

அறநிலையத் துறையின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்வதற்காக 1962இல் அமைக்கப்பட்ட சி.பி இராமசாமி அய்யர் பெரும்பாலான கோவில்களில் இருக்கும் அர்ச்சகர்களுக்கு சமஸ்கிருத மந்திரமே தெரிய வில்லை, உச்சரிப்பும் தவறாக உள்ளது. என்று அரசுக்கு அறிக்கை கொடுத்ததை நினைவு கூர்ந்தார்.

மேலும் கழகத் தலைவர் பேசும் போது, அன்றைக்கு சந்துர்க்கர் என்ற நீதிபதி, தான் சார்ந்த பார்ப்பன சமூகத்தவரையே நீதிபதி பதவிக்கு பரிந்துரை செய்த போது, அன்றைக்கு சட்ட அமைச்சராக இருந்த பொன்னையன் அதை ஏற்க மறுத்து நிராகரித்ததை நினைவு கூர்ந்தார்.

மேலும், பழனி மலைக்கோவிலில் நம்மவர் களான பண்டாரங்கள் தான் அர்ச்சகர்களாக இருந்தனர். திருமலை மன்னனின் அமைச்சராக இருந்த ராமப்பையன் என்ற பார்ப்பான், அந்த பண்டாரங்களின் கையால் விபூதி வாங்க மறுத்து, கொடுமுடி பகுதியில் இருந்து பார்ப்பன அர்ச்சகர் களைக் கொண்டு வந்து பழனி கோவிலில் அமர்த்தி யதை அங்குள்ள செப்பேடுகள் குறிப்பிடுவதைக் குறிப்பிட்டார்.

கேரளாவில் ஒரு தாழ்த்தப்பட்டவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், தீர்ப்பளித்த துரைசாமி ராஜு, ராஜேந்திர பாபு ஆகிய நீதிபதிகள் அர்ச்சகராக தாழ்த்தப் பட்டவர் நியமிக்கப்பட்டது செல்லும் என்று தீர்ப்பளித்தனர். ஆனால் தமிழகத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சச்சகராகலாம் என்ற அரசின் உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது அதே உச்ச நீதிமன்றம். ஆனால் அன்றைக்கு கேரளாவிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது தமிழகப் பின்புலத்தில் வந்த நீதிபதிகள், ஆனால் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்திற்கு தடை


(6 ஆம் பக்கம்)

# முற்போக்கு அமைப்புகள் பயணக் குழுவுக்கு வரவேற்பு

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியது வட நாட்டு நீதிபதிகள் என்று கூறி, ஒரு சட்டப் புத்தகத்தில் உள்ள நீதியானது ஒவ்வொரு வருக்கும் எவ்வாறு மாறுபடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினார். எனவே தான் நீதித் துறையிலும் இட ஒதுக்கீடு தேவை என்பதை திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது என்றார். இறுதியாக மாவட்ட மகளிரணி அமைப்பாளர் தோழர் முத்துலட்சுமி நன்றி கூறினார்.

பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தைச் சுற்றிலும் சீருடை அணியாத உளவுத் துறையினர் 13 பேர், தலைவர்கள் பேசுவதைக் குறிப்பெடுத்துக் கொண்டும், வீடியோ எடுத்தும், செல்பேசியில் பதிவு செய்தவாறும் இருந்தனர்.



ஓமலூரில்....

**10.08.2013**

காலை 11 மணிக்கு ஜோலார்பேட்டை பெரியார் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. கழகம் நடத்தும் இந்தப் பரப்புரையை வரவேற்று, திமுக, மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிய பொதுவுடைமைக் கட்சி, மனித உரிமை பாதுகாப்பு இயக்கம், விவசாய ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புகளின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ம.ஜ.க.வைச் சார்ந்த கார்த்திகேயன் பாடல் பாடினார். நெமிலி பகுதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் திலீபன் வரவேற்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த இரா. முல்லை, ம.ஜ.க.வைச் சார்ந்த மனோகர், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த பகுத்தறிவாளன் ஆகியோர் பயணத்தை வாழ்த்தி உரையாற்றினர். பயணத்தின் நோக்கங்களை விளக்கி கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்.

இளைஞர் இயக்கத்தைச் சார்ந்த குடியாத்தம் சிவா நன்றி கூறினார்.

முன்னதாக கழகத்தின் பொதுச்செயலாளரை மதிமுக நகரச் செயலாளர் ரகுநாத் சால்வை அணிவித்து வரவேற்றார்.

பேரறிவாளனின் தந்தை குயில்தாசன், வழக்கறிஞர் ஜேக்கப் கரிகாலன், திமுகவைச் சார்ந்த மகி அன்பழகன் ஆகியோர் தோழர்களுக்கு தேநீர் வழங்கினர். நிகழ்வில் மதிமுக ஒன்றியச் செயலாளர் காளிங்கன், மகஇக வைச் சார்ந்த குணாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயணக்குழுவில் கலந்து கொண்ட தோழர் களிடம் பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் உரையாற்றினார்.

மதியம் 1 மணிக்கு வாணியம்பாடி வாரச் சந்தை திடலில் பரப்புரை நடைபெற்றது. தமிழ்தேச மக்கள் கட்சியைச் சார்ந்த செவ்வேள் தலைமை வகித்தார். வாணியம்பாடி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் புருஷோத்தமன் வரவேற்புரையாற்றினார். சமூக சமத்துவப் படையைச் சார்ந்த தோழர் கஜேந்திரன், தமிழக வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் தோழர் புலவர். சகாதேவன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் மதனகவி, ஒடுக்கப் பட்டோர் விடுதலை இயக்கத் தோழர் பிரதாபன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நா.வேலு, ஹோசிமின் ஆகியோர் பயணத்தை வாழ்த்திப் பேசினர். கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் பயணத்தின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார்.

மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் சீனி. பழனி நன்றி கூறினார். தோழர் மதனகவி இல்லத்தில் மதியம் அசைவ உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை 6 மணிக்கு நெமிலி பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் உரையாற்றினார். நெமிலி பகுதி திராவிடர் விடுதலைக் கழக பொறுப்பாளர் திலீபன் நன்றி கூறினார்.

மாலை 8 மணிக்கு காஞ்சிபுரம் பெரியார் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார்.

மாலை 8.30 மணிக்கு காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. அய்யம் பேட்டை தோழர் ரவிபாரதி உரையாற்றினார். பரப்புரைச் செயலாளர் பால்பிரபாகரன் சிறப்புரை யாற்றினார். காஞ்சி மாவட்ட அமைப்பாளர் செங்குட்டுவன் நன்றி கூறினார். உணவு மற்றும் தங்கும் ஏற்பாடுகளை காஞ்சி மாவட்ட கழகத் தோழர்கள் செய்திருந்தனர்.

**11.08.2013**

காலை 11 மணிக்கு ஸ்ரீபெரும்புதூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. டேவிட் பெரியார் பாடல் பாடினார். முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.

நண்பகல் 12 மணிக்கு பூந்தமல்லி குமணன் சாவடியில் பரப்புரை நடைபெற்றது. முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார்.

மதிய உணவு ஏற்பாடு காஞ்சிபுரம் மாவட்ட பொருளாளர் மாங்காடு சேகர் இல்லத்தில் செய்யப்பட்டிருந்தது.

மாலை 6 மணிக்கு சென்னை பாலவாக்கத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தர்மபுரி இளவரசன் பெயரில் நினைவு மேடை அமைக்கப் பட்டிருந்தது. மாவட்ட துணைச் செயலாளர் வேலு தலைமை வகித்தார். சென்னை மாவட்டத் தலைவர் ஜான்சன் வரவேற்புரையாற்றினார்.

உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் துரை.அருண், திருமூர்த்தி ஆகியோர் பயணத்தை வாழ்த்திப் பேசினர்.

சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர் உரையாற்றினார்.

உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ரஜினிகாந்த பேசும் போது, சமூக நீதிக் காவலர் என்று பட்டம் சூட்டிக் கொண்ட மருத்துவர் இராமதாஸ் இன்று மனுநீதிக் காவலராகச் செயல்படுகிறார் என்று சாடினார்.

தர்மபுரி இளவரசன் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, திவ்யாவுடன் தொடர்பு கொண்டு பேசி, இந்த பிரச்சினையில் தனக்கு உதவும்படி கோரியதையும், தலைவர் அவர்களும் தான் உதவி செய்வதாகக் கூறி இருந்த நிலையில் எதிர்பாராத வகையில் இளவரசன் மரணம் நிகழ்ந்து விட்டது என்றும் கூறினார்.

கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசும் போது, “மனிதன் சமத்துவமாக வாழ்வதுதான் சுயமரியாதை என்றும், அந்த சமத்துவத்திற்கு ஜாதி, மதம், ஆகியவை தடையாக உள்ளது என்றும், சுயமரியாதையும் சமத்துவமும் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய காலகட்டம் இது என்று குறிப்பிட்டார்.

பார்ப்பனர்கள் நம்மில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். அவர்களின் மொழி வேறு, உணவுமுறை வேறு, பழக்க வழக்கம் வேறு. நம்மவனை உன் மாநிலம் எது? மொழி எது என்று கேட்டால், என் மாநிலம் தமிழ்நாடு, என் மொழி தமிழ் என்பான். அது போலவே மற்ற மாநிலத்த வனும் சொல்லுவான். ஆனால் பார்ப்பானைக்

(7 ஆம் பக்கம்)



# வினாக்கள்... விடைகள்...

**வினா :** டெல்லி ராஜ்காட்டில் காந்தி சமாதிக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு.

**– செய்தி.**

**விடை :** ஆட்சியாளர்கள் பயப்பட வேண்டாம்; சமாதியை உடைத்துக் கொண்டு காந்தி நிச்சயம் வெளியே வரமாட்டார்.

**வினா :** ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி, பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்தை அவரது வீட்டில் சந்தித்து தனது கட்சியை பா.ஜ.க. வுடன் இணைத்தார்.

**– செய்தி**

**விடை :** ஒரு கட்சியின் இணைப்பையே வீட்டு வரவேற்பறையில் நிகழ்த்தும் உலகச் சாதனையை சுப்ரமணியசாமியால் மட்டுமே செய்ய முடியும்!

**வினா :** தெலுங்கானா பிரிவினையை எதிர்த்து ஆந்திராவில் முழு அடைப்பு நடந்த நாளிலும் திருப்பதியில் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது.

**– செய்தி**

**விடை :** அப்போ, ஏழுமலையான் முழு அடைப்பில் பங்கேற்கவில்லையா? அப்படியானால் தெலுங்கானா பிரிவினையை ஏழுமலையானும் வரவேற்கிறானா?

**வினா :** மாநில கட்சிகளுக்கு பிரகாசமான எதிர் காலம் இருப்பதமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் பரதன் கூறினார்.

**– செய்தி**

**விடை :** கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் மாநில உரிமைகளை வழங்கலாமே, தோழர்!

**வினா :** காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பொறுப்பு உண்டு. அது என்னவென்றால், தேசிய நீரோட்டத்திலிருந்து தமிழகம் விலகிச் செல்லக்கூடாது. தேசிய நீரோட்டத்தையொட்டியே தமிழகம் இருக்க வேண்டும்.

**– ப. சிதம்பரம் பேச்சு**

**விடை :** முதலில் காவிரி நீரோட்டத்துக்கு ஏற்பாடு செய்யுங்க; அப்புறம் தேசிய நீரோட்டம் பற்றி யோசிக்கலாம்!

**வினா :** பாகிஸ்தான் ராணுவத்துக்கு தகுந்த பதிலடி கொடுப்போம்.

**– அமைச்சர் நாராயணசாமி**

**விடை :** அடுத்த, 15 நாட்களுக்குள்ளாகவா சார்?

**வினா :** அலிபிரி நடைபாதை வழியாக திருப்பதிக்கு பாதயாத்திரையாக பக்தர்கள் வந்தபோது நடைபாதையில் 2 சிறுத்தைப் புலிகள் நடந்து சென்றதைப்பார்த்து, பக்தர்கள் அலறி ஓட்டம் பிடித்தனர். **– செய்தி**

**விடை :** பக்தர்கள் 'பாத யாத்திரை' போகலாம். புலிகள் 'பாத யாத்திரை' போகக் கூடாதோ? இது எந்த ஊர் நியாயங்க?

**வினா :** 'திராவிட' என்பது போன்ற இனத்தின் அடிப்படையில் பெயர் வைத்துள்ள கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் தடை விதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு.

**– செய்தி**

**விடை :** தேர்தல் ஆணையத்தின் பெயரில் இணைந்துள்ள 'இந்திய' என்ற இனப் பெயரையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள்!

**வினா :** களிமண்ணால் செய்யப்பட்டதும், சுடப் படாததும் எவ்வித ரசாயன கலவையற்றதுமான வினாயகர் சிலைகளை மட்டுமே வழிபாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும்.

**– தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவு**

**விடை :** உண்மையாகவே சொல்கிறோம். இதுதான் மக்களுக்கான சரியான ஆகம விதி! இதே போல் வேத மந்திரங்கள் ஓதப்படாமலும், 'பிராமணர்கள்' மட்டுமே 'விக்கிரத்தை' தொட்டு பூஜை செய்ய முடியாததுமான ஆகமவிதிகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியமே அறிவித்துவிட்டால், சமூக சுற்றுச் சூழலை மோசமான கேடுகளிலிருந்து காப்பாற்றி விடலாம்.

# சலூன் கடையில் முடிவெட்ட மறுப்பு: கழகத்தின் முயற்சியால் வெற்றி!

ஈரோடு வடக்கு மாவட்டம் சத்தி ஒன்றிய பகுதிக்குட்பட்ட புதுரோடு பகுதியை சார்ந்தவர் தோழர் பாலாஜி. இவர் நமது கழகத்தின் துணை அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட பொறுப்பாளராக உள்ளார். இவர் தனது ஊருக்கு அருகிலுள்ள புங்கம்பள்ளி பகுதியிலுள்ள சலூன் கடைக்கு முடிவெட்ட சென்றார். சலூன் கடைக்குச் சொந்தக்காரர், 'இந்த கடையில் உனக்கு (தாழ்த்தப்பட்டோருக்கு) முடிவெட்ட மாட்டேன். நீ வேறு கடைக்கு செல்' என்றார். அந்தப் பகுதியில் இருந்த மற்ற இரண்டு கடைக் காரர்களும் 'நாங்களும் வெட்ட மாட்டோம்' என்று மறுத்து விட்டனர். வீடு திரும்பிய தோழர் அந்தப் பகுதியை சார்ந்த மற்ற தோழர்களிடத்தில் இதை கூறினார். உடனே, அங்கு இருந்த தோழர்கள், புதுரோடு இராஜேந்திரன் தலைமையில் கடையினை முற்றுகையிட சென்றார்கள். அவர்கள் அங்கு செல்லும் முன்பாக இராசேந்திரன் அந்த பகுதி காவல் நிலைய ஆய்வாளரை கைபேசியில் அழைத்து, கடையில் நடந்த சம்பவத்தைக் கூறி நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நாங்கள் அந்தக் கடையை எங்களது கழகத்தின் சார்பாக முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதாக கூறினார். தோழர்கள் கடைக்குச் செல்லும் முன்பாக கடைக்கு வந்த துணை ஆய்வாளர் தலைமையிலான போலீசார், கடையின் உரிமையாளரை எச்சரித்ததுடன் இல்லாமல், தோழருக்கு அங்கு முடிவெட்டும் வரை இருந்துவிட்டு சென்றனர் மற்ற இரண்டு கடைகளிலும் கழகத் தோழர்கள் முடிவெட்டிக் கொண்டனர். கடையின் உரிமையாளர் கழகத் தோழர்களிடம் இனிமேல் நீங்கள் எப்பொழுது வந்தாலும் நான் உங்களுக்கு முடிவெட்டுகிறேன் என்று உறுதி அளித்த பின்பு, தோழர்கள் அங்கிருந்து சென்றனர். இந்நிகழ்விற்கு அப் பகுதியைச் சார்ந்த பொது மக்கள் தோழர்களுக்கும், கழகத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.


## திராவிடர் விடுதலை கழகத்தின் புதிய வெளியீடுகள்!

**பார்ப்பன-இந்திய தேசிய பன்னாட்டுக் கொள்ளை - - கொளத்தூர் மணி**

*பக்.32; விலை : ரூ.10*

**இந்தியா விலை போகிறது - விடுதலை இராசேந்திரன்**

*பக்: 32; விலை : ரூ.10*

**தொடர்புக்கு :**
**தலைமைக் கழகம் - 044-24980745**








(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டால், அவன் தாய்மொழி சமஸ்கிருதம், கீதை, வேதங்கள் தான் அவன் இலக்கியம் என்பான். இன்றைக்கு மத்திய அரசில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு உள்ள பிரதி நிதித்துவம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இல்லை. பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு கொடுக்க பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி கவலையில்லை, பிற்படுத்தப்பட்டோர்களை நினைத்துதான் கவலை, அவர்கள் மத்திய அரசுப் பணிக்கு வந்தால் தங்களுக்குப் போட்டியாக இருப்பர் என்று பார்ப்பனர்கள் நினைக்கின்றனர் என்று கூறிய பொதுச்செயலாளர் மேலும் பேசுகையில்,

பா.ஜ.க.வாக இருந்தாலும், காங்கிரஸாக இருந்தாலும் இரண்டுமே மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் கொள்கையைத்தான் எடுக்கின்றனர். நாடாளுமன்ற செயலகத்தில் உள்ள 140 உயர்பதவிகளில் ஒருவர் கூட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை என்பதை மத்திய அமைச்சர் நாராயணசாமியே கூறியுள்ளதை நினைவு கூர்ந்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும் போது, "நமது இயக்கத்திற்கு இது போன்ற பயணங்கள் புதிதல்ல, ஏற்கனவே இது போன்ற பல பரப்புரைகளை நடத்தி உள்ளோம். இதற்கு முன்பு கூட தனியார் துறையில் இடஒதுக்கீடு கோரி சம்பூகன் சமூக நீதிப் பயணத்தை நடத்தினோம் என்று குறிப்பிட்ட கழகத் தலைவர், கடவுள் என்ற ஒன்று இருந்தால் அவருக்கும் பக்தர்களுக்கும் இடையில் தரகர்கள் ஏன்? என்று பெரியார் கூறியதை நினைவு கூர்ந்தார்.

பெரியார் இந்திய அரசியல் சட்டத்தை எரித்த போது, அதிலுள்ள பழக்க வழக்கங்கள் என்று குறிப்பிடப்படும் பிரிவை எரித்தார். இந்தப் பிரிவைக் கொண்டுதான் இன்றைக்கு வரை அரசுகள் நம்மை ஏமாற்றுகின்றன.

இதை பெரியார் 1929 இல் நடந்த ஆதி திராவிடர் சுயமரியாதை மாநாட்டிலேயே "இப்போது அரசியலில் பழக்க வழக்கங்கள் என்ற ஒரு புதிய பிரிவைக் கூறுகிறார்கள். இந்த வார்த்தை நமக்கு ஆபத்து" என்று பெரியார் அன்றே எச்சரித்ததை நினைவு கூர்ந்தார்.

இந்து மதத்தின் ஒடுக்குமுறைகள் தாங்காமல் ஏராளமானோர் மதம் மாறிய பிறகு தான், இந்து மதத்தில் சில சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டு கோவில் நுழைவுக்கு அனுமதி கொடுக்கப் பட்டதைக் கூறிய கழகத் தலைவர், அன்றைக்கு பார்ப்பன வீதியில் நடக்க முடியாத நிலையில் இருந்த பிற்படுத்தப்பட்டவர்கள் இன்று தன்னுடைய தெருவில் தாழ்த்தப்பட்டவனை நடக்கக் கூடாது என்கிறார்கள், இந்த நிலை மாற வேண்டும் என்று கூறினார். ஜாதிப் பஞ்சாயத்தில் ஈடுபடும் நபர்களுக்குச் சிறை தண்டனை விதிக்கும் ஒரு அவசர சட்டத்தை தமிழக அரசு கொண்டு வரவேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.

இறுதியாக இராயப்பேட்டை பகுதிச் செயலாளர் பிரகாஷ் நன்றி கூறினார். கூட்டத்தில் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் டேவிட் பெரியார், மாவட்டப் பொருளாளர் ஈழவேந்தன், மோகன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### உண்டியல் நிதி

ஒவ்வொரு இடத்திலும் பரப்புரை நடைபெறும் போதெல்லாம் வசூல் குழுவினரான நங்கவள்ளி கிருஷ்ணன், திருப்பூர் மூர்த்தி, பல்லடம் மணிகண்டன், செல்வக்குமார், திருப்பூர் சம்பூகன் ஆகியோர் ஒவ்வொரு கடைக்கும் சென்று துண்டறிக்கைகளை விநியோகித்து, பயணத்தின் நோக்கங்கள் குறித்து பரப்புரையில் ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல் உண்டியல் ஏந்தி வசூலிலும் ஈடுபடுகின்றனர்.

### வாகனம் ஓட்டிய தோழர்கள்

பரப்புரைப் பயணத்தில் 20 நாள்களும் வாகனத்தை ஓட்டிய தோழர்கள் காவலாண்டியூர் அவிநாசி, மேட்டூர் அணை தங்கமணி.

**செய்தி : ஈரோடு சிவக்குமார்**
**படங்கள்: கோகுல கண்ணன்**

DATE OF PUBLICATION 14.08.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பார்ப்பனிய பொருளாதாரக் கொள்கை

முதல் பக்கத் தொடர்ச்சி

நடவடிக்கை எடுக்கத் தவறிய மாவட்ட ஆட்சியாளர்கள்-மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களையும் இடைநீக்கம் செய்து, வழக்குப் பதிவு செய்வதோடு, துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆறுமுகம் சேர்வை வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பின் நகலை அனைத்து மாநிலத் தலைமைச் செய லாளர்களுக்கும், காவல்துறை தலைமை அதிகாரிகளுக்கும் உயர்நீதிமன்ற நீதித்துறை பதிவாளர் வழியாக அனைத்து நீதிபதி களுக்கும் உச்ச நீதிமன்றம் அனுப்பிவைத்து தீர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருக் கிறது. திராவிடர் விடுதலைக் கழகம் இத் தீர்ப்பின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்தில்- கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரைத் தண்டிக்கக் கோரி முதன்முதலாக ஒரு வழக்கையும் தொடர்ந்துள்ளது, இதை உயர்நீதிமன்ற மும் விசாரணைக்கு ஏற்றுள்ளது. உச்சநீதி மன்றத்தின் இத்தீர்ப்பைக் கண்டிப்பாகச் செயல்படுத்தி கடமை தவறும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

### பாராட்டு

பெரியார் சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயணத்தில் சூலை 24, 2013-ல் மயிலாடுதுறையில் தொடங்கி கழகம் தொடங்கிய நாளான ஆகஸ்டு 12, புதுச்சேரி வரை 20 நாட்களாக பல்வேறு இன்னல்களைப் புறந்தள்ளி மக்களைச் சந்தித்த சுயமரியாதை சமதர்மக் கொள்கைகளைப் பரப்பிட ஆர்வத்துடன் பங்காற்றிய தோழர்களின் அர்ப்பணிப்பை திராவிடர் விடுதலைக் கழகம் பெருமையோடு பதிவு செய்கிறது. பயணத்தின் வழியாக கிடைத்த கள அனுபவங் களையும் உணர்வுகளையும் செழுமைப்படுத்தி கொள்கைப் பயணத்தை மேலும் தீவிரமாக்கிட திராவிடர் விடுதலைக் கழகம் உறுதியேற்கிறது. பயணத்தில் பல்வேறு உதவிகளை, பங்களிப்பை வழங்கிய அனைத்துத் தோழமை அமைப்புகளுக்கும் திராவிடர் விடுதலைக் கழகம் நன்றி தெரிவிக்கின்றது.

இருபது மாவட்டங்களில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் 20 நாட்கள் நடத்திய இந்தப் பரப்புரைகளைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக மாவட்டங் களை மையமாகக்கொண்டு கிராமம் கிராமமாக மக்களைச் சந்திக்கும் பரப்புரைப் பயணங்களை நடத்திட திராவிடர் விடுதலைக் கழகம் முடிவு செய்துள்ளது. குறிப்பாக பார்ப்பனியத்தின் ஜாதி, தீண்டாமையை எதிர்த்தும் அதற்குக் கருத்தியலை வழங்கி வரும் பார்ப்பனியம் மற்றும் பார்ப்பன மேலாதிக்கத்தையும் ஜாதிச் சங்கங்களின் ஜாதிவெறிப்போக்கையும் ஒடுக்கப்பட்ட மக்களைச் சுரண்டிவரும் உலகமயப் பன்னாட்டு சுரண்டல் கொள்ளைகளையும் விளக்கி மக்களை அணி திரட்ட திராவிடர் விடுதலைக் கழகம் திட்டமிட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் செப்டம்பர் 11-ஆம் தேதி தொடங்கி செப்டம்பர் 17-வரையில் பயணம் தொடங்குகிறது. இதைத் தொடர்ந்து தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் இதேபோன்று பரப்புரை இயக்கம் நடத்துவதென்று தீர்மானித்துள்ளது. சமுதாய விடுதலைக்காக திராவிடர் விடுதலைக் கழகம் மேற்கொள்ளும் இந்த செயல்திட்டங்களுக்கு ஒத்த கருத்துள்ள அமைப்புகள், தோழர்கள் ஆதரவு வழங்கிட முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறது.

### பன்னாட்டுச் சுரண்டலுக்கு எதிராக....

1932-ஆம் ஆண்டில் பெரியாரால் முன்வைத்த சுயமரியாதை சமதர்ம வேலைத் திட்டம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஜாதித் தீண்டாமை ஒடுக்குமுறைகளோடு பொருளாதாரத்திலும் அழுத்திக் கொண்டிருக்கும் முதலாளித்துவத்தையும் எதிர்க்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. ஜாதி எதிர்ப்போடு பொருளாதாரத் திட்டத்தையும் இணைத்து பெரியார் தந்த திட்டட்தை இன்றைய சமூகப்பொருளாதாரச் சூழலில் செயல்படுத்துவது சரியான சமூக மாற்றத்திற்கான கொள்கையாகும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது.

1990-க்குப் பிறகு மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் நுழை வதற்கான கதவு மண்டல் பரிந்துரை வழியாகத் திறந்துவிடப்பட்டவுடன் - ஆட்சியதிகாரத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த பார்ப்பன உயர்சாதி அதிகார வர்க்கம், அரசுப்பிடிகளிலிருந்து பொதுத்துறை நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களைப் படிப்படியாகப் பறிப்பதற்கு உலகமயமாதல் கொள்கையை ஆட்சியாளர்களுடன் கொண்டுவந்தது. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பார்ப்பன உயர்ஜாதி அதிகாரவர்க்கம், பெரும் தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு நிறவனங்களின் ஆதரவோடும் ஆளுங்கட்சிகளின் ஆதரவோடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான திட்டங்களைப் பொருளாதாரக் கொள்கையாகச் செயல்படுத்திவருகிறது. இந்தப் பொருளாதாரக் கொள்கைகளால் சிறு தொழில்கள், விவசாயம், அழிவதோடு இயற்கை வளங்களைச் சுரண்டுதலும் அதிகரித்து வருவது ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான சமூக அழுத்தங்களை மேலும் கூடுதலாக்கிவிடுகின்றன. இந்த உலகமயப் பொருளாதாரக் கொள்கை பார்ப்பனியப் பொருளாதாரக் கொள்கையாகவே திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது. இந்தப் பார்ப்பனியப் பொருளாதாரக் கொள்கைச் சுரண்டலுக்கு எதிராக மக்களை அணி திரட்டவும் அவர்களிடம் விழிப்புணர்வை உருவாக்கிப் போராடவும் திராவிடர் விடுதலைக் கழகம் உறுதியேற்கிறது. தீண்டாமை, ஜாதிக்கு எதிராக போராடும் இயக்கங்கள் இந்தப் பார்ப்பனியப் பொருளாதாரக் கொள்கைளால் ஒடுக்கப்பட்ட மக்கள் மேலும் நசுக்கப்படுவதைக் கவனத்தில்கொண்டு இந்த ஆபத்தான பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக அணிதிரள்வோம் என்று திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவி அழைக்கின்றது.

**– நிறைவு விழாவில் கொளத்தூர் மணி முன்மொழிந்த தீர்மானம்**

# பயணத்திற்கு நிதி வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 1. | ஏ.செல்வராஜ், கண்ணாமூச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவுகடன்சங்க நிர்வாகி | ரூ. 1000/- |
| 2. | பெருமாள், காந்திநகர், செட்டியூர் | ரூ. 100/- |
| 3. | மு.செல்வராஜ், கண்ணாமூச்சி தொ.வே.கூ.க. சங்கத் தலைவர் | ரூ. 1000/- |
| 4. | கண்ணாமூச்சி தொ.வே.கூ.வ. பணியாளர்கள் | ரூ. 500/- |
| 5. | ராசு, வியாபாரி கண்ணாமூச்சி | - ரூ. 5000/- |
| 6. | ஆறுமுகம், காண்ட்ராக்டர் | -ரூ. 5000/- |
| 7. | வரதராஜ், எல்.ஐ.சி, செட்டியூர் | -ரூ. 1000/- |
| 8. | செங்கோடன், செட்டியூர் | -ரூ. 500/- |
| 9. | முருகன், செட்டியூர் | -ரூ. 500/- |
| 10. | சின்ராசு, VAO (Rtd) செட்டியூர் | -ரூ. 100/- |
| 11. | சென்னகேசவன், செட்டியூர் | -ரூ. 100/- |
| 12. | ரமேஷ், கவுன்சிலர், சின்ன மேட்டூர் | -ரூ. 500/- |
| 13. | ரகுபதி, செட்டியூர் | -ரூ. 1000/- |
| 14. | சேவூர் திவிககிளை | -ரூ. 500/- |
| 15. | குருமந்தூர்மேடு திவிககிளை | -ரூ. 2000/- |
| 16. | கோட்டுபுள்ளாம்பாளையம் திவிககிளை | -ரூ. 1000/- |
| 17. | கலையரசன், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர், புதுடெல்லி | -ரூ. 1000/- |
| 18. | ரஞ்சிதா, ஆசிரியை | -ரூ. 1000/- |
| 19. | தினேஷ், இளம்பிள்ளை பள்ளிமாணவர் | -ரூ. 500/- |
| 20. | ரவி, பொறியாளர், சின்னசேலம் | -ரூ. 500/- |
| 21. | ஓட்டுநர் சீனிவாசன், சின்னசேலம் | -ரூ. 500/- |
| 22. | ஆ.ஊராஜா, கிருஷ்ணகிரி | -ரூ. 500/- |
| 23. | மதிவாணன், கிருஷ்ணகிரி | -ரூ. 500/- |
| 24. | பாலகாந்தி, காவேரிப்பட்டிணம் | -ரூ. 100/- |
| 25. | தமிழக வாழ்வுரிமைக்கூட்டமைப்பு | -ரூ. 1000/- |
| 26. | வீரமணி, ஊத்தங்கரை | -ரூ. 1000/- |
| 27. | மலை மதியழகன், கன்னியப்பன், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) | -ரூ. 200/- |
| 28. | வெங்கடேசன், சென்னநல்லூர் | -ரூ. 500/- |
| 29. | இராம. இளங்கோவன், ஈரோடு மண்டலச் செயலாளர் | ரூ. 5000/- |

### நன்கொடை

ஊடகத் துறையில் பணி யாற்றும் கழக ஆதரவாளர் பெரியார் முழக்கம் ஏட்டுக்கு ரூ.5 ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ப.குமாரபாளையம் மு.கேப்டன் அண்ணாதுரை தாயார் மு.லட்சுமியம்மாள் (28.6.2013) அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக கழக ஏட்டுக்கு ரூ.200, குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

நன்றியுடன் பெற்றுக் கொண் டோம்.


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**

**ஆண்டுக்கட்டணம் ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th August 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆகஸ்டு 22, 2013 | புரட்சி 12 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00


## பயணத் தொடக்க விழாவில் கொளத்தூர் மணி உரை

# இடஒதுக்கீட்டின் நோக்கம் ஜாதி ஒழிப்பே!

*மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜூலை 24 அன்று சுயமரியாதை சமதர்ம பரப்புரைப் பயணத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை :*




இப்படி ஒரு பரப்புரை பயணத்தை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்துவது இது முதல் முறை அல்ல, தொடர்ச்சியான பல பரப்புரை பயணங்களை நாம் நடத்திக்கொண்டு தான் இருக்கிறோம். இதுவரை நாம் நடத்தியிருக்கிற, நடத்திய பயணங்கள் அனைத்தும் ஜாதி, தீண்டாமைக்கு எதிராக என்ற மையப்புள்ளியில் இருந்து தான் இயங்கி கொண்டு இருந்தது. அதையொட்டிதான் பல்வேறு கருத்துக்களை மக்கள் முன்னால் எடுத்துச் சென்று கொண்டு இருந்தோம். மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தின் வழியாக இப்படி பல்வேறு தளங்களில் விளக்கிக் கொண்டிருக்கிறோம். பார்ப்பனியம் நேரடியாய் இல்லை என்றாலும், அதுதான் கருத்தியலை வழங்கி நியாயப்படுத்தி கொண்டிருக்கிற அமைப்பு என்பதால் அது பார்ப்பனீயமாக இருந்தாலும், பார்ப்பனீயத்தின் அரசியல் வடிவமாக இருக்கிற இந்தியா என்கிற அமைப்பாக இருந்தாலும், இந்த பார்ப்பனீயத்தையும் இந்தியாவையும் இப்போது இயக்கி கொண்டிருக்கிற பன்னாட்டு நிறுவனங்கள், பன்னாட்டு கொள்ளை அதை இந்தியாவில் இருந்து நடத்தி கொண்டிருக்கிற பார்ப்பனர்கள், இவை எல்லாவற்றையும் நாம் சேர்த்து மக்களிடம் எடுத்து செல்ல வேண்டியதும், அம்பலப்படுத்த வேண்டியதுமான கடமை நமக்கு இருக்கிறது, அந்த அடிப்படையில் தான் இந்த பயணம். இது குறித்த சில செய்திகளை சொல்ல விரும்புகிறேன். அன்பார்ந்த தோழர்களே மதம், என்ன பங்கை ஆற்றிக்கொண்டிருக்கிறது. நாம் அறியாதது அல்ல புரட்சியாளர் அம்பேத்கர் ஒரு முறை அவருடைய ஜாதி ஒழிப்பு சொற்பொழிவில், லாகூரில் ஆற்றிய சொற்பொழிவில் ஒன்றை சொல்வார்கள் ரோமாபுரியில் மன்னராட்சியை வீழ்த்தி ரோமானியர்கள் மக்களாட்சியை கண்டார்கள். இந்த மக்கள் ஆட்சியில் எல்லா இடங்களிலும் உழைக்கும் மக்களுக்கு சமபங்கு வேண்டும் என்று சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பில் கான்சலாக இருந்தாலும், உழைக்கும் மக்களில் ஒருவர், பழைய ஆளும் வர்க்கத்தில் ஒருவர் என்பதாக பிலிப்பைன்களும், பெட்ரிஷியன்களும் பிரித்துக் கொண்டார்கள். அங்கிருக்கின்ற நாடாளு மன்றம் என்றாலும் சம எண்ணிக்கையில் என்று சொன்னார்கள். மதத் தலைமை பொறுப்பு குருவான பொறுப்பு என்றாலும் சமம் தான் என்று சொன்னார்கள். ஆனால் ஆட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதோடு முடிந்து விடவில்லை, அவர்கள் மனதில் ஆழ ஊன்றியிருந்த ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அங்கே இருக்கின்ற டெல்பி என்ற ஒரு மலையில் வீற்றிருக்கின்ற தெய்வத்திடம் போய் கருத்துக் கேட்டு அது ஒப்புதல் கொடுத்தால் தான் அந்த ஆட்சித் தலைவர் பொறுப்பை அவர் வகிக்க முடியும் என்று வைத்திருந்தார்கள். யார் ஒருவன் புரட்சிகர கருத்தை வைத்திருக்கிறானோ, யார் ஒருவன் உழைக்கும் மக்களுக்கான ஒரு உயர்வை பேணுவதற்கான கருத்தை வைத்திருக் கிறானோ அவனுக்கு மட்டும் தெய்வம் குறி சொல்லாது. என்ன போராடிப் பெற்றிருந்தாலும், எவ்வளவு விடுதலை உணர்வு அவர்களிடம் இருந்தாலும், கொள்கை கொந்தளிப்பு இருந்தாலும் கூட மதம் என்ற ஒன்றை வைத்து, மத நம்பிக்கை என்ற புள்ளியில் அவர்களை மடக்கிவிட முடியும் என்பதை வரலாறு நமக்கு காட்டியிருக்கிறது என்று புரட்சியாளர் அம்பேத்கர் அந்த சொற்பொழிவில் சொன்னார்.

இன்றும் அதைத்தான் செய்து கொண்டிருக் கிறார்கள். அதைதான் நம்பி தொலைத்து நம் சமுதாயம் நாசமாக போய் கொண்டிருக்கிறது என்பதால் தான் இந்த பார்ப்பனர்களை பற்றி பார்ப்பனர்கள் தங்கள் நிலையில் இறுக்கிப் பிடித்து கொள்வதற்காக நம்மீது இன்னும் திணித்து கொண்டிருக்கிற சிந்தனைகளை பற்றி நாம் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை பற்றி பேசுவது என்றாலும் கூட ஜாதிய சமுதாயத்தில் அவன் அமைதியாக உட்கார்ந்து கொண்டு எங்கோ இருந்து கொண்டு யாரையோ இயக்கி - நாங்கள் ஒன்றும் செய்ய வில்லை, அவர்கள் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஜாதியை தானாக இயங்கும் ஒரு அமைப்பாக மாற்றியது, (ஆட்டோ பங்சனிங் யூனிட்) என்று சொல்வார்கள் தானாக இயங்கும், எப்போதாவது தொய்வு ஏற்பட்டால் அவன் ஒரு சுற்று சுற்றிவிட்டு அமைதியாக போய் அமர்ந்து கொள்வான். அடுத்தவனை எட்டி உதைக்கின்ற காலைப் பற்றிதான் பேசுவோம், குத்துகின்ற கையை பற்றி பேசுவோம், ஆணையிடுகின்ற மூளையை பற்றி நாம் கவலைபடாதவர்களாக இருந்திருக்கிறோம், என்னை உதைத்துவிட்டான், குத்திவிட்டான், என்று சொல்லுவோமே தவிர அதற்காக கையை வெட்டவேண்டும், காலை வெட்ட வேண்டும் என்று சொல்லுவோமே தவிர கட்டளை வழங்கிய மூளையை நாம் மறந்து விடுகிறோம், அல்லது அவர்கள் மறைத்து விடுகிறார்கள். இப்போதும் ஜாதி என்ற பெயரால் பிற்படுத்தப்பட்ட தலைவர்கள் அண்மை காலத்தில் மிக அதிகமாக -


(2ஆம் பக்கம்)


## சென்னையில் செப். 1 இல் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் “நாத்திகர் விழா”

*“சென்னையில் சித்தர்கள், சாமியார்கள் குறி சொல்லும் ஆசாமிகள் யார் யார் என்று காவல்துறை ரகசியமாக கண்காணித்து வருகிறது. இதுபோன்ற நபர்களிடம் பொது மக்கள் ஏமாற வேண்டாம் என்று காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.”*

*– இப்படி ஒரு செய்தி ‘தினத்தந்தி’ ஏட்டில் (ஆக.19) வெளி வந்துள்ளது.*

*சாமியார்கள் – குறி சொல்வோர் – மந்திரவாதிகள் – சோதிடம் பார்ப்போர் என்பவர்களில் ‘போலி’ என்று எவரும் கிடையாது. அனைவருமே மக்களை ஏமாற்றுகிறவர்கள்தான். மக்கள் இந்த மூடத்தனத்தை நம்பாமல் தடுக்க அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த பகுத்தறிவுக் கருத்துகளை, அறிவியல் சிந்தனைகளை கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அப்படி அறிவியல் பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடம் பரப்புவது பெரியார் இயக்கங்கள் மட்டும்தான்.*

*அரசியல் சட்டம் விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் நிலையிலும் இந்தக் கருத்துகளைப் பரப்புவதற்கு கடும் எதிர்நீச்சல் போட வேண்டியிருக்கிறது.*

*காவல்துறை அனுமதி மறுக்கிறது. சாமியார்களிடம், குறி சொல்வோரிடம், ஏமாற வேண்டாம் என்று கூறும் காவல்துறை அதே கருத்தை அறிவியல் பார்வையில் மக்களிடம் பகுத்தறிவைத் தூண்டிவிட்டு சிந்திக்கச் செய்யும் பரப்புரைகளுக்கு தடை போடுவது நியாயம் தானா? இந்த சூழ்நிலையில் தான் –*

*சென்னையில் செப்டம்பர் முதல் தேதி திராவிடர் விடுதலைக் கழகம், நாத்திகர் விழாவை நடத்துகிறது. பிற்பகல் 3 மணிக்கு மயிலாப்பூர் அம்பேத்கர் பாலத்திலிருந்து அறிவியல் கருத்துகளை விளக்கும் நிகழ்ச்சிகளோடு பேரணி.*

*இராயப்பேட்டை வி.எம்.சாலையில் பகுத்தறிவு அறிவியல் கருத்துகளை விளக்கும் வீதி நாடகங்கள்; இசை நிகழ்ச்சி; பறை முழக்கம்!*

*தீ மிதிப்பது – பக்தியால் அல்ல என்பதை நிரூபிக்கும் தீமிதி நிகழ்ச்சியும் உண்டு.*

*அறிவியல் – பகுத்தறிவு சொற்பொழிவுகளும் உண்டு. அறிவியல் விளக்கம் பெற – பகுத்தறிவு சிந்தனையை கூர் தீட்டிக் கொள்ள அனைவரையும் அழைக்கிறது.*

**– சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம்**

# சமூக நீதித் துறையிலேயே சமூக நீதி இல்லை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இழந்ததை எல்லாவற்றையும் பிடிக்க வேண்டும் என்று கருதியோ என்ன நாசமாய் போன கருத்தோ, ஜாதியத்தை வளர்த்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் எங்களுடைய முழக்கங்களில் ஒன்றாக கூட வைத்திருக்கிறோம். இடஒதுக்கீட்டு உரிமையை ஜாதியை நிலைநிறுத்த பயன்படுத்தும் சுயநல சக்திகளை வீழ்த்தி ஜாதி ஒழிப்பை நோக்கி முன்னெடுக்க வேண்டும் என்று நாங்கள் வைத்திருக்கிறோம். எங்கள் துண்டறிக்கையில் சொல்லுகின்ற செய்தியில் அது ஒன்று, இடஒதுக்கீடு எதற்காக அதை பயன்படுத்து என்று சொல்லிக் கொண்டு ஜாதியை சேர்ப்பது, அதை சேர்த்துக் கொண்டு இவன் தலைவனாவது, சம்பாதிப்பது என்ற போக்கைத் தான் நாம் பார்க்கிறோம். அப்படி இருப்பவர்கள் கூட ஏதாவது தங்கள் ஜாதிய சமுதாயத்திற்கு செய்திருக்கிறார்களா என்று நீங்கள் சற்று யோசித்து பார்க்கவேண்டும். பிற்படுத்தப்பட்டோருக்கான தலைவர்களாக தங்களை காட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற கருத்து எல்லாம், இந்த மக்களுக்கு என்ன உரிமையை வாங்கி தந்திருக்கிறது, அவர்கள் உழைப்பு என்ன செய்திருக்கிறது என்பதை மட்டும் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம்.

27 விழுக்காடு இடஒதுக்கீட்டை மத்திய அரசின் கல்வி நிலையங்களில் ஒன்பது, ஒன்பதாகத்தான் நாங்கள் நடைமுறைபடுத்த போகிறோம் என்று வீரப்பமொய்லி ஒரு அறிக்கை கொடுத்தார். வேலை வாய்ப்பில் 27 விழுக்காடு எப்போது வந்தது. 1990ல் நடைமுறைக்கு வந்துவிட்டது. தீர்ப்பையெல்லாம் கடந்து 93ல் நடைமுறைபடுத்தப்பட்டுவிட்டது. ஆனால் தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு என்ற சட்ட திருத்தம் 1951ல் தமிழ்நாட்டில் பெரியார் முன்னெடுத்து நடத்திய போராட் டம் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீட்டை உறுதி செய்துவிட்டது. ஆனால், 2006ம் ஆண்டில் தான் மத்திய அரசின் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு என்பதை சட்டமாகக் கொண்டுவந்தார்கள். அப்படி பெற்றதும் கூட 27 விழுக்காடுதான். மண்டல் குழு அறிக்கையின்படியே பிற்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 அப்போது அவர் அறிக்கை எழுதும் போது - இப்போது நிறைய பேரை பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலில் சேர்த்துவிட்டார்கள், அவர்கள் எழுதிய போது 52 விழுக்காடு; 52 விழுக்காட்டு மக்களுக்கு 27 விழுக்காடு தான் கொடுத்தார்கள் 55 ஆண்டு காலம் கழித்து அதில்கூட ஆலோசனைக்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக இருந்த வீரப்பமொய்லி 27ஐ ஒரே நேரத்தில் கொடுக்க வேண்டாம் ஒன்பது, ஒன்பதாக கொடுக்கலாம் மூன்று ஆண்டுக்கு என்று சொன்னார். அதை அம்பலப்படுத்தியதும் மக்களிடம் எடுத்துச் சொன்னதும் அந்த ஆணைகளை எரித்து எதிர்ப்பை பதிவு செய்ததும் நாங்கள் தான். பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமை பாதிக்கப்படுகிறபோது போராடிய நாங்கள் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பிற்படுத்தப்பட்டோர் நடத்துகிற தாக்குதல்களுக்கு எதிராகவும் பேசுகிறோம். இப்போது பிற்படுத்தப்பட்ட தலைவர்கள் தங்களை மிக உயர்வாக - சத்திரியர், வைசியர் என்றெல்லாம் பேசிக்கொண்டு இருக்கிற இந்த வேளையில் நாம் சிலவற்றை சொல்லவேண்டும். இதற்கு முன்பேசிய தோழர்கள் கூட சொன்னார்கள்.

இதே நாகப்பட்டிணத்தில் தான் தந்தை பெரியார் அவர்கள் 1931ம் ஆண்டு வந்தபோது பேசிய பேச்சில் இறுதியாகச் சொன்னார். பறையன் பட்டம் போகாமல் உங்கள் சூத்திரன் பட்டம் போய்விடும் என்று கருதுவீர்களேயானால் நீங்கள் வடிகட்டிய முட்டாள்கள் ஆவீர்கள் என்று சொன்னார்கள். 31இல் சொன்னது நம் மூளையில் இன்னும் ஏறாமலே இருக்கிறது. ஆனால் இப்போது நாம் பார்க்கிறோம். சென்னையில் ஐஐடி இருக்கிறது மத்திய அரசின் கல்வி நிறுவனம் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு எப்போதோ வந்துவிட்டது. மத்திய அரசில் 2006 தான் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு வந்திருக்கிறது. ஆனால் இப்போது பிற்படுத்தப்பட்டோர் நிலை என்ன என்றால் 462 பேரில் 7 பேர்தான் பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அதுவும், உதவி பேராசிரியர்களாகதான் இருக்கிறார்கள். பேராசிரியராக யாரும் கிடையாது, அசோசியேட் புரபசராக யாரும் கிடையாது, துணை பேராசிரியராக, உதவி பேராசிரியர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆனால், பிற்படுத்தப்பட்டோர் 7 என்றால் தாழ்த்தப்பட்டோர் 10 பேர் இருக்கிறார்கள், பழங்குடி மக்கள் ஒருவர், பெரிய ஜாதிகாரன் ஏழுபேர். இதுதான் இவனுடைய பெரிய ஜாதி இன்னொன்றை யும் சொல்ல வேண்டும். நான் எங்களது பயணத்தில் கூட வண்டியில்கூட போட்டு வைத்திருக்கிறோம். தாழ்த்தப்பட்டோர் எவ்வளவு பேர் மத்திய அரசினுடைய பணியில் இருக்கிறார்கள் பிற்படுத்தப்பட்டோர் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று, தாழ்த்தப்பட்டோரை பொறுத்தவரை மத்திய அரசின் பணிகளில் அவர்கள் இருப்பது என்பது 'ஏ' பிரிவில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றால், 11.5 சதவீதம் பேர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் 4.8 சதவீதம் பேர் ஏறக்குறைய 5 சதவீதம் பேர் இருக்கிறார்கள். ஆனால் பிற்படுத்தப்பட்டவர்கள் 6.9 தான் இருக்கிறார்கள் பழங்குடிகளும் தாழ்த்தப்பட்டவர்களும் சேர்த்து 16 விழுக்காடு இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் 7 விழுக்காட்டிற்கு எட்டிபிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதே போல 'பி' பிரிவுகளில் தாழ்த்தப்பட்டோரும், பழங்குடிகளும் சேர்த்து 20.9 விழுக்காடு இடங்களில் இருக்கிறார்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் 7 விழுக்காடு இடங்களில்தான் இருக்கிறார்கள். 'சி' பிரிவுகளில் 24.1 விழுக்காடு பழங்குடி மக்களும், தாழ்த்தப்பட்டவர்களும் சேர்ந்து இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் 15 விழுக்காடு தான் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் சமுதாயத்தில் பாதி 52 ஆனால் இவர் எண்ணிக்கை தாழ்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் பாதி தான் இருக்கிறது. ஆக, இந்த ஜாதி சங்க தலைவர் எல்லாம் வேலை செய்ய வேண்டிய இடம் எது, அங்கே போய் கேளு - இங்கே எங்கேயாவது ஜாதி சங்கத் தலைவர்கள் வருவார்களேயானால், எங்களை மத்திய அரசில் இவ்வளவு கேவலமாய் விட்டு விட்டு அதை பற்றி பேசாமல் இங்கே ஏன் வந்து பிரச்சனை செய்கிறாய் என்று நாம் கேட்க வேண்டும்.

ஜாதி சங்கத் தலைவர்கள் ஏதோ ஜாதி பூரா அவருக்கு பின்னால் இருப்பதாக பேசிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஜாதி சங்கத் தலைவரும் பேசுகிறபோது எங்களுக்குப் பின்னால் எங்கள் ஜாதி எதிர்க்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாது அவர்கள் ஜாதிக்காரர்கள் எல்லா கட்சியிலும் தான் இருக்கிறார்கள், ஏதோ இவர்கள் அமைப்பில் மட்டும் இருப்பதாக கருதிக் கொண்டு பேசுகிறார்கள். அந்த அந்த ஜாதிகளில் முற்போக்கு சிந்தனை உள்ளவர்கள் ஜாதி எதிர்ப்பு சிந்தனை உள்ளவர்கள் இல்லையா? இருக்கிறார்கள் - அமைதியாக இருக்கிறார்கள். ஒரு கோர சம்பவம் நடைபெறுகிறது என்றால் ஒரு இனப்படுகொலை நடக்கிறது என்றாலும் சரி, ஒரு குற்றம் நடக்கிறது என்றாலும் சரி, அது குற்றவாளியினுடைய குற்ற எண்ணத்தில் மட்டும் அல்ல, நியாயவாதியினுடைய அமைதியிலும்தான் அது நடக்கிறது. குற்றம் செய்பவன் குற்றம் செய்கிற எண்ணத்தோடு துணிச்சலாக வருகிறான். தவறு என்ற சொன்ன ஒருவன் அமைதியாக இருக்கிறான், அதனால் தான் நடக்கிறது. ஆக குற்றவாளிக்கு என்ன அதில் பங்கு உண்டோ அதே பங்கு அமைதியாக இருக்கிற நியாயவாதிக்கும் உண்டு. எனவே இந்த வேளையில் நாங்கள் உங்களிடம் வைக்கிற வேண்டுகோள் உங்களுக்கு ஜாதியத்திற்கு எதிரான சிந்தனை இருக்குமேயானால் ஜாதிய நடவடிக்கைகளுக்கு எதிரான போக்கு உங்களுடைய மனதிலே இருக்குமேயானால் அதை துணிச்சலாக வெளிப்படுத்துங்கள். அந்த அந்த ஜாதி சங்க தலைவர்களிடமாவது சொல்லுங்கள் - ஜாதிக்கெல்லாம் நீ என்ன ஏகபிரதிநிதியா எங்களுக்கு பிரதிநிதி நீ அல்ல. நாங்கள் உங்களுக்கு எதிரான கருத்து உள்ளவர்கள் நாங்களும் இவ்வளவு பேர் இருக்கிறோம், இனிமேல் நீ எங்கள் பிரதிநிதி என்று பேசாதே, தனியாக உன் பேரை சொல்லி பேசிக் கொள். எங்கள் ஜாதியின் பெயரால் பேசாதே என்றாவது சொல்வதற்கு நாம் துணியவில்லை என்றால் அந்த ஜாதிய படுகொலைகளில் நமக்கும் பங்கு உண்டு என்றுதான் அர்த்தம்.

**சமூக நீதித் துறையிலே**

இந்த வேளையில் வேறு சில செய்திகளையும் சொல்ல வேண்டும். தோழர்களே இதற்கு ஒரு அமைப்பு மத்திய அரசிலே வைத்திருக்கிறார்கள். சோசியல் ஜஸ்ட்டீஸ் அண்டு எம்பவர்மெண்ட் அப்படி என்று ஒரு துறை அமைச்சர் இருக்கிறார். சமூக நீதிக்கான அமைச்சர், அமைச்சுத் துறை ஒன்று இருக்கிறது. சமூக நீதி வழங்க வேண்டிய துறையில் என்ன சமூக நீதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதிலே குருப் 'ஏ' சர்வீஸ்ல மொத்தம் 69 இடங்கள் இருக்கிறது. அதில் பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் தான் இருக்கிறார், அப்ப 1.5 சதவீதம் கூட இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் 7.2 சதவீதம் பேர் இருக்கிறார்கள் 5 பேர் இருக்கிறார்கள், பழங்குடிகள் நான்குபேர் இருக்கிறார்கள், அதேபோல 176 பேர் இருக்கிற பி-பிரிவில் தாழ்த்தப்பட்டவர்கள் 12 பேர், பழங்குடிகள் 8 பேர் ஆக மொத்தம் 30 பேர் இருக்கிறார்கள். பெரிய ஜாதிக்காரன் பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் 13 பேர்தான் இருக்கிறார்கள். அதே போலதான் 'சி' பிரிவில் 169 பேரில் 43 பேர் பழங்குடிகளும் தாழ்த்தப்பட்டவர்களும் சேர்ந்து இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் 6 விழுக்காடு தான் இருக்கிறார்கள். 11 பேர்தான் இருக்கிறார்கள். ஆக எல்லா இடங்களிலும் கீழ் ஜாதியாக மத்திய அரசில் - எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிற அரசில் - கீழ் ஜாதியாக இருக்கிற பிற்படுத்தப்பட்டவர்கள் தான் நம்மூரில் வந்து பெரிய ஜாதி என்று பேசிக் கொண்டிருக்கிறார். பெரிய ஜாதி என்று பேசினால் என் ஜாதிக்காரன் உரிமையை அங்கே வாங்கி கொடு என்று நாம கேட்க வேண்டாமா அதைத்தான் கேட்க தவறுகிறோம்.


பெரியார் ஒருமுறை நாகப்பட்டிணம் கூட்டத்தில் பேசுகிறபோது தான் அவர் சொன்னார், நம்மை சூத்திரன் என்கிறான், நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள். அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்று மகிழ்ச்சியடைகிறீர்கள். சூத்திரன் என்றால் பொருள் என்ன என்று தெரியுமா? என்று கேட்டார். என்னை யாராவது சூத்திரன் என்பதைவிட பறையன் என்று சொன்னால் ஏத்துக்குவேன். பள்ளன் என்று சொன்னால் ஒத்துக்குவேன். அதாவது அவன் வச்சிருக்கிற இசைக்கருவியை வைத்து பேர் வந்திருக்க கூடும்; வசிக்கிற பள்ளமான இடத்திற்கு தகுந்தாற்போல் பேர் வைத்திருக்க கூடும்; அவற்றுக்கு ஒரு காரணம் இருக்கிறது. உனக்கு என்னடா காரணம் இருக்கிறது தேவடியாள் மகன் என்று உன்னை சொல்வதற்கு என்ன காரணம் இருக்கிறது? எது கீழ் ஜாதி? என்று பெரியார் கேட்டார். இந்த சூத்திர இழிவு என்பதில் அவன் மகிழ்ச்சியடைவான். ஏன் என்றால் நமக்கு மகாத்மா என்று ஒருவர் இருந்தார். இந்த நாட்டின் கேடுகளுக்கு முக்கால்வாசி காரணமாக இருந்த அந்த மனிதர், ஒருமுறை சொன்னார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கோயிலுக்குள்ளே நுழையவேண்டும் என்ற உரிமையைக் கொடுக்கலாம். இந்த பிற்படுத்தப்பட்டோர் எவ்வளவு தூரம் போகலாமோ அவ்வளவு தூரம் கொடுக்கலாம் என்று. அவ்வளவுதான் அவர் சொன்ன உரிமை. சரி, அவர் அடுத்த ஸ்டெப் ஏதாவது போகலாம் என்பதற்காக சொன்னாரா அதெல்லாம் கிடையாது. நீங்க ரெண்டு பேரும் அங்க போய் நின்னுக்குங்க, கருவறைக்குள்ளே போக முடியாது. அவர் கேட்ட உரிமை அவ்வளவுதான். அனைத்து ஜாதி அர்ச்சகரைப் பற்றி பேசுகிறோம். உரிமை வேண்டும் என்பதைப் பற்றி பேசுகிறோம். நீண்ட நாளாக அங்கே என்ன நடக்கிறது என்று தோழர் மாவட்ட தலைவர் மகாலிங்கம் அழகாக சொன்னார். தேவநாதன் செய்தது எல்லாம் சொன்னார். என்ன சொல்லணும் கடவுள் நம்பிக்கை இருந்தால்தான் பூஜை உண்டு, தி.க.காரன் எல்லாம் வரமுடியாது, தி.வி.க.காரன் வரமுடியாது, பெரியார் தி.க.காரன் வரமுடியாது சொல்கிறாய் நீ. சரி விட்டுவிடு. நாங்க எல்லாம் போகவில்லை எங்களுக்கு அந்த வேலை வேண்டாம் - கடவுள் நம்பிக்கை உள்ளவனுக்கு நீ அர்ச்சகர் வேலை கொடுக்கலாம். கடவுள் நம்பிக்கை இருந்தால் போதாது அந்த ஆகம

(4 ஆம் பக்கம்)

# பெரியாரும்-காமராசரும் பங்கேற்ற விழா

*காங்கிரசில் பெரியாரோடு இணைந்து பார்ப்பன ரல்லாதார் உரிமைக்குப் போராடியவர் டாக்டர் பி. வரதராஜுலு (நாயுடு). அவரது பிறந்த நாள் விழா 27.11.1955இல் சென்னை ராஜாஜி ஆலில் நடந்தபோது பெரியார் ஆற்றிய உரை இது. அதே விழாவில் காமராசரும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.*

"நான் அரசியல் தொண்டனல்ல. சமுதாய நலத் தொண்டனாவேன். அதிலும் பெரிதும் தமிழ் மக்கள் நலனுக்கென்றே பாடுபடுபவன். அதை முன்னிட்டு அரசியல் என்பதை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் எதிர்க்கவும் விட்டுக் கொடுக்கவும் துணிவேன். காமராசருக்கும் எனக்கும் அரசியல் கருத்துகளில் எவ்வளவு பேதம் காணப்பட்டாலும், தமிழர் நலத்தை முன்னிட்டு நானாகவே முன்வந்து அவரை ஆதரிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மற்றபடி எனது சுயநலத்தை முன்னிட்டோ, அல்லது அவர் விரும்புகிறார் என்று கருதியோ அல்ல. அவரும் என்னுடைய ஆதரவு தேவை என்பதாக என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டதும் கிடையாது.




குடியாத்தம் சட்டசபை தேர்தலில் நான் அவரை ஆதரித்தேன் என்றால், அப்பொழுதும் அவரிடம் சொல்லிவிட்டு அவரை ஆதரிக்கவில்லை. அவரும் தன்னை ஆதரிக்க வேண்டும் என்று என்னைக் கேட்கவும் இல்லை.

திடீரென்று எனக்குத் தோன்றிய எண்ணத்தின் பேரில்தான் நான் வலியச் சென்று அவரை ஆதரிக்கும் படியாகியது. நானும் அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருந்தவனுமல்ல. அவர் விரும்புவார் என்று கருதினவனுமல்ல.

ஒருநாள் நான் ஆத்தூர் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் ஒரு தோழர் என்னிடம் ஒரு பத்திரிகையைக் கொடுத்து 'முதல் மந்திரி அவர்கள் சட்டசபை தேர்தலுக்குக் குடியாத்தம் தொகுதியில் நிற்பதாக செய்தி வந்துள்ளது' என்று சொன்னார். நான் அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, அதே கூட்டத் திலேயே என்னுடைய எண்ணத்தை வெளியிட்டேன்.

"திரு. காமராசர் அவர்கள் குடியாத்தம் தொகுதியில் தோல்வி அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும்" என்பதாக அப்போதே கூறிவிட்டேன்.

இதற்கு யாருடைய யோசனையையும் சம்மதத்தையும் நான் கேட்கவில்லை. ஏனெனில், நான் ஜனநாயக ரீதியில் தொண்டாற்றுபவன் என்று சொல்லிக் கொள்பவன் அல்ல. நான், ஜனங்கள் உணராததை, கவலைப்படாததை, மற்ற யாரும் செய்ய முற்படாததை, எடுத்துக் காட்டி உணர்த்தி கவலைப்படும்படி செய்து அவர்களை அவசியமான நேர்வழியில் நடக்கச் செய்ய வேண்டும் என்கிற தன்மையில் தொண்டாற்றுபவன். என்னுடைய கவலையையும் அனுபவத்தையும் கொண்டு, மக்களுடைய இழிவும் குறைபாடுகளும் நீங்க, மக்களுக்கு வழிகாட்டும் பணியை ஆற்றுகிறவனாவேன்.

இந்தப் பணியை ஆற்ற நம் நாட்டில் ஆள் இல்லை. இது பெரும் தொல்லையும், பொறுப்பும் தன்னல மறுப்பும் கொண்ட பணி. ஆதலால் தக்க அறிவும் திறமையும் உள்ளவர்களும்கூட மறைந்து கொண்டும், பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டும், பொதுத் தொண்டு என்னும் பேரால் வயிறு வளர்க்கவும் பணம் சேர்க்கவும் பதவியும் பெருமையும் பெறவுமே, பொதுத் தொண்டு வேஷம் போட்டுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் லட்சத்தில் 99,999 பேர்களாகத் தமிழர்களில் காணப்படுகிறார்கள்.

இக்காலம் பொதுத் தொண்டில் மிகுதியும் நேர்மையற்றதாகிவிட்ட காலம். மக்கள் தன்மையும் அது போன்றதாகி வருகிறது. இந்த நிலையில் ஜனநாயகத் தலைமையும் ஜனநாயக மக்களும் எப்படிப் பயனுள்ள தாக இருக்க முடியும்? ஆனதினால்தான் நான் எனக்கு சரி என்று தோன்றுகிறபடி, மற்றவர்கள் என்ன சொல்லு வார்கள் என்றுகூட கவனிக்காமல் மற்றவர்களை யெல்லாம் என்னைப் பின்பற்றச் சொல்கிறேன்.

பின்பற்ற இஷ்டம் இல்லாவிட்டால், விலகிக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய காரியத்திற்கு நான் தகுதியா என்றாலும் எனக்கு இது தவிர வேறு வேலை இல்லாத தாலும், வேறு யாரும் இப்பொறுப்பை ஏற்கப் பயப்படு வதாலும் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் துணிந்து முன்வந்துள்ளேன். காமராசர் அவர்களையும் நான் அந்தப்படி கருதுவதால் அவர் போக்குக்கு என்னாலான ஆதரவைத் தருவது அவசியம் என்று கருதுகிறேன். அவருக்கு ஆதரவு தருவது பற்றி நான் வெட்கப்படவில்லை. அவரும் என்னைப் போலவே ஒரு துறவி ஆவார். எனக்காவது மனைவி உண்டு. அவருக்கு அதுவும் இல்லை.

இப்படிப்பட்ட துணிச்சலுக்கு மனைவி மக்கள், சொந்த வாழ்வு இல்லாமை அவசிய மாகும். இப்படிப்பட்டவர்கள் ஏதாவது வேறு செய்தாலும் செய்யலாம். ஆனாலும் தவறுதான் செய்யலாமே ஒழிய புரட்டு மோசம், சுயநலப் பற்று, வேஷம் செய்ய அவசியமுடையவர் களாக மாட்டார்கள். இயற்கையை முன்னிட்டு நான் இப்படிப் பேசுகிறேன்.

.... இதுவரை நான் அவரை (காமராசரை) எந்த விதமான உதவியும் கேட்டது கிடையாது. அவரும் என்னை எதுவும் கேட்டது கிடையாது. எங்கள் இருவருக்கும் சொந்த சங்கதி என்பதாக எதுவும் இல்லை. தமிழர் நலத்திற்காக அவர் தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்படு வதுண்டு. தனிப்பட்ட நபர்களைப் பற்றி நான் அவரிடம் எதுவும் பேசுகிறதே இல்லை. இனியும் பேசப் போவதும் இல்லை. நாங்கள் இப்படிப்பட்ட சம்பிரதாய சம்பந்தமில்லாமல் தனிப்பட சந்திப்பதுமில்லை!

இன்றுகூட இந்த விழாவுக்கு என்னை அழைத்த போது, காமராஜர் இங்கு வருவார் என்று தெரிந் திருந்தால் நான் கண்டிப்பாய் வர ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். நான் இதுவரை எந்த மந்திரி பேசுகின்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டதே இல்லை. அதில் கலந்து கொள்வதில்லை என்பது இதுவரை நான் செய்து கொண்டிருந்த முடிவான கருத்தாகும்.

ஆனால், இதில் மட்டும் கலந்து கொள்ளும்படியான நிலை ஏற்பட்டதானது, நான் இதற்கு வருவதற்கு ஒப்புக் கொண்டபின்தான் முதல் மந்திரி அவர்கள் இதற்குத் தலைமை வகிக்கிறார் என்றும், சிலர் பேச வந்திருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. இதன் பிறகு நான் மறுத்துக் கூறுவது முறை இல்லை என்பதாகக் கருதி எதிர்பாராத இச்சந்தர்ப்பம் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் பேரில் அமைந்துவிட்டது.

(நூல்: 'காரியக் காமராசர் குறித்து காரணப் பெரியார்' தொகுப்பு மே.கா. கிட்டு. வெளியீடு: தோழமை, 10, 6வது தெரு முதல் செக்டர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600 078. பேசி: 9444302967; பக்.184 - விலை 125.)

## திருச்சியில் மன்மோகன் சிங்குக்கு கழகத்தினர் கறுப்புக் கொடி

*2.8.2013* அன்று காலை 10 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்த பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமையில் திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன், மாவட்டச் செய லாளர் கந்தவேல் குமார், மாவட்ட அமைப்பாளர் குணராஜ், திருவாரூர் மாவட்டச் செயலாளர் காளிதாஸ், நீடாமங்கலம் ஒன்றியச் செயலாளர் நல்லிக்கோட்டை முருகன், நீடாமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் செந்தமிழன், தோழர்கள் பழனி, பொன்னுசாமி, முருகாநந்தம், மணி, குமரேசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைதா யினர். 1000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு அன்று மாலை 5 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

## வினாக்கள்... விடைகள்...

+ 14 வயது சிறுமியை சீரழித்த போலி சித்தர் கைது.

**– செய்தி**

*குற்றச் செயல் புரிந்த சித்தர் – சாமியார்களை போலி என்று செய்தி போடும் பத்திரிகைகள் – குற்றச் செயல் புரிந்த காஞ்சி ஜெயேந்திரனை மட்டும் போலி சங்கராச்சாரி என்று செய்தி போடாதது ஏன்?*

+ 'தலைவா' திரைப்படம் வெளியிட முடிவு; தலைப் புக்கு கீழே இடம் பெற் றுள்ள 'தலைமை தாங்கும் நேரம் வந்துவிட்டது' என்ற பொருள் கொண்ட ஆங்கில சொற்றொடர் நீக்கப்படு கிறது!

**– செய்தி**

*மகிழ்ச்சி! "தலைமையை பறி கொடுத்த தலைவா! வருக! வருக!" என்று ரசிகர்கள் சுவரொட்டி போட்டுக் கொண்டாடலாம்!*

+ எனது மகள் காதலிக்கும் காதலன் நம்பத் தகுந்தவன் அல்ல.

**– இயக்குநர் சேரன்!**

*நீங்கள் இப்படிக் கூறு கிறீர்கள்; 20 ஆண்டுகள் நீங்கள் வளர்த்த மகளே எனது அப்பா நம்பத் தகுந்தவர் அல்ல என் கிறாரே!*

+ மன்மோகன் சிங் நேருக்கு நேர் விவாதிக்கத் தயாரா? என்று மோடி – சுதந்திர நாள் கொடியேற்று விழாவில் சவால் விட்டார்.

**– செய்தி**

*சரி; மேடையை எங்கே போடலாம்? பாகிஸ்தான் எல்லையிலா? சீனாவின் எல்லையிலா?*

+ பகத்சிங் – ஒரு 'தியாகி' என்பதற்கு மத்திய அரசிடம் எந்த ஆவணமும் இல்லை.

**– தகவல் அறியும் சட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகம் தகவல்**

*இந்தத் தேசம் வழங்கும் தியாகிப் பட்டம்கூட அம் மாவீரனுக்கு, ஒரு அவ மானம் தான்!*

+ நிலக்கரி தோண்டுவதற்கு அனுமதி வழங்கிய கோப்பு களை பிரதமர் அலுவல கத்தில் கண்டுபிடிக்க முடிய வில்லை.

**– செய்தி**

*சுரங்கம் தோண்டிய இடங்களிலேயே இன்னும் ஆழமாகத் தோண்டிப் பாருங்கள்!*

+ ஜம்மு–காஷ்மீர் மாநில மக்களை ஏன் வேறுபடுத்து கிறீர்கள்?

**– காஷ்மீர் முதல்வர் அப்துல்லா வேதனை!**

*என்ன செய்வது? வேறு படுத்திப் பார்க்காவிட்டால், நாங்கள் 'தேசத் துரோகி' யாகி விடுவோமே!*

DATE OF PUBLICATION 21.08.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கழக நிர்வாகக் குழு ஈரோட்டில் கூடியது

தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், மண்டல அமைப்புச் செயலாளர்களைக் கொண்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை நிர்வாகிகள் குழு ஆலோசனைக் கூட்டம் 18.8.2013 அன்று ஈரோட்டில் கூடியது.

சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயணத்தின் நிறைகுறைகள் குறித்து விரிவாக பரிசீலிக்கப்பட்டது. மாவட்டங்களை மய்யமாக வைத்து கிராமம் கிராமமாக நடத்தவிருக்கும் பரப்புரைக்கான திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டிய முழக்கங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிர்வரும் செப்டம்பர் 11 முதல் 20 வரை நடக்கும் இந்த கிராமப் பரப்புரை இயக்கம் பழனியில் தொடங்கி திண்டுக்கல்லில் நிறைவடைகிறது.

பரப்புரையில் - ஜாதி-தீண்டாமை எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழக கார்ப்பரேட் நிறுவனங்களில் ஒடுக்கப்பட்டோர் வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் உரிமை, தலைதூக்கி வரும் ஜாதி வெறி சக்திகளை முறியடிக்க - சுயஜாதி எதிர்ப்பாளர்களின் ஒருங்கிணைப்பு, பறிபோகும் தமிழக இயற்கை வளங்கள், பன்னாட்டு சுரண்டல் ஆகிய கருத்துகளை முன் வைத்து பரப்புரை நடத்த முடிவு செய்யப்பட்டது. பரப்புரையில் மக்களிடையே முன் வைக்கப்படும் முழக்கங்கள்:

1. ஜாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கு பாதுகாப்புக்கும் - மிரட்டும் ஜாதி வெறியர்களைத் தடுக்கவும், தண்டிக்கவும் தனிச்சட்டம் வரட்டும்.
2. கார்ப்பரேட் நிறுவனங்களில் இடஒதுக்கீட்டைப் பெற போராடுவோம்.
3. ஜாதி வெறியூட்டிடும் சங்கத் தலைவர்களுக்கு எதிராக அந்தந்த ஜாதிகளில் பிறந்த ஜாதி எதிர்ப்பாளர்கள் வெளியே வந்து கண்டனக் குரல் எழுப்ப வலியுறுத்துவோம்.
4. தீண்டாமை வடிவங்களான இரட்டைக் குவளை, தனிச் சுடுகாடு போன்றவற்றை அம்பலப்படுத்தி, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை செயல்படுத்த வைப்போம்!
5. உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையை இயற்கை வளங்களைச் சூறையாடும் பன்னாட்டு சுரண்டலை முறியடிப்போம்!
6. ஜாதிச் சான்றிதழ் வழங்காதே; வகுப்புச் சான்றிதழ் (பி.சி., எம்.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. என்று) வழங்கு!

- என்ற முழக்கங்கள் முன் வைக்கப்படும்.

இந்த செயல் திட்டங்களை முன் வைத்து முடிவெடுக்க 2.9.2013 அன்று சென்னையில் கழகத்தின் தலைமை செயற்குழுவை கூட்டுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

நிர்வாகக் குழுவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச் செல்வி, அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், மண்டல அமைப்புச் செயலாளர்கள் ஈரோடு இராம. இங்கோவன், பல்லடம் விஜயன், மேட்டூர் சக்திவேல், நெல்லை குமார், மயிலாடுதுறை இளையராஜா, திண்டுக்கல் இராவணன், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் திருப்பூர் சிவகாமி மற்றும் ஈரோடு சிவக்குமார், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் சார்பில் அ.ப. சிவா உள்ளிட்ட 17 தோழர்கள் பங்கேற்றனர்.

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதிகளில் வழிபாட்டு முறைகளில் உரிய பயிற்சிவேணும் என்று சொல்லு - நியாயம், பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவனுக்கு எல்லாம் தெரியுது, இல்லை இல்லை அவன் சரியா பண்ணல அரைகுறையாக தான் படித்தார் என்று சொன்னால் அவர்களுக்கு ஒரு செய்தியை சொல்லனும், இந்த அர்ச்சகர் கோயில் உரிமையை பற்றியெல்லாம் ஒருத்தர் வந்து விசாரிப்பதற்கு அதை பற்றி கருத்து சொல்வதற்கு ஒரு குழுவை போட்டார்கள். சி.பி.ராமசாமி ஐயர் தான் தலைவர். அவர் ஒரு அறிக்கை கொடுத்தார். இந்து மத அறக்கட்டளையை பற்றி விசாரிக்க மத்திய அரசு 1960ம் ஆண்டு நியமித்தது ஒரு குழுவை அதனுடைய தலைவராக இருந்தவர் 62ல் அறிக்கை கொடுத்தார். நாங்கள் தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுப் பயணம் செய்தபோது ஏராளமான கோயில்களுக்கு நேரடியாக நாங்களே போய் பார்க்க எங்களுக்கு நிரம்ப வாய்ப்பு கிடைத்தது. அர்ச்சகர்களும், பூசாரிகளும் ஒன்று, கல்வி அறிவற்ற தற்குறிகளாக இருக்கின்றனர், அல்லது அரைகுறையாக படித்தவர்களாக இருக்கின்றனர் இது அவர் கொடுத்த அறிக்கை. அவர்கள் வழக்கமாகவே பணம் பறிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இதில் ஏதோ சிற்சில விதிவிலக்குகளும் உள்ளன. விதிவிலக்காகத் தான் பார்ப்பனர் ஒழுங்காக இருக்கிறார்களாம், இந்த விதி விலக்குகள் வடக்கே விட தெற்கே தான் அதிகம் என்கிறார். கொஞ்சம் ஒழுங்கானவன் இங்கே இருக்கிறான் என்று அவர் சொல்கிறார். அவருக்கு தெரிந்தது. ஏனென்றால் அவர் இந்த ஊரு பார்ப்பான் இல்லையா, ஓதும் மந்திரங்களில் அவர்களின் உச்சரிப்பும், உச்சாடனமும் பதியத் தக்கதாக இல்லை. அவன் சொல்வதெல்லாம் மந்திரம் மாதிரியே தெரியவில்லை தப்பும், தவறுமாக இருக்கின்றன. தாங்கள் முழங்கும் இந்த இந்த மந்திரங்களின் சிறப்பையோ அல்லது பொருளையே அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. தெய்வத்தின் கருணையை பெறுவதற்காக கோயிலுக்கு வரும் பக்தர் இடத்திலும், வழிபடுவோர் இடத்திலும் பக்தியும் மரியாதையும் அடங்கிய உணர்ச்சியை ஊட்டக்கூடிய நிலையில் அர்ச்சகர்கள் இருப்பதில்லை என்பதுதான் வெளிப்படை - இது ஐயர் எழுதிய அறிக்கை.

இப்படிப்பட்ட அர்ச்சகர்கள் எல்லாம் இருக்கான் நம்ம போனால் கெட்டு போய்விடும் என்கிறான். இவன் எல்லாம் போனான் என்றால் வழக்கத்திற்கு மாறாகவும், பழக்கவழக்கங்கள் கெட்டுவிடும், இன்றைக்கு வரைக்கும் வழக்காடி கொண்டிருக்கிறார்கள். முதலில் சட்டம் போட்டார்கள். சட்டத்திற்கு எதிராக தீர்ப்பு வந்த பின்னால் அதற்காக பயிற்சி நடத்தினார்கள். பயிற்சி முடிந்தது. வழக்கு நிலுவையில் இருக்கிறது. கடந்த 7, 8 மாதங்களாக தமிழ்நாடு அரசு நாங்கள் எங்களுக்குள் சமாதானமாக போகிறோம் என்று வழக்கு நடத்தாமல் வைத்துக் கொண்டிருக்கிறது. நடத்தியிருந்தால் ஏதாவது ஒரு தீர்ப்பு எங்களுக்கு எதிராக கூட வரட்டும், எழுச்சியாவது இங்கு வரும், போராட்டமாவது இங்கு வரும். ஆனால் இவர்கள் நடத்தவிடாமல் தடுத்துக் கொண்டே இருக் கிறார்கள். நாங்கள் சமாதானமாக போய்விட்டோம். பேசிக் கொண்டு இருக்கிறோம். விரைவில் எங்கள் முடிவை சொல்லுவோம் என்று சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

பெரியார் தான் கேட்டார். வடக்கே போகிறான், காசிக்கு போறான், போனவுடனே காசி விஸ்வநாதனை கட்டிப் பிடித்துக் கொண்டே கும்பிடுகிறாரான். பெரியார் சொல்வார், அடுத்து வந்தவர் வந்தால் இவனை எழுப்பி விட்டு கட்டிப் பிடித்து கொள்வாராம், ஏன்டா காசி விஸ்வநாதர் அங்கேயே இருக்கார் அங்க இருந்தா தொடுவதற்கு விடுகிறான், இங்க ஏன்டா தொட விடமாட்டேன் என்கிறாய் என்று கேட்டார், தமிழ்நாட்டிற்கு வந்தால் மட்டும் எப்படி தீட்டு வந்துவிடுகிறது. பெரியார் சொல்வார், பெரிய, பெரிய கோயில்களில் போவான், அங்கபோய் தொட்டு கும்பிடுகிறான், நேராக பூவை போட்டுவிட்டு வருகிறான், தண்ணீர் ஊற்றுகிறான், தொட்டு கும்பிடுகிறான், இங்கே மட்டும் ஏன் தீட்டு. ஒரே சாமிதானே இந்தியா முழுக்க இருக்கிறது, இந்து மதத்திற்கு எல்லாம் ஒரே சாமிதானே ஒரே விதிதானே இருக்கும் ஏன் அங்கே மட்டும் அப்படி, இங்கே மட்டும் இப்படி என்று கேட்டார். நம்மை ஏமாற்றியது தென்னிந்தியாவில் மட்டும். அதிலும், பழைய சென்னை மாகாணத்தில் மட்டும் தான் இதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த உரிமையைப் பற்றி பேசுவதும், இப்போது தேவையாக இருக்கிறது. அதை எல்லாவற்றையும் பற்றி பேச வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இடஒதுக்கீடு என்று பேசுகிறபோது, தனியார் துறையை பற்றி சொன்னார்கள், அரசு துறை இல்லாமல் போகிறது.

தனியார் துறையாக மாறுகிறபோது, தனியார் துறையில் இடஒதுக்கீடு வேண்டும் என்பதைப் பற்றி நாம் அழுத்தமாக பேச வேண்டிய தேவை இருக்கிறது. எங்க நாட்டில் எங்க அரசு கொடுக்கும் இலவச நிலத்தை வாங்கி எங்களிடம் மின்சார கட்டணத்தில், சலுகை வாங்கி எல்லாம் நடத்திக் கிட்டு ஏன் எங்களுடைய இடஒதுக்கீடு இல்லை என்று நாம் கேட்பதில்லை. ஒரு நூற்றாண்டு கணக்காக நடத்திய தொழிலாளர் பேராட்டம் பல உரிமை களை பெற்றுத் தந்தது. மெல்ல மெல்ல அதைப் பெற்றார்கள். சாதாரணமாக சிறப்பு பொருளாதாரம் என்றால் அவ்வளவுதான். எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் அழகாக எழுதினார், இதெல்லாம் சதுர்வேதி மங்கலங்களை போல அந்த காலத்தில் வைத்திருந்தார்கள். பாருங்கள், அங்கே எல்லாம் அரசின் சட்டங்கள் செல்லாது, இறையிலியில் எதுவும் செல்லாது என்பது போன்ற சிறப்பு பொருளாதார மண்டலம் புதிதாக வந்திருக்கின்றன. அவை பிரம்ம தேயங்கள் என்று எழுதினார். அதைபோல எந்த சட்டமும் செல்லாது என்கிறார்கள்.

**(தொடரும்)**


## பெரியார் தாசன் முடிவெய்தினார்

பெரியார்-அம்பேத்கர் கருத்துக்களை பல நூறு மேடைகளில் முழங்கிய பெரியார தாசன், ஆகஸ்டு 18 அன்று இரவு திருவேற்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் தோழர்கள் இறுதி மரியாதை செலுத்தினர். அவரது வாழக்கையின் பிற்பகுதியில் கொள்கைத் தடுமாற்றங்கள் இருந்தாலும் அவரது 'பெரியாரியல் பரப்பும்' பணி மகத்தானது. கழக சார்பில் ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்கு உரித்தாக்குகிறோம். – **ஆசிரியர்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd August 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆகஸ்டு 29, 2013 | புரட்சி 12 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


## மதவெறி துப்பாக்கிக் குண்டுக்கு பலியான பகுத்தறிவு போராளி

# டாக்டர் தபோல்கருக்கு வீரவணக்கம்!

மக்களிடம் மூடநம்பிக்கையை எதிர்த்து, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வந்த பகுத்தறிவுப் போராளி, சமுதாய சிந்தனையாளர் நரேந்திர தபோல்கர் (65) மதவெறியின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியாகி வீரமரணமடைந்தார். ஆக. 20 ஆம் தேதி செவ்வாய் கிழமை புனேயில் ஓம் கரேஷ்வர் பாலத்தில் காலை நடைப்பயிற்சி மேற் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் அவரை நேருக்கு நேர் சுட்டு வீழ்த்தினர். இந்தியாவில் பகுத்தறிவுவாதி ஒருவர், துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியான முதல் சம்பவம் இதுவேயாகும். அருகே, ஓம் கரேஷ்வர் கோயில் உள்ளது. அந்தக் கோயில் அருகே அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் காமிராவில் கொலையாளிகளின் உருவம் பதிவாகி யுள்ளது என்றாலும், படப்பதிவு தெளிவாக இல்லை என்று காவல்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

வீரமரணமடைந்த தபோல்கர், தனது மருத்துவத் தொழிலை விட்டுவிட்டு, 'மகாராஷ்டிரா ஆந்திரஷ்ரதா நிர்மூலன் சமிதி' என்ற அமைப்பை உருவாக்கி, 1989 ஆம் ஆண்டு முதல் மக்களிடையே மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பகுத்தறிவு பிரச்சாரம் செய்து வந்தார். சாமியார்கள் மற்றும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக மகாராஷ்டிர மாநிலம் முழுதும் அவர் நடத்திய பகுத்தறிவுப் பிரச்சாரத்தை சகித்துக் கொள்ள முடியாத, 'சனாதன் பிரபாத்', 'இந்து ஜனசக்ருதி சமிதி' போன்ற மதவெறி அமைப்புகள் அவருக்கு கொலைவெறி மிரட்டல்களை விடுத்து வந்தன. அவர் நடத்திய கூட்டங்களிலும் கலவரம் செய்து வந்தனர். சுட்டுக் கொல்லப்பட்ட நாளன்று பிற்பகல் அவர் பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். மகாராஷ்டி ராவில் வினாயக சதுர்த்திக்கு தயாரிக்கும் வினாயகர் சிலைகள் சுற்றுச் சூழலை பாதிக்கும் ரசாயனங் களில் தயாரிக்கக் கூடாது என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம், அது!



தபோல்கர் நேரடியாக கடவுள், மத எதிர்ப்புப் பரப்புரை செய்யவில்லை. கடவுள், மூடநம்பிக்கை யின் பெயரால் நடக்கும் சுரண்டல் மோசடி களையே எதிர்த்து வந்தார். அவருக்கு மனைவியும், ஒரு மகனும் மகளும் இருக்கிறார்கள். அவ்வப் போது அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பிற்போக்கு சக்திகளிடமிருந்து கொலை மிரட்டல் வந்து கொண்டே இருந்தது. ஆனால், தனக்கு போலீஸ் பாதுகாப்புக் கேட்க அவர் மறுத்து விட்டார். 'அறியாமையை எதிர்த்து நான் நடத்தும் போராட்டத்துக்கு ஆயுதங்கள் தேவை இல்லை' என்று கூறினார்.

கிராமங்கள், பள்ளிகள், கல்லூரிகளில் அவரது பகுத்தறிவு பரப்புரையின் தாக்கத்தால் வலிமையான ஆதரவுத் தளம் உருவானது. பார்வையற்றவர்களுக்கு தனது அற்புத சக்தியால் பார்வை உண்டாக்க முடியும் என்று ஏமாற்றி வந்த ஒரு மனிதருக்கு நேரில் தன்னுடன் விவாதிக்க தபோல்கர் சவால் விடுத்தார். அதுதான் அவர் இறங்கிய முதல் களப் பணி. 'கடவுள் அவதாரம்' என்று அழைத்துக் கொண்ட அந்த மோசடிப் பேர்வழி ஏராளமான ஆதரவாளர்களுடன் கிராமத்துக்கு திரண்டு வந்தார். ஆனால், 'கடவுள் அவதாரத்தின்' மோசடியை தபோல்கர் அம்பலப்

(3ஆம் பக்கம்)

### புனே முடங்கியது

தபேல்கர் வீரமரணத்தைத் தொடர்ந்து, புனேயில் முழு அடைப்பு அறிவிக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ். தலைமை பீடம் செயல்படும் பார்ப்பனக் கோட்டையான புனேயில் தபோல்கருக்கு இரங்கல் தெரிவித்து முழு அடைப்பு வெற்றி பெற்றது. அரசுப் பேருந்து ஓடியதைத் தவிர, புனே நகரமே முடங்கிப் போய், பகுத்தறிவாளருக்கு வீரவணக்கம் செலுத்தியது.

### பார்ப்பனர் எதிர்ப்பு

1972இல் சோஷலிஸ்ட் தலைவர் பாபா ஆதவ், கிராமங்களில் பொதுக் கிணறுகளில் தலித் மக்கள் தண்ணீர் எடுப்பதைத் தடுக்கும் ஜாதி வெறிக்கு எதிராக 'ஒரு கிராமம், ஒரு கிணறு' இயக்கத்தைத் தொடங்கியது. அதில் தபோல்கர் தீவிரமாகப் பங்கேற்றதைத் தொடர்ந்து பார்ப்பனர்கள், உயர்சாதியினர், மதவெறி சக்திகள் கலவரத்தில் இறங்கினர். அதற்கு எதிர்வினையாக மகாராஷ்டிரா முழுதும் தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கங்கள் வீறு பெற்றன. இயக்கத்தில் முதல் நபராக களமிறங்கிய தபோல்கர், சதாரா மாவட்டத்தில் 'இரட்டைக் கிணறு' தீண்டாமைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். 'அம்பேத்கர் நடத்திய மகர் குளத்தில் நீர் எடுக்கும் போராட்டமே இதற்கு உந்து சக்தியாக இருந்தது' என்று அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட சமூகப் பணியாளர் சுரேஷ் கிர்புக்கர், 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் உயரிய கவுரவ விருதான 'மகாராஷ்டிரா பூஷன்' விருதை தபோல்கருக்கு வழங்கி கவுரவிக்க வேண்டும் என்று கம்ப்யூட்டர் விஞ்ஞானி விஜய் பச்தர், மராட்டிய முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார். அவரின் உன்னதமான தியாகம் வீண் போகக் கூடாது என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழகத்திலும் சட்டம் வரவேண்டும்

மராட்டிய மாநிலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதைப் போல் தமிழ்நாட்டிலும் தமிழக அரசு கொண்டு வரவேண்டும் என்று சென்னை கணித விஞ்ஞான நிறுவனத்தின் பேராசிரியர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். கணித விஞ்ஞானிகள் இரமேஷ் அனிஷ் ஷெட்டி, ஏ.பி.பெல்லியப்பா, மதுரா சிறிபாக, டி.ஆர். கோவிந்தராஜன், பி. சங்கரன், பாலா. சதிபாலன், சுந்தர் உள்ளிட்ட 22 கணித பேராசிரியர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தபோல்கர் கொலைக் குற்றவாளிகளைக் கண்டறிவதில் முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் தங்கள் மத உணர்வு புண் படுவதாகக் கருதுவோர் அதை கருத்துகளாக வெளிப்படுத்த வேண்டும். மதத் தீவிரவாதம் ஆயுதம் தூக்குவதைக் கண்டிக்க முன்வர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

### திமிர் அறிக்கை

கொலையில் சந்தேகப்படும் 'சனாதன சங்கம்' என்ற பார்ப்பன அமைப்பின் தலைவர் அபய்வர்த்தக் என்பவர், இந்தக் கொலையில் தங்களுக்கு தொடர்பில்லை என்று மறுக்கிறார். அத்துடன் அவர் எந்தக் கடவுளுக்கு எதிராக செயல்பட்டாரோ அதே கடவுள், அவருக்கு நல்ல சாவை கொடுத்து விட்டார். இப்படி உடனடியாக சாவது என்பது கடவுளின் செயலே என்று கோவா மாநிலம் பனாஜியி லிருந்து திமிரோடு அவர் அறிக்கை விடுத் துள்ளார்.

## தபோல்கர் மசோதா சட்டமானது

நரபலி, மாயமந்திரம், பேய், பில்லி சூன்யம் போன்ற மூடநம்பிக்கைகளைத் தடை செய்யவும், அதில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவும் மகாராஷ்டிராவில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு தபோல்கர் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். இதற்காக அவர் தயாரித்து அனுப்பிய மசோதா, தொடர்ந்து பல ஆண்டுகளாகவே ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டு வந்தது. பா.ஜ.க., சிவசேனா போன்ற அமைப்புகள் இந்த மசோதாவைக் கடுமையாக எதிர்த்து வந்தன. இந்த மசோதாவை தாக்கல் செய்யாமல் காலம் கடத்தும் மராட்டிய முதல்வர் பிரித்திவிராஜ் சவானை இரண்டு வாரங்கள் முன் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் தபோல்கர் கடுமையாக விமர்சித்தார்.

அவர் உருவாக்கித் தந்த மசோதாவை அவரது வீரமரணத்தின் நினைவாக மராட்டிய அரசு இப்போது சட்டமாக்கியுள்ளது. தபோல்கர் உருவாக்கிய மசேதாவை சட்டாக்க வேண்டும் என்று அரசுக்கு பல்வேறு அமைப்புகள் மற்றும் பொது மக்களிடமிருந்து அழுத்தம் வந்ததைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 21 ஆம் நாள் மராட்டிய அமைச்சரவை கூடி, மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கியது. அவசர சட்டத்தின் வழியாக மசோதாவுக்கு மாநில அரசு சட்ட அங்கீகாரம் வழங்கியுள்ளது. தபோல்கர் தனது வீரமரணத்தின் வழியாக மராட்டிய மக்களுக்கு பெற்றுத் தந்துள்ள வெற்றி இந்த சட்டம்.

2011 ஆம் ஆண்டு ஆக. 10 ஆம் தேதி மராட்டிய மாநில சட்டமன்றத்தில் நரபலி, பில்லி சூன்யம் போன்றவற்றை தடை செய்யும் மசோதா தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 13 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மசோதாவை அவர் தயாரித்தார். கடுமையான எதிர்ப்புகளினால் 24 முறை திருத்தப்பட்டு நிறைவேற்றப்படாமலே இருந்தது. இந்த மசோதாவின்படி பில்லிசூன்யம், தாயத்து மந்திரம் போன்ற மோசடிகளில் ஈடுபடுவோருக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்க முடியும். மிருகங்கள் பலியிடுல், நோய் தீர்ப்பதற்கு 'அற்புத சிகிச்சை' முறைகளை இந்த மசோதா தடை செய்கிறது. தபோல்கர் படுகொலையைத் தொடர்ந்து மக்களின் கடும் கோபத்தை தணித்து, அவர்களின் உணர்வுகளை மதிக்க இந்தச் சட்டத்தை உடனே கொண்டு வரவேண்டும் என்று மாநில மூத்த அமைச்சர்கள் முதல்வருக்கு அழுத்தம் தந்தனர். அதன் பிறகு, அவசர சட்டம் பிறப்பிக்க முதல்வர் ஒப்புக் கொண்டார். அத்துடன் தபோல்கர் படுகொலையைத் தொடர்ந்து மாநிலத்தில் செயல்படும் சில மதவெறி அமைப்புகளை தடைசெய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்தவும் மாநில அரசு முடிவு செய்துள்ளது.

# கழகத் தலைவர் கொளத்தூர்மணி கேள்வி

# சோஷலிசமோ, மதச்சார்பின்மையோ நாட்டில் இருக்கிறதா?

***மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜூலை 24 அன்று சுயமரியாதை சமதர்ம பரப்புரைப் பயணத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி :***

*இந்த நாட்டை சோஷலிச நாடு என்று இன்றைக்கும் அரசியல் சட்டத்தில் வைத்திருக்கிறார்கள். பேர் என்னவோ பெரிய பேரு 'சாவரின் செக்யூலர் சோஷலிஸ்ட் டெமாக்டரிக் ரிபப்ளிக்' (Sovereign Socialist Secular Democratic Republic) தான் நம்முடையது, இதுல ஒன்று கூட இங்கே இல்லை என்பது வேறு. உலக வங்கித்தான் ஆணையிடுகிறது. சேவை துறைகளுக்கு செலவு செய்யாதே, மருத்துவம் வேண்டாம், கல்வி வேண்டாம், அதுக்கு எல்லாம் செலவு செய்யாதே, சாவரின் எங்கு இருக்கு? எவனோ முடிவு செய்கிறான். மதச் சார்பின்மை பற்றி பேசவேண்டியதே இல்லை. செக்யூலர் நாடா இது?சேது சமுத்திர திட்டத்தில் ஒரு வழக்கு வந்தது, வழக்கில் உச்சநீதிமன்றம் கருத்து கேட்கிறது. ஏதோ ராமர், பாலம் கட்டினாராம், இது உண்மையா என்று தேசிய வரலாற்று ஆய்வு மையத் திடம் உச்சநீதிமன்றம் கேட்கிறது. என்.சி.எச்.ஆர்.கிட்ட கேட்கிறார்கள், அவங்க ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கிறார்கள், இது மனிதனால் கட்டப்பட்டது இல்லை, நாட் மேன் மேட் (not man made), ராமாயணத்தில் வரும் கதாபாத்திரங்கள் வாழ்ந்த தற்கு ஆதாரம் இல்லை என்று சொன்னார்கள். அந்த கதா பாத்திரம் வாழ்ந்ததற்கு ஆதாரம் இல்லை அந்த பாலம், மனிதனால் கட்டபட்டது இல்லை, இயற்கையாக உண்டான மணல் திரட்டு என்று சொல்கிறார்கள். இப்படிச் சொன்னவுடனே என்ன செய்திருக்க வேண்டும் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்களே என்று பாராட்டினார்களா? இந்த காங்கிரஸ் அரசு, இரண்டு அதிகாரிகளையும் சஸ்பெண்ட் பண்ணி விட்டது. அவர்கள் ஜாக்கிரதையாக சென்னார்கள் எங்களுக்கு இந்த ராமனும், ராமயணமும், இந்து சமுதாயத்தில் எவ்வளவு இரண்டற கலந்து இருக்கிறது என்பதை அறிந்து தான் மிகுந்த மரியாதையோடு இதை சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்லிவிட்டுதான் சொன்னார்கள், சும்மா கூட சொல்லவில்லை, அப்ப இந்த அரசுகள் எங்க செக்யூலராக இருக்கிறது, பகுத்தறிவோடு, அறிவு மனப்பான்மையை வளர்ப் பதற்காக இருக்கிறது என்பதற்காக சொல்கிறேன். சோஷலிஸ்ட் அரசு என்று சொல்கிறான். இதற்கு ஆவடியிலே காங்கிரஸ் மாநாட்டில் 1956இல் போட்டார்கள், மாநாட்டில் தான் காங்கிரஸ் அந்த கருத்தை ஏற்று கொண்டது. அப்புறம் 20 வருடம் ஆகிவிட்டது. 1976ல் ஒரு அரசியல் சட்ட திருத்தம் கொண்டுவந்து சோஷலிஸ்ட் என்ற சொல்லை ஒரு அரசியல் சட்ட திருத்தத்தின் வழியாகத் தான் சேர்த்தார்கள் 1976ல் மாநாடு போட்டு, தீர்மானம் போட்டு நாடாளு மன்றத்தில் திருத்தம் கொண்டு வந்து செய்யப்பட்ட அந்த சோஷலிசத்தை நரசிம்மராவ் காலத்தில் சத்தம் இல்லாமல் ஒழித்து விட்டார்கள். சோஷலிசம் எங்கே இருக்கிறது.*

*முழுக்க முழுக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு திறந்து விட்டு விட்டு, தொழிலாளர் சட்டங்கள் செல்லாது என்று சொல்லிவிட்டு சோஷலிசம் என்ற சொல்லை இன்னும் வைத்திருக்கிறார்கள். நம்ம ஊர் அக்ரகாரத்தில் குடியிருந்த பார்ப்பனர்கள், இங்கு மக்கள் எழுச்சி வந்து உழைக்கும் மக்களுடைய எழுச்சி அல்லது தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருடைய மான உணர்வு கிளர்ந்து எழுந்த பின்னால் நகரத்திற்கு போனான்; அரசு பணிகளை பிடித்தார்கள். அரசு பணிகளில் இடஒதுக்கீடு வந்தவுடனே தனியார் துறைக்கு போனார்கள், இப்போது பன்னாட்டு நிறுவனங்களில் உட்கார்ந்து கொண்டு மீண்டும் அவர்கள் செல்வாக்கு செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை தீட்டி கொள்கிறார்கள். எல்லாவற்றிலும் மையமாக அவர்கள் தான் ஒவ்வொன்றிலும் இருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நம்முடைய திட்டங்களாக இருந்தாலும், அனைத்து ஜாதி அர்ச்சகர்கள் பிரச்சனையாக இருந்தாலும், மிக சாதாரணமாக தூக்கி எறிகிறான். பக்கத்து கேரளாவில் அப்படி ஒரு சிக்கல் வந்தது. ஒரு தாழ்த்தப் பட்டவரை அர்ச்சகராக நியமித்தார்கள். உடனே வழக்கு போனது, மாவட்ட நீதி மன்றத்திற்கு போனார்கள் ராகேஷ் என்ற ஒரு தாழ்த்தப் பட்டவரை கோயில் அர்ச்சகராக நியமிக்கிறார்கள் தேவஸ்தான போர்டு - நியமிக்கிறது. மாவட்ட நீதிமன்றம் நியமித்தது சரிதான் என்று சொல்கிறது. திரும்பவும் அடுத்த வழக்கை உயர்நீதி மன்றத்திற்கு கொண்டு சென்றார்கள் அவர்களும் சரிதான் என்று சொல்கிறார்கள். மீண்டும் அதை உச்சநீதி மன்றத்திற்கு கொண்டு சென்றார்கள். உச்சநீதி மன்றத்திலும் சரிதான் என்று சொல்கிறார்கள் பரவாயில்லையே உச்சநீதிமன்றத்தில்கூட இப்படிப் பட்ட கருத்துள்ள வர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் கருதக்கூடும். தீர்ப்பு சொன்ன நீதிபதிகளில் ஒருவர் தமிழ்நாட்டுகாரர்; ஒருவர் கர்நாடகத்துகாரர்; பழைய சென்னை மாகாணத்துக்காரர். துரைசாமிராஜு என்கிற நீதியரசர் டி.ராஜு அவர் தமிழ்நாட்டை சார்ந்தவர். ராஜேந்திரபாபு என்பவர் பிறப்பால் கன்னடராக இருந்தாலும், படித்தது எல்லாம் தமிழ்நாட்டில் படித்து சட்ட கல்லூரியில் படித்த ஒரு பகுத்தறிவாளர் அவர். அவங்க இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டு சொன்னார்கள், அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னால் அதுதான் பெரியது, மற்ற எதுவாக இருந்தாலும் அதற்கு எதிராக இருந்தாலும் அது செல்லாது என்று சொன்னார்கள். அதே உச்ச நீதி மன்றத்தில் தான் இப்போது தமிழ்நாடு வழக்கு இருக்கிறது. ஏன் இதில் தீர்ப்பு வாங்க முடியவில்லை என்றால் வடநாட்டுக்காரன் உட்கார்ந்து இருக்கிறான். அவர்களுக்கு இந்த முற்போக்குச் சிந்தனை நீதித் துறையில் இல்லை. அதனால் தான் இப்போது தலைமை நீதிபதியாக வந்திருக்கிற நம்முடைய சதாசிவம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், எல்லோருக்கும் இடஒதுக்கீடு வேண்டும் என்கிறார்கள்.*

*அரசியல் சட்டத்தில் ஆயிரம் எழுதி வைத்திருப்பார்கள் நாம் கேட்காவிட்டால் நடைமுறை படுத்த மட்டார்கள். 340 என்று ஒரு பிரிவை எழுதி வைத்தார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு ஆணையத்தை அமைத்து பட்டியல் எடுத்து அவர்கள் மேம்பாட்டுக்கான திட்டங்கள் தீட்ட வேண்டும் என்பது அந்த திட்டம். அதில் ஒன்றுமே செய்யவில்லை. ஒன்றரை ஆண்டுகள் கழித்து அம்பேத்கர் அவர்கள், தான் பதவி விலகியபோது கூறிய பலகாரணங்களில் ஒன்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான மேம்பாட்டுக்கு ஆணையம் அமைக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்டது எதுவும் செய்யவில்லை என்ற காரணத்தையும் சொல்லி விட்டுதான் பதவியை துறந்தார். அவரை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என்று நமது ஆட்கள் சுலபமாக சொல்லிவிடுவார்கள், ஏன் பிற்படுத்தபட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யவில்லை என்று கண்டித்து பதவி விலகினார் அதுவும் ஒரு காரணம், அதற்கு பின்னர் அவசரமாக ஒரு குழுவை நியமித்தார்கள் காகா கலெல்கர் கமிஷன் என்று, வேறு வழியில்லாமல் ஒரு பார்ப்பனர் தலைமையில் குழு போட்டார்கள், இந்து கோயிலில் என்ன பூஜை செய்வது என்று முஸ்லீம் தலைமையிலே குழு போட்ட மாதிரி பிற்படுத்தபட்டோர் பற்றி ஆய்வதற்கு அவரை போட்டார்கள், அவர் கடைசியா அறிக்கையில் சொன்னார், இந்த ஜாதி அடிப்படையில் எல்லாம் தருவது சரியல்ல என்று ஒரு கடிதம் கொடுத்தார். அறிக்கை எல்லாம் எழுதி விட்டு கடைசியாக கடிதம் ஒன்று எழுதினார். ஜாதி அடிப்படையில் எல்லாம் தரக்கூடாது என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். அடுத்த குழு 80ம் ஆண்டுதான் வந்தது. 78ம் ஆண்டு குழு போட்டு 80ம் ஆண்டு அறிக்கை கொடுத்தார்கள். நடைமுறைபடுத்துவதற்கு 13 வருடம் ஆகிவிட்டன. அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டது நடைமுறைக்கு வருவதற்கு 43 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதே போன்று 312 என்று ஒரு பிரிவு எழுதி வைத்திருக்கிறார்கள். மாவட்ட நீதிபதியும் அதற்கு மேலான பதவிகளிலும் தேர்வு செய்வதற்கு தனியாக ஒரு நீதித் துறை ஆணையம் நியமிக்க வேண்டும் அது சுதந்திரமான அமைப்பு அது தேர்ந்தெடுத்து நீதிபதிகளை நியமிக்கும் என்று அந்த சட்டப் பிரிவு கூறுகிறது. ஆனால் இன்றைக்கு வரைக்கும் அரசு இதற்கு ஒத்து கொள்ளவில்லை, நடைமுறைப்படுத்தவில்லை. எவ்வளவு நாள் ஆகிவிட்டது. 50இல் சட்டம் அமுலுக்கு வந்து இன்றைக்கு 63 ஆண்டுகள் கடந்த பின்னாலும் நீதித்துறை நியமனங்களை அவர்களே விடாமல் வைத்திருக்கிறார்கள். ஒரு மலையாள பழமொழி சொல்வார்கள் பெட்டி திருட்டு போய் விட்டால், நாயர் சொன்னாராம் கவலைப்படாதே, சாவி உன்கிட்டதானே இருக்கிறது என்று. பெட்டி தூக்கிபோனால் என்ன அதில் தானே பணம் இருக்கிறது, உடைத்து எடுக்கமாட்டார்களா, இவர் சொன்னாராம், சாவி என்னிடம் தானே இருக்கிறது என்று கிண்டலுக்காக ஒரு பழமொழி சொல்வார்கள். இவர்கள் சொல்கிறார்கள், இனி என்னமோ செய்து கொள். தீர்ப்பு சொல்வது நான் தானே பார்த்து கொள்கிறேன் என்று, நீ என்ன சட்டம் எழுதினாலும் சரி, என்ன திட்டம் கொண்டு வந்தாலும் சரி தீர்ப்பு நான் சொல்லிக் கொள்கிறேன், சாவியை அவர்கள் கையில் இன்னும் வைத்திருக்கிறார்கள். அந்த சாவியை பிடுங்குவது என்பது தான் பார்ப்பனிய அதிகாரத்தைப் பறிப்பதாகும் புரட்சியாளர் அம்பேத்கர் கூட ஒரு அழகான வார்த்தையை சொன்னார்கள். சாஸ்திரங்களின் அதிகாரங்களை அடக்கவேண்டும் என்று சொன்னார்கள்.*

*தி அத்தாரிட்டி ஆப் சாஸ்திராஸ் என்று சொல்கிறார். ஏன் என்றால் அந்த சாஸ்திரத்தின் மீதுதான் நம்மை நம்ப வைத்து பேசுவார்கள், அது எல்லாம் வேதம் சொல்லியது, கடவுள் சொல்லியது, புராணம் சொல்லியது, நம்மாள் சொல்றான், அணு கூட வேதத்தில் தான் இருக்கு என்பான். எல்லாமே வேதத்தில் தான் இருக்கு என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள், அந்த காலத்திலேயே விமானம் விட்டார்கள் என்பார்கள். அதைபோல இன்னும் சொல்லிக்கொண்டு அதை நம்முடைய அறிவார்ந்த மடையர்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். நம் மூளையில் மதத்தின் பேரால் நம்மை நம்ப வைக்கிறார்கள். பெரியார் சொல்லுவார், ஒருவன் ரயிலில் ஏறினால் இந்த இடத்தில் ஏறியபோது ஆள் இல்லை என்றால் நீட்டி படுத்துக்கொள்வான் சரி, அடுத்த ஸ்டேஷனில் அவரும் டிக்கெட் வாங்கி கொண்டுதான் ஏறுவார். இடம் கொடுக்க இவனுக்கு மனசே வராது தட்டி எழுப்பி, தூங்கற மாதிரி நடிச்சி தூக்கி கீழேபோட்டு உட்கார்ந்தால் ஒழிய உட்கார முடியாது, ஒரு ஸ்டேஷனுக்கு முன்னாலே ஏறியவனுக்கே இடம் விடுவதற்கு மனது வரவில்லையே. இந்த பார்ப்பனர்கள் 2000ம் வருடம் கால் நீட்டி படுத்து இருக்கிறார்களே விடுவார்களா? என்று. அப்போது நாம் தூக்கிப் போடுவதற்கான வேலைகளை செய்ய வேண்டும். அதில் ஒவ்வொரு துறையும், துறைதோறும், துறை தோறும், நாம் ஆழ்ந்து பார்க்க வேண்டும் ஆய்ந்து பார்க்கவேண்டும் போகிற போக்கில் நாம் கருத்தை சொல்லிவிட்டு அதை ஏற்றுக்கொண்டு போய் விடக்கூடாது என்பதை எல்லாம் சொல்வதற்கு தான் இந்த பயணம்.*

*பிஜேபியை பற்றி சொன்னார்கள் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, அப்போதுதான் மண்டல் பரிந்துரையை நிறைவேற்றவேண்டும் என்று சொல்லப்பட்ட காலம். வாஜ்பாய் வந்தார். ஜென்டில்மேன் பொலிட்டிசியன் என்று நம்மவர்களே சான்றிதழ் எல்லாம் கொடுத்து வைத்திருக்கிறோம். ஜென்டில்மேன் அவர் வந்தவுடனே என்ன செய்தார். மத்திய அரசு பணியாளர்களுக்கு ஓய்வு வயதை 58ல் இருந்து 60தாக மாற்றினார். ஏன் ரிடையர் ஆனால் தானே நீங்கள் வேலைக்கு வருவீர்கள். இன்னும் இரண்டு வருடம் எங்க ஆளே இருப்பார்கள். இப்ப நம்ம அம்மா ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தது, ஆசிரியர்கள் எல்லாம் தகுதியானவர்களாக இருக்கவேண்டும். தேர்வு எழுதி இதுலே, 60 சதவீதம் வாங்கினால்தான் ஆசிரியர், அதற்கு முன்பு ஆசிரியர் பயிற்சி முடித்திருந்தால் போதும். திருப்பி தேர்வு எழுத*

(3ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...

+ இந்தியாவில் 90 சதவீதம் பேர் முட்டாள்கள் என்று கூறியதற்காக சிலரின் மனம் புண்பட்டிருப்பதால், மன்னிப்புக் கோருகிறேன்.
**– நீதிபதி கட்ஜு**

இந்தியாவில் 10 சதவீதம் பேர் அறிவாளிகளாக இருக்கிறார்கள் என்று கூறியிருந்தால் கைதட்டி பாராட்டியிருப்பார்கள்.

+ தமிழகத்தில் 35 தீவிரவாதிகள் ஊடுருவியிருப்பதாக மணியாச்சி காவல்துறை அதிகாரிக்கு இலங்கையிலிருந்து 'மர்ம நபர்' தமிழில் பேசினார்.
**– போலீசார் எச்சரிக்கை**

தொலைபேசியில் பேசிய மர்ம நபர் யார் என்பதைக் கண்டுபிடிக்க காவல் துறை எந்த முயற்சியும் எடுக்காதது ஏன்? அந்த மர்மத்தை காவல் துறை விளக்குமா?

+ தர்மபுரியில் அதிக மதிப் பெண் பெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்க திருமண மண்டபத்தில் நடக்கவிருந்த விழாவுக்கு 144 தடை உத்தரவை காரணம் காட்டி, காவல் துறை அனுமதி மறுத்து, மாணவ மாணவிகளை வெளியேற்றியது.
**– செய்தி**

திருமண மண்டபங்களில் திருமணங்களாவது நடத்தலாமா?

+ பெரம்பலூர், புதுச்சேரியில் சத்துணவில் பல்லி விழுந்ததால் மாணவர்கள் மயக்கம். **– செய்தி**

இப்படி அடிக்கடி சத்துணவில் வந்து விழும் பல்லிகளுக்கு கடுந்தண்டனை வழங்கும் பிரிவுகளை உணவு பாதுகாப்புச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். அப்போதுதான் இந்த பல்லிகள் கொட்டம் அடங்கும்!

+ நாடாளுமன்றம் ஒரே நாளில் 3 முறை ஒத்தி வைப்பு. **– செய்தி**

பேசாமல், மழைக்காலக் கூட்டத் தொடர் என்பதை 'ஒத்தி வைப்புக் கூட்டத் தொடர்' என்று பெயரை மாற்றி விடுங்கள்!

+ இலங்கையில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வலியுறுத்தி தமிழகம் முழுதும் பா.ஜ.க. போராட்டம்.
**– பா.ஜ.க. தலைவர் பொன் இராதாகிருஷ்ணன்**

இந்த சர்வதேசப் பிரச்சினையில் அகில இந்திய கட்சியான நீங்கள், ஏன் தமிழகத்தில் மட்டும் போராட வேண்டும்? மோடி வழியாக இந்தப் பிரச்சினையை இந்தியா முழுதும் கொண்டு செல்ல முடியாதா?

+ இலங்கை நட்பு நாடா? பகை நாடா? தி.மு.க. – காங்கிரஸ் மோதல்.
**– செய்தி**

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இந்தியா தமிழர்களின் பகை நாடு என்பது மட்டும் உறுதி!

+ நாங்கள் நடத்தும் அயோத்தி யாத்திரை ஆன்மிக யாத்திரை; அரசியல் யாத்திரையல்ல. இதற்கு தடை விதித்ததைக் கண்டித்து, நாடு முழுதும் தலைநகரங்களில் போராட்டம் நடத்தப்படும்.
**– விசுவ இந்து பரிஷத் தலைவர் தொக்கடியா**

இந்தத் தலைநகர்ப் போராட்டம் ஆன்மிகமா? அரசியலா? அல்லது ஆன்மிக அரசியலா? அரசியல் ஆன்மிகமா? ஏதாவது புரியும்படி பேசுங்க 'ஜி'!

# ஆசிரியர் தேர்வில் தமிழக அரசின் அநீதி!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வேண்டும் என்ற நிலை இல்லை. இப்போது தேர்வு எழுதி அதில் 60ம் வாங்கவேண்டும் என்ற நிலை. சமூக நீதிக்கு நாம்தான் வழிகாட்டியவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். தமிழ்நாடு தான் வழி காட்டி அகில இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட வர்களுக்கு இட ஒதுக்கீடு 8.3 விழுக்காடு என்று வந்தது 1943இல், தமிழ்நாட்டிற்கு இடஒதுக்கீடு 1921லே வந்துவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடம் 14 என்று மாற்றப்பட்டது. 1947இல் ஆனால் மற்ற மாநிலங்களில் 12.5 இடம் தான் கேட்டுக் கொண்டு இருந்தார்கள் அவங்க கோரிக்கை 12.5தான் இப்படி பல முன்னேற்றங்களை பல சாதனைகளை செய்தது தமிழ்நாடு. ஆனால் இந்த நாட்டில் தான் இட ஒதுக்கீடு எல்லாம் கிடையாது தகுதி அடிப் படையில் மட்டும் தான் 60 மார்க் 150 மதிப் பெண்ணுக்கு 90 வாங்கினால்தான் நீ ஆசிரியராக முடியும். அதனால் தான் தோற்று போனவர்கள் எல்லாம் அதில் வெற்றி பெற முடியாதவர்கள் எல்லாம் தனியார் பள்ளியில் வேலையில் சேர்ந்து 1185 மார்க் வாங்கி கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 60 மார்க் வாங்கிகொண்டு போனவர்கள் எல்லாம், சராசரியாக அரசு பள்ளிகளில் முதல் மதிப்பெண் வாங்கியது, 1140 தான், தனியார் பள்ளிகளில் 1180 சராசரி முதல் மதிப்பு, தகுதியில்லை என்று நீ சொல்லி தோற்றுப் போன வர்கள்தான். அங்கபோய் படிக்க வைத்திருக் கிறார்கள் தனியார் பள்ளிகளில்.

அரசு பணி என்பது நினைவில் இருந்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சட்ட புத்தகத்தை பார்க்கலாம், பக்கத்து சீட்டில் கேட்கலாம், அதிகாரிகளிடம் கேட்கலாம், எழுதி கேட்கலாம், இரண்டு மணி நேரத்தில் செய்யவேண்டிய அவசியம் இல்லை, 7 நாட்களில் கூட செய்யலாம், 10 நாட்களில் கூட செய்யலாம், காசு வரவில்லை என்றால் அடுத்த மாசம் கூட தள்ளிவைக்கலாம், அந்த அரசு பணிக்கு போவதற்கு நினைவில் இருந்து தேர்வு எழுதுவதை ஏன் தகுதியாக வைக்கிறார்கள் என்றுதான் நாம் கேட்கிறோம். அரசு பணிக்கு என்ன தகுதி வேண்டும். அவனுக்கு அந்த மக்களை உணர்ந்து, அந்த மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ளவேண்டும். அது இருந்தால்போதும். இல்லை. நாங்கள் அடிக்கடி சொல்வதுண்டு பெரியார் அடிக்கடி சொல்லுவார், காவல்துறைக்கு என்னையா வேண்டும் தகுதி, உடல் வலு மட்டும் இருந்தால் போதாது, உள்ளத்தில் துணிவு வேண்டும், ஒரு திருடனை பிடிக்கவேண்டும் என்றால் துணிச்சலும் இருக்கவேண்டும், உடலில் வலுவும் இருக்கவேண்டும். அது தானே வேண்டும். அதற்கு கல்வியில் வந்து அதிக மதிப்பெண் வாங்கியிருக்கவேண்டும் என்கிற அவசியம் எல்லாம் இல்லை. திருடன் ஓடுகிறபோது நான் பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி பர்ஸ்ட் கிளாஸ் சொன்னா நிக்க மாட்டான் என்பார் பெரியார். நீ துரத்திப் பிடிக்க ஓடுவதற்கு உனக்கு சக்தி இருக்கவேண்டும். பிடிச்சா உதைச்சா, திருப்பி அடிப்பதற்கு தைரியம் வேண்டும். பிடிப்பதற்கு தைரியம் வேண்டுமே தவிர பி.எஸ்-சி., கெமிஸ்ட்ரி பர்ஸ்ட் கிளாஸ் என்று சொன்னால் திருடன் நிக்கமாட்டான் என்று பெரியார் சொல்வார். வேலைக்கு என்னவேண்டுமோ அந்த தகுதியை விட்டுவிட்டு நீ 60மதிப்பெண் வாங்க வேண்டும் 90 மதிப்பெண் வாங்க வேண்டும் என் பதும், பக்கத்து மாநிலத்தில் ஆந்திராவில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு 50, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 40, மாற்று திறனாளிகளுக்கு 40 மதிப்பெண்கள் என்று வைத்திருக்கிறார்கள். சில வளராத வடக்கு மாநிலங் களில் கூட 60, 55, 50 என்று வைத்திருக்கிறார்கள். எப்படி அர்ச்சகர் வழக்கை இழுத்துப் போடுவதை போலத் தான் ஆசிரியர் தேர்விலும் நடந்து கொள் கிறார்கள், ஏன் என்றால் தகுதியில் வந்தவர்களை வேண்டுமானால் போடு, பொதுப் போட்டி இடங் களிலே போடு அவர்களை எல்லாம்.

திறந்த போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களாக போடு அது இல்லை, தேர்ச்சி அடைந்தாலும் நீ பிற்படுத்தப்பட்டோர் இடத்திலேதான் இருப்பாய், தாழ்த்தப்பட்டோர் இடத்தில்தான் நீ நியமிக்கப் படுவாய், அப்ப என்ன அர்த்தம், 69 போக மீதி 31 பெரிய ஜாதி என்று சொல்லிக்கொள்பவர்கள் மட்டும் அந்த இடம் என்று சொல்லி இவர்களாக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இத்தனை சதியும் அதில் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். புரியவிடாமல் நம்மை கட்சி என்றும், கட்சி ஆதரவு, ஜாதி ஆதரவு என்று ஏதோ நம்மை கொண்டு போகிறது. இதை எல்லாம் நாம் மீண்டும் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்பதும், ஒவ்வொரு துறையிலும் பார்ப்பனரின் சூழ்ச்சியில் இருந்து நம்மை விடுவித்துக்கொண்டு, நமக்கான உரிமைப் பெறுவதில் நாம் முன்னேற வேண்டும் என்பதும் இந்த பயணத்தின் நோக்கமாக நாம் எடுத்திருக் கிறோம்.

எல்லா செய்திகளையும் பேசிவிட முடியாது என்றாலும்கூட சுட்டிகாட்டுவதற்கே சில செய்தி களை மட்டும் உங்களிடத்திலே வைத்திருக்கிறோம். நாம் இன்னும் ஏமாந்து விடக்கூடாது, நமக்காக அற்புதமான தலைவர் பெரியார் நமக்கு கிடைத்தார். துறைதோறும் நமக்கு அதைபற்றி பேசியிருக்கிறார். எல்லா துறைகளிலும் நம்முடைய உரிமையை பற்றி அவர் பேராடியிருக்கிறார். வழி காட்டியிருக்கிறார். நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் சொன்னதை யாவது தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டாமா, அவர்களால் வளர்ச்சியடைந்தவர்கள் அதை பற்றி சிந்திக்க வேண்டாமா, புரட்சியாளர் அம்பேட்கர் கடைசி நாட்களில் சொன்னார், நான் எனது சமூகத்து மக்கள் கல்வி பெற்று அரசு பணிகளுக்கு வந்து விட்டால் சமூகத்தைப் பார்த்துக்கொள்வார்கள் என்று நினைத்தேன். அவர்கள் தங்கள் வயிற்றை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வெம்பிப் போனார் இறுதி நாட்களில். அப்படியே தமிழர் களாகிய நாமும் இருந்துவிடக்கூடாது நாம் அறிவு பெற்று, நாம் புரிந்துகொண்டதை நம்முடைய உணர்வுகளை நம்முடைய எழுச்சியை நம்முடைய புரிதலை சமூக மேம்பாட்டிற்கு, சமூக மக்களுடைய மேம்பாட்டிற்கு உரிமை வாழ்விற்கு உதவவேண்டும் பார்ப்பன சூழ்ச்சியை முறியடிப்பதற்கு பயன்படுத்த வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

**செய்தி: மன்னை. இரா.காளிதாசு**

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

படுத்தினார். மூடநம்பிக்கையை பரப்பி வந்த நிர்மலா தேவி, மற்றும் ஆன்மிகப் போர்வையில் வலம் வந்த நரேந்திர மகராஜ் போன்றவர்களுடன் நேருக்கு நேர் மோதி அம்பலப்படுத்தினார்.

மூடநம்பிக்கையை மட்டுமல்லாது, ஜாதி ஒடுக்குமுறைக்கு எதிராகவும் பெண்கள் உரிமை களுக்கும் அவர் போராடினார். அகமதாபாத் நகரில் ஷானி ஷிங்னப்பூர் கோயிலில் பெண்கள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. 2000 ஆம் ஆண்டில் பெண்கள் கோயில் நுழைவுக்காக பெருமளவில் மக்களைத் திரட்டிப் போராடினார். பா.ஜ.க., சிவசேனா போன்ற மதவெறி சக்திகள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, பெண்கள் கோயில் நுழைவுக்கு உரிமையைப் பெற்றார். அவர் நடத்திய பத்திரிகை யாளர்கள் சந்திப்பில் கலகம் செய்வதையே மத வெறி பிற்போக்கு சக்திகள் வழக்கமாகக் கொண் டிருந்தன.

சுட்டுக் கொல்லப்படுவதற்கு முதல் நாள் 'சகியாத்ரி' என்ற தொலைக்காட்சியில் நடந்த விவாதத்தில் 'ஜாதி பஞ்சாயத்துகளை' தடை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார். ஜாதிக்கு வெளியே காதல் திருமணம் செய்ய விரும்பிய ஒரு பெண்ணை, அந்தத் தந்தையே கொலை செய்துவிடவேண்டும் என்று ஜாதி பஞ்சாயத்து உத்தரவிட கும்கர்க்கார் என்ற அந்த தந்தையே நாசிக்கில் மகளை கொலை செய்து விட்டான். இதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட விவாதத்தில் பேசிய தபோல்கர், ஜாதி மறுப்புத் திருமணத்தை ஆதரித்ததோடு, ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு ஆதரவாக தாம் அண்மையில் நடத்திய மாநாடு குறித்தும் கருத்துகளைப் பதிவு செய்தார்.

அவரது 'சமிதி'க்கு மகாராஷ்டிரா, கோவா மற்றும் கருநாடகத்தில் 200 கிளைகள் செயல் பட்டுக் கொண்டிருந்தன. சோஷலிச தலைவர் டாக்டர் பாபா ஆதவ் தலைமையையேற்று நடத்திய 'ஒரு கிராமம்; ஒரு கிணறு' என்ற இயக்கத்தில் பங்கேற்றது முதல் அவரது பொது வாழ்க்கைத் தொடர்ந்தது. 'சாதனா' என்ற இதழையும் அவர் நடத்தினார். மக்களை பகுத்தறிவாளர்களாக்க எவரும் செய்ய முன் வராத தொண்டை செய்து, அதற்காக உயிரை அர்ப்பணித்த பகுத்தறிவுப் போராளிக்கு கழகம் வீரவணக்கம் செய்கிறது.

DATE OF PUBLICATION 28.08.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

அக்கம்–பக்கம்

# ஒரு காதல் திரைக்கதை

காதல் உணர்வுகளை ஊட்டி ஊட்டி, திரைப்படங்களை எடுத்த இயக்குனரின் 'குடும்ப காதல் காவியம்' அண்மையில் தமிழகத்தில் மக்கள் மன்றத்தில் நடித்துக் காட்டப்பட்டது. விறுவிறுப்புகள், சோகம், காதல் உணர்வு, திடீர் திருப்பம் என்று அத்தனை அம்சங்களோடும் இதற்கான திரைக்கதை உருவாக்கப் பட்டுள்ளது.

முதல் காட்சி இயக்குனரின் பேட்டியோடு தொடங்குகிறது. இது ஒரு வித்தியாசமான பேட்டி. பேட்டி தரும் இயக்குனர் பேச மாட்டார். ஒலி பெருக்கி முன் குமுறி குமுறி அழுது கொண்டே இருப்பார். பத்திரிகை யாளர்கள் கண்களில் கண்ணீரை துடைத்துக் கொண்டே கேள்வி கேட்பார்கள்.

**இயக்குநர் :** அய்யோ, என் மகள் ஒருவனை காதலிக்கிறாள். அந்தக் காதலன் நல்லவனே அல்ல.

**பத்திரிகையாளர் :** அப்படியா?

**இயக்குனர் :** ஆமாம்! ஆமாம். அந்த காதலன் குடும்பமே மோசடிக் குடும்பம். காதலித்து ஏமாற்றும் குடும்பம்!

**பத்திரிகையாளர் :** அதற்கு ஆதாரங்கள் உண்டா?

**இயக்குனர் :** இனிமேல் தான் சேகரிக்கப் போகிறேன்.

**பத்திரிகையாளர் :** இது உங்கள் மகளுக்குத் தெரியாதா?

**இயக்குனர் :** அவள் ஒன்றுமறியாதப் பெண்; ஏமாந்து விட்டாள். என்ன செய்வேன், அய்யகோ என்ன செய்வேன்.

*(காட்சி முடிகிறது; அடுத்தக் காட்சி)*

**பத்திரிகையாளர், பெண்ணிடம் கேள்வி:** நீங்கள் காதலிக்கும் நபர் நல்லவர் இல்லையா?

**பெண் :** அப்படி எல்லாம் இல்லை. எனது அப்பாதான் நல்லவர் இல்லை. எனது காதலரை அடியாள் வைத்து தாக்க திட்டமிட்டார்.

**பத்திரிகையாளர் :** இப்போது நீங்கள் யாருடன் போகப் போகிறீர்கள்?

**மகள் :** நிச்சயமாக என் காதலுடன் தான்!

*(காட்சி முடிகிறது; அடுத்த காட்சி - நீதிமன்றம்)*

**இயக்குனர் :** நீதிபதி அவர்களே, எனது மகள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்.

**நீதிபதி :** ஆமாம், ஆமாம்! பார்த்தாலே தெரிகிறது. சரி, ஒரு பொதுவான இடத்தில் தங்க வைக்கலாம். காதலன் தரப்பினரும் உங்கள் தரப்பினரும் பெண்ணிடம் பேச அனுமதி உண்டு.

*(காட்சி முடிகிறது; அடுத்த காட்சி ஆசிரியர் வீடு)*

ஆசிரியர் வீட்டில் இயக்குனர் பட்டாளம் - நடிகர் கூட்டம், கதா நாயகர்கள் என பெண்ணைச் சூழ்ந்து நிற்கிறது. மலையாள மாந்திரிகர்கள் யாகம் நடக்கிறது. காதலர் தரப்பினர் வீட்டுக்குள் வர அனுமதி மறுக்கப்படுகிறது. தனக்கு தரப்படும் அழுத்தத்தை தாங்கவே முடியவில்லை என்று பெண் காதலரிடம் அலைபேசியில் கதறுகிறார்.

*(காட்சி முடிகிறது; மீண்டும் நீதிமன்றக் காட்சி)*

நடிகர்கள், இயக்குனர்கள், திரைப்பட ஸ்டண்ட் நடிகர்கள் என்று பெரும் கூட்டம் நீதிமன்றத்துக்குள் அலைமோதுகிறது. ஸ்டண்ட் நடிகர்கள் மனித சங்கிலி போல இயக்குனரையும் அவரது ஆதரவாளர்களையும் சுற்றி வளைத்து நிற்கிறார்கள். எந்த நேரத்தில் எது நடக்குமோ என்ற பதட்டம்; நீதிபதி வருகிறார்.

**நீதிபதி பெண்ணிடம் கேட்கிறார் :** என்ன முடிவு செய்திருக்கிறாய்?

**பெண் :** நான் இப்போது அப்பாவுடன் போகிறேன்.

**நீதிபதி :** அப்படியானால் போகலாம். போன முறை காதலனோடு போவேன் என்று கூறியபோது உனது மனநிலை சரியில்லை. அதைப் பார்க்கும்போதே தெரிந்து கொண்டேன். இப்போது உன் மனநிலை தெளிவாகி விட்டது. இதுவும் பார்த்த உடனே தெரிகிறது!

- இயக்குனர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆரவாரம்; மகிழ்ச்சி; இனிப்புகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஆனாலும் திரைக்கதையில் உப்புசப்பில்லையே! உணர்ச்சி வேண்டுமே! என்ன 'கிளைமேக்ஸ்' வைக்கலாம் என்று இயக்குனர் சிந்திக்க, உடனே பளிச்சிடுகிறது 'அய்டியா'!

நீதிமன்ற வளாகத்துக்குள் குழுமியிருந்த பத்திரிகையாளர்களை சற்று விலகச் சொல்கிறார்; அப்படியே மண்ணில் விழுந்து வணங்குகிறார். இயக்குனர் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தோடுகிறது.

முதல் காட்சியில் வடித்த கண்ணீர்; இறுதி காட்சியிலும் கண்ணீரோடு முடிகிறது. பார்வையாளர்கள் உள்ளம் கசிந்துருகுகிறது. ஆகா குடும்பப் பாசம் என்றால் இது தான். 'என்ன புதுமையான காதல் கதை' என்று பாராட்டுகள் குவிகின்றன.

முடிவில் கீழ்க்கண்ட கருத்துகள் செய்தியாக எழுத்து வடிவில் போடப்படுகிறது.

"இது எனக்குக் கிடைத்த வெற்றியல்ல; தமிழ்நாட்டின் ஒவ்வொரு பெற்றோருக்கும் கிடைத்த வெற்றி, நீதி வென்றது."

*காட்சி முடிகிறது.*

பார்வையாளர்கள் எழுந்து செல்கிறார்கள். இத் திரைப் படத்திற்கு 'சென்சார்' அனுமதி எதுவும் தேவைப்படவில்லை. திரையிட்டால் தியேட்டர்களில் வெடிகுண்டு வெடிக்கும் என்று மர்ம தொலைபேசி மிரட்டல்களும் கிடையாது.

ஜாதி சங்கங்களின் ஆதரவு பெற்ற மகத்தான காதல் காவியம்!

ஆனால் இன்னும் எத்தனை நாள் இது ஓடும்?

**– கோடங்குடி மாரிமுத்து**

# ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் உயர்நீதிமன்ற நீதிபதியா?

சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளை நியமிக்க பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ள 6 பேர் அடங்கிய முதல் பட்டியலில் சமூகநீதி பின்பற்றப்படவில்லை என்று உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை இல்லை என்றாலும், பல்வேறு சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டு வருகிறது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள நீதிபதி சதாசிவம் அவர்களும், இந்தக் கருத்தை ஆதரித்துள்ளார். உயர்நீதிமன்ற நீதிபதிகளாக இன்றும் நுழையாத பல்வேறு ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் உள்ளனர்.

இந்த நிலையில், தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள 6 பேர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள சமூகத்தினருக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு, இரண்டு பேர் பார்ப்பனர்கள் இடம் பெற்றுள்ளனர். நீதிபதிகள் நியமனங்களை எதிர்த்து வழக்குகள் தொடருவதையே வழக்கமாக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனர் ஒருவரும் விசுவ இந்து பரிஷத் நடத்தும் போராட்டங்களில் பங்கேற்று வரும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் ஒருவரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்தப் பட்டியலை திரும்பப் பெற வேண்டும் என்று வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த நியாயமான சமூக நீதி கோரிக்கையை திராவிடர் விடுதலைக் கழகம் ஆதரிப்பதோடு, தலைமை நீதிபதி தனது முதல் நியமனத்தில் சமூக நீதிப் பார்வையோடு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

## தாமினி காதல் வழக்கு: நீதிமன்றம் திரண்டு வந்த கழகத் தோழர்கள்

*இயக்குனர் சேரன் மகள் தாமினி–சந்துரு காதல் இணையர்களை மிரட்டிப் பிரிக்க இயக்குனர் சேரனுக்குப் பின்னால் திரையுலகமே திரண்டு வந்தது. நீதிமன்ற வளாகத்துக்குள் குவிந்த திரைப்பட ஸ்டண்ட் நடிகர்கள் , மனித சங்கிலி போல் அணி வகுத்து நின்றனர். நீதிமன்ற வளாகத்துக்குள் பின்பற்றப்பட வேண்டிய சட்ட விதிமுறைகள் காற்றில் பறக்க விடப்பட்டன. இந்த சூழ்நிலையில் சேரன் அணியினரால் அவமானத் துக்கும் மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்ட சந்துரு குடும்பத்துக்கும், காதலர்களைப் பிரிக்கும் ஆதிக்க சக்திகளுக்கும் எதிராக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் 50 பேர் ஆகஸ்டு 21 ஆம் தேதி நீதிமன்றம் திரண்டு வந்து தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.*

'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?

ஆண்டுக்கட்டணம் ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th August 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.